# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 08 செவ்வாய்க்கிழமை (24.08.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 271


# அரசமைப்புத் திருத்தம் குறித்து ஜனாதிபதி புதிய யோசனைகள்

## எழுத்துமூலம் சமர்ப்பிக்க, ரணில், ஹக்கீம் வலியுறுத்து

கொழும்பு, ஒகஸ்ட் 24

**எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஐவர் அடங்கிய எம்.பிக்கள் குழுவினர் நேற்று ஜனாதிபதியைச் சந்தித்து அரசமைப்புத் திருத்தம் தொடர்பாகப் பேச்சு நடத்தினர். அப்பொழுது ஜனாதிபதி அரசமைப்புத் தொடர்பான சில புதிய யோசனைகளை முன்வைத்தார்.**

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட எம்.பி.லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று 'உதயனுக்குத் தெரிவித்தவை வருமாறு:-

அரசமைப்புத் திருத்தம் தெர்டர்பாகக் கலந்தாலோசிப்பதற்கு ஜனாதிபதி எம்மை அழைத்திருந்தார். எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நானும் திஸ்ஸ அத்தநாயக்க, ரவூப் ஹக்கீம், ஜோஸப் மைக்கல் பெரேரா ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டோம்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## கிளர்ச்சிக்கு தூபமிடும் செயல்களில் ஜே.வி.பி.

### அமைச்சர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக. 24

ஜே.வி.பி. 1971 - 1988 காலப் பகுதிக்குச் செல்வது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது. அரசு ஒருபோதும் இதற்கு இடமளிக்கப் போவதில்லை - இப்படி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குற்றஞ்சாட்டினார்.

ஸ்ரீல.சு.கட்சியின் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் கூறினார்.

ஜே.வி.பி. அரசுக்கு எதிராக மக்களை கிளர்ச்சி செய்யத் தூண்டும் வகையில் சமீபகாலமாகச் செயற்பட்டு வருகின்றது. இச்செயலுக்கு ஒருபோதும் அரசு இடமளிக்கப் போவதில்லை. - இப்படி அவர் தெரிவித்தார். (அ-சி)

## பஸில் தலைமையிலான குழு இன்று இந்தியா புறப்பாடு

### அரசியல், பொருளாதார விடயங்கள் ஆராயப்படும்

கொழும்பு, ஒக. 24

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பொருளாதார அரசியல் ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையிலான தூதுக்குழு மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இன்று புதுடில்லிக்குப் புறப்பட்டுச் செல்கின்றது.

ஸ்ரீல. சு. கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற ஸ்ரீல.சு.கட்சி செய்தியாளர் மாநாட்டில் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இத்தகவலைத் தெரிவித்தார்.

இன்று புதுடில்லி புறப்படும் குழுவில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீர

(23ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சி எம்.பி. பிணையில் விடுதலை

கொழும்பு, ஒக. 24

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான பாலித்த தெவரப்பெரும பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2009ஆம் ஆண்டு செப்ரெம்பர்

(24ஆம் பக்கம் பார்க்க)

## சிகிரியாக் குன்றை நேற்று பார்வையிட்டார் ஜனாதிபதி

கொழும்பு, ஒக. 24

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, புகழ்பெற்ற சிகிரியா ஓவியங்களை நேற்றுச் சென்று பார்வையிட்டார். அத்துடன் சிகிரியாக் குன்றில் ஏற்படும் நிறமாற்றம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஜனாதிபதி கேட்டறிந்தார். என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, சிகிரியா ஓவியங்கள்

(24ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணத் தனியான ஆணைக்குழு

### முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, ஒக. 24

முஸ்லிம்களின் 20வருடகாலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத் தனியானதோர் ஆணைக்குழுவை அமைக்குமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

முஸ்லிம் ஆர்வலர்கள், அரசில் இணைந்துள்ள முஸ்லிம் அமைச்சர்கள் உள்ளிட்ட அனைவரும் ஒன்றிணைந்து இந்தக் கோரிக்கையை ஜனாதிபதியிடம் முன்வைக்க வேண்டும் என்றும் அக்கட்சி கூறியுள்ளது.

இது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமும் எம்.பியுமான எம்.ரி.ஹஸன் அலி நேற்று 'உதயனுக்குத்

(23ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. கரடியனாறு முருகன் ஆலய திருவிழாவுக்கு பொலிஸார் தடை

### அரியநேத்திரன் எம்.பி. பிரதமருக்குக் கடிதம்

கொழும்பு, ஒக. 24

மட்டக்களப்பு கரடியனாறில் அமைந்துள்ள முருகன் ஆலயத்தில் எதிர்வரும் 03.09.2010ஆம் திகதி தொடக்கம் திருவிழா நடத்துவதற்கு ஆலய நிர்வாகத்தினர் ஏற்பாடுகளைச் செய்துள்ள நிலையில் பொலிஸார், தொல்பொருள் ஆராய்சியாளர்களின் அறிவுறுத்தலைக் காரணம் காட்டி இத்திருவிழாவை நடாத்துவதற்குக் தடை விதித்துள்ளனர்.

இது தொடர்பாக ஆலய நிர்வாகத்தினர் தன்னிடம் முறையிட்டுள்ளதாகவும் இதனால் இது விடயமாக தான் அரச அதிபர் மற்றும் பொலிஸ் அத்தியட்சகருடன் பேசியும் பலன் கிடைக்காததால் மத விவகார அமைச்சரான பிரதமருக்கு அவசர கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளதாக பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு: (24ஆம் பக்கம் பார்க்க)


GATEWAY

CENTRE FOR INFORMATION TECHNOLOGY

மற்றும்

ICDL e-Citizen

சர்வதேசத் தராதரமுடைய பரீட்சைகளின்

அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை நிலையம்

இன்று முதல் நெல்லியடியிலும்......

LUKSHMEE Educational Services

Luksmee Theatre Lane, Nelliady.

021 226 2395

gatewaynelliady@sltnet.lk


## வடமராட்சி கிழக்கில் மீள்குடியேற்றம்; பலாலியில் விசேட கலந்துரையாடல்

### யாழ். இராணுவத்தளபதி - அரச அதிபர் ஆராய்வர்

யாழ்ப்பாணம், ஒக. 24

வடமராட்சி கிழக்கு மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக விரிவாக ஆராய்வதற்கான விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பலாலி பாதுகாப்பு படைத் தலைமை அலுவலகத்தில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவுக்கும் அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமாருக்கும் இடையிலேயே இக்கலந்துரையாடல் இடம்பெற உள்ளது.

வடமராட்சி கிழக்கில் மக்களை எந்த ஒழுங்கில் மீள்குடியேற்றம் செய்வது மற்றும் அவர்களின் அடிப்படை, உடனடித் தேவைகளை எவ்வாறு நிறைவேற்றுவது என்பது தொடர்பாக இக்கலந்துரையாடலில் ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க அண்மையில் குருநகர் கடற்கரை வீதி

(24ஆம் பக்கம் பார்க்க)

### அபிவிருத்திப் பணிகள் குறித்து ஆராய

## பஸில் தலைமையிலான குழுவினர் செப். 3 இல் யாழ்ப்பாணம் விஜயம்

யாழ்ப்பாணம், ஒக. 24

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் அடுத்த மாதம் 3ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர்.

யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் சம்பந்தமாக இக்குழுவினர் கலந்துரையாடவுள்ளனர். இக்கலந்துரையாடல் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

அரசாங்க அதிபர், மாவட்ட செயலக

(24ஆம் பக்கம் பார்க்க)




உள்ளூர் நிகழ்வுகளை உலகறியச்செய்வோம்!

நல்லைக் கந்தனின்

உற்சவக் காலத் திருக்காட்சிகள்

தினமும் உங்கள் உதயனின்

வலைத் தளத்திலும்....

www.uthayan.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழப் போர் நிறுத்தம் குறித்த தகவலை நான் வைகோவுக்குச் சொல்லவில்லை

## கே.பியின் தகவலை மறுக்கிறார் கம்.யூ மகேந்திரன்

சென்னை, ஓக. 24

''இந்திய அரசு, இலங்கையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த முயற்சி செய்வது குறித்து நான் வைகோவுக்கு எந்தத் தகவலையும் சொல்லவில்லை. எனக்கு விடுதலைப் புலிகளுடனோ அல்லது அதன் அரசியல் பிரிவு தலைவர் பா.நடேசனுடனோ ஒரு தொடர்பும் கிடையாது. ஒருபோதும் எனக்கு புலிகள் அமைப்புடன் தொடர்பு இருந்ததில்லை.

விடுதலைப்புலிகள் அமைப்பின் முக்கிய தலைவர் பத்மநாதன் (கே.பி.) அளித்த பேட்டி ஒன்றில், இலங்கையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த இந்தியா விரும்பியது என்றும் இத்தகவல் என் மூலமாக வைகோவுக்கு தெரியப்படுத்தப்பட்டது என்றும் கூறியிருந்தார் என வெளியாகிய செய்தியை நான் முற்றாக மறுக்கிறேன்.

- இவ்வாறு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர் மகேந்திரன் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் படைகளிடம் சிக்கி சிறைப் படுத்தப்பட்டுள்ள கே.பி. என்கின்ற குமரன் பத்மநாதன் பல்வேறு தகவல்களை படிப்படியாக வெளியிட்டு வருகிறார். அவர் சமீபத்தில் அளித்த பேட்டியில், ''ஈழத்தில் நடந்த நான்காவது போர் உச்சத்தில் இருந்தபோது அதை நிறுத்த நான் கடுமையாக முயற்சித்தேன்.

தமிழகத்தில் உள்ள சிலர் மூலமாக மத்திய அரசை வலியுறுத்தி போர் நிறுத்தத்திற்கு உடன்பட வைத்தேன். இதையடுத்து மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த இலங்கை அரசை வலியுறுத்தவிருந்தார். இதுதொடர்பான முயற்சிகள் நடைபெற்ற நிலையில், இதன் மூலம் தி.மு.கவுக்குப் பெயர் போய் விடக் கூடுமே என்ற காரணத்தால் இதைத் தடுத்து நிறுத்த முடிவு செய்த வைகோ, பா.நடேசனைத் தொடர்பு கொண்டு நீங்கள் ஆயுதங்களைக் கீழே போட முடிவு செய்தால் நான் உள்ளிட்ட யாருடைய ஆதரவும் உங்களுக்குக் கிடைக்காது என்று கூறித் தடுத்து விட்டார். போர் நிறுத்தம் தொடர்பான நடவடிக்கைகள் அனைத்தும் மார்க்சிஸ்ட் சட்டபேரவை உறுப்பினர் மகேந்திரன் மூலமாகவே வைகோவுக்குக் கிடைத்தன'' - என்று கூறியிருந்தார்.

# இந்திய எல்லையில் நுழைந்த 2 இலங்கை மீனவர்கள் கைது

இராமநாதபுரம், ஓக. 24

இந்தியக் கடல் எல்லைக்குள் நுழைந்த இலங்கை மீனவர்கள் இரண்டு பேரை, இந்தியக் கடற்படையினர் கைதுசெய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இலங்கையைச் சேர்ந்த பெர்ணாட் குரூஸ் (வயது - 50), ஜெயந்துஸ்மந்தா (வயது - 23) ஆகிய இருவரும் கடந்த 20 ஆம் திகதி மீன் பிடிக்க நாரிழைப் படகில் கடலுக்கு சென்றனர். காற்றின் வேகம் காரணமாக திசைமாறி கச்சதீவுப் பகுதியில் இந்திய எல்லைக்குள் புகுந்துவிட்டனர்.

மேலும், படகில் எரிபொருள் இல்லாமல் நடுக்கடலில் தத்தளித்த இலங்கை மீனவர்கள் இரண்டு பேரையும், தமிழக மீனவர்கள் தங்களது படகு மூலம் மீட்டு, இந்திய கடற்படையினரிடம் ஒப்படைத்தனர். இந்தியக் கடற்படையினர் விசாரணை செய்த பின்னர் நேற்றுமுன்தினம் பகல் இராமேஸ்வரம் கோவில் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இலங்கை மீனவர்கள் திசை மாறி வந்தனரா அல்லது கடத்தலில் ஈடுபடுபவர்களா என பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

## உறுதிகள் கையளிக்கும் நிகழ்வு நாளை

தென்மராட்சி, ஓக.24

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ பகுதியில் அறவளி நிலையத்தினரின் காணியில் குடியமர்த்தப்பட்ட பயனாளிகளுக்கு நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு உறுதிகள் கையளிக்கப்படவுள்ளன.

அறவளி நிலையத்தில் நிலையத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் உறுதிகள் கையளிக்கப்படவுள்ளன.

1983ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக் கலவரத்தின்போது இடம்பெயர்ந்து கைதடி புனர்வாழ்வு நிலையத்தில் தங்கியிருந்த குடும்பங்களுக்கு அறவளியினரால் தமது காணி பகிர்ந்தளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-207)

## திரண்ட பக்தர்களுடன் விநாயகர் தேரில் பவனி

தென்மராட்சி, ஓக.24

மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய தேர்த் திருவிழாவில் பெரும் எண்ணிக்கையான அடியார்கள் கலந்து கொண்டனர்.

நேற்றுக் காலை தொடக்கம் நாலா புறங்களில் இருந்தும் காவடிகளும், பறவைக் காவடிகளும் ஆலயத்திற்கு வந்த வண்ணம் இருந்தன.

அடியார்களின் அரோகரா கோஷத்துடன் பிள்ளையார் தேரில் பவனி வந்தார். (ஒ-207)

## இந்தியாவில் 4ஆவது ஆயுள்வேத மாநாடு

யாழ்ப்பாணம், ஓக.24

இந்திய விஞ்ஞான பாரதி மற்றும் ஆயுஸ் திணைக்களம் நடத்தும் நான்காவது ஆயுள்வேத மாநாடு ''அனைவருக்கும் ஆயுள் வேதம்'' எனும் தொனிப்பொருளில் எதிர் வரும் டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாடு தொடர்பான மேலதிக விவரங்களை www.ayurworld.org எனும் இணையத்தளத்தில் அறிந்துகொள்ளமுடியும் என வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களம் அறிவித்துள்ளது. (ஒ-10)

## வன்னிக்கான ஆசிரியர் இடமாற்றம்; மீள் பரிசீலனைக்கு ஆளுநர் பணிப்பு

யாழ்ப்பாணம், ஓக.24

வன்னிக்கான ஆசிரியர்களின் இடமாற்றங்கள் அனைத்தையும் இடைநிறுத்தி இடமாற்ற சபையைக் கூட்டி, ஆசிரிய சங்கப் பிரதிநிதிகளை அழைத்து உடனடியாக மீள்பரிசீலனை செய்யுமாறு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மாகாண அமைச்சுச் செயலாளரையும் மாகாணக் கல்விப் பணிப்பாளரையும் பணித்துள்ளார்.

- இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்துள்ளார்.

ஆசிரிய இடமாற்றம் குறித்து தமிழர் ஆசிரியர் சங்கம் பல்வேறு குறைபாடுகள் குறித்து ஆளுநருக்குச் சுட்டிக்காட்டி இருந்தது.

இவ் விடயங்களைப் பரிசீலித்த ஆளுநர் இடமாற்றத்தை உடனடியாக இடைநிறுத்தி, இடமாற்ற சபையைக் கூட்டி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தை அழைத்து மீள்பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி பணித்துள்ளதாகவும் -

இவ்விடமாற்றத்தை விரும்பாத சகல சங்கத்தின் அங்கத்தவர்களையும் உடனடியாக தமது மேன்முறையீடுகளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மாவட்டச் செயலாளருக்கு ஊடாக அனுப்பி வைக்குமாறும் மகாசிவம் அறிவித்துள்ளார். (ஒ)

(முன்னர் வந்த செய்தி 5ஆம் பக்கத்தில்)

**D-Link Routers**
Building Networks for People
உங்களுக்குத் தேவையான Broadband / ADSL Routers
3 வருட உத்தரவாதத்துடன் மிகக் குறைந்த விலையில்
தொடர்புகளுக்கு: 021 222 7835 0775578822 0776 155 048
> உங்கள் இடங்களிலேயே எங்கள் சேவைகள்
> விற்பனைக்குப் பிந்திய சேவைகள்
> SriLanka Tele com ADSL இணைப்புப் பெற்றவுடன் எம்முடன் இணையுங்கள்
திருமுருகன் கொம் நெற் / Debug
Authorized Distributor in Jaffna.
259, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்
5,ஸ்ரேசன் வீதி, கிளிநொச்சி 44,மில் றோட் வவுனியா

**அனைவருக்கும் ஆங்கிலம்**
ஆங்கில அறிவின் அவசியத்தை பாடசாலையில்,பரீட்சையில், நேர்முகத்தேர்வில்,பயணிக்கும்போது இன்னும் வாழ்வின் பல சந்தர்ப்பங்களிலும் உணர்ந்திருக்கிறீர்களா?
தனிப்பட்ட/குழு வகுப்புக்கள்***
தனிப்பட்ட கவனிப்பில்,அலுப்புத்தராத சுவாரசியமான சர்வதேச கற்பித்தல் முறையில் உங்கள் நிலைக்கேற்ப ,நவீன மல்டிமீடியா மற்றும் செயன்முறைகள் மூலம் (உங்களுக்கு முன்னைய ஆங்கில வகுப்புக்களில் ஏற்பட்ட குழப்பநிலை இல்லாமல்) கற்கலாம் என்றால்.....நீங்கள் தயாரா ?
14 வயதிலிருந்து 60 வயது வரை அனைவர்க்கும்
மாணவர்கள்,தொழில் புரிவோர்க்கான வகுப்புக்கள்
City and Guilds UK Training and Certification
ESOL L1
ESOL L2
ESOL L3
New Intakes :05/09/2010 & 15/09/2010
Spoken English(KU/C&G)
IELTS Prep
City & Guilds Approved Centre
WWW.KUGROUP.INFO
இலவச நேரடி கலந்துரையாடலும் நெறிப்படுத்தலும் தற்போது வழங்கப்படுகிறது சந்திக்கும் நேர ஒதிக்கீட்டுக்கு அழையுங்கள்.
0777302882/0213208342
Knowledge Universe
Malaysian College of Business and ICT
இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.(லாவா வைத்தியசாலை மேல்மாடி)

**வீடு/அலுவலகம் தேவை**
அலுவலகப் பாவனைக்காக சிறிய வீடு/ அலுவலக இடம் வாடகைக்கு உடனடியாகத் தேவை. யாழ்.நகர எல்லைக்குள், பிரதான வீதிகளை அண்டி உள்ளது விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு:
0726993264

## மரண அறிவித்தல்

**தருமலிங்கம் விவேகானந்தன் (ஆனந்தன்)**

(பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலை ஒப்பந்தகாரரும் மந்திகை சிவசக்தி கடை உரிமையாளரும்)

அச்சுவேலி, பத்தமேனியைப் பிறப்பிடமாகவும், மாயக்கை தம்பசிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட தருமலிங்கம் விவேகானந்தன் நேற்று (23.08.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அருட்சோதிமலரின் அன்பு மனைவியும் தர்மசீலன், ரூபன், சுஜீவன் (நோர்வே), குகரூபன் (செலிங்கோ இன்சூரன்ஸ் - நெல்லியடி), ஜெயரூபன் (லண்டன்), ஜமுனா (வட இந்து மகளிர் மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (25.08.2010) புதன்கிழமை காலை நடைபெற்றுப் பூதவுடல், தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
டாக்டர் அ.செந்தில்குமரன் (மருமகன்)
மாயக்கை பிள்ளையார் கோவிலடி, தம்பசிட்டி, புலோலி.
(சி-570135)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## மீளக் குடியேற்றம்...! விடை யாரிடம்?

* கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்டது பொன்னகர். இரணைமடுச் சந்திக்குச் சமீபமாக அமைந்துள்ள இந்தக் கிராமத்தில் மக்கள் மிக நீண்ட காலமாக வாழ்ந்தனர். அவர்கள் குடியிருந்த காணிகள் அரசினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டவை. எனினும் காணிகளைப் புனரமைத்தல், கிணறு மற்றும் மலசலகூடம் அமைக்கச் சொந்தப் பணத்தையே அவர்கள் செலவிட்டனர். போரின் விளைவாக இவர்கள் இடம்பெயர்ந்தபோது நலன்புரி முகாம்களில் தங்கியிருந்தனர். அந்த மக்களை அவர் தம் சொந்த இடங்களில் மீளக்குடியேற்றுவதாகக் கூறி அரச அதிகாரிகள் அழைத்து வந்தனர்.

மாதங்கள் பல கடந்தும் அந்த மக்கள் இன்னமும் அவர்களது சொந்தக் கிராமத்தில் மீளக்குடியமர்த்தப்படவில்லை. அதுமட்டுமா? தமது சொந்தக் காணிகளையும் வீடுகளையும் சென்று பார்க்கவும் அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. அந்தோ பரிதாபம்! அவர்களைத் தமது சொந்தக் காணிகளுக்குள் காலடி எடுத்து வைக்கவும் முடியாதவாறு காவலாளிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தூரத்தில் தறப்பாள்களிலும் மரநிழல்களிலும் இருந்தவாறு தங்கள் வீடுகளையும் காணிகளையும் காட்சிப் பொருள்களைப் பார்ப்பதுபோன்று பார்க்கிறார்கள்! இவர்களைவிட இன்னும் பலர் இன்னமும் இடைத்தங்கல் முகாம்களில் காலத்தை ஓட்டுகிறார்கள்-இது முதலாவது காட்சி!

* இரண்டாவது காட்சியைப் பாருங்கள். பரவிப்பாஞ்சான் மக்களின் பரிதாபத்தைக் கேளுங்கள். போருக்குப் பின்னர் வவுனியா இடைத்தங்கல் முகாமில் தங்கியிருந்த இவர்களைச் சொந்தக் காணிகளில் மீளக்குடியமர்த்தப் போவதாகக் கூறி அதிகாரிகள் கூட்டிக்கொண்டு வந்தனர். ஆனால் கடந்த ஒன்றரை மாத காலமாக கிளிநொச்சி மத்திய கல்லூரிக் கட்டடத்தில் அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பரவிப்பாஞ்சான் பகுதி உயர்பாதுகாப்பு வலயமாக்கப்பட்டுள்ளது. அதனால் அங்கே எவரையும் குடியமர்த்த முடியாது என்று இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிக்கு மீளக்குடியேற்றுவதாகக் கூறி எங்களைக் கூட்டிக்கொண்டு வந்த அதிகாரிகள் ஏன் எங்களை அவதிப்பட வைத்திருக்கிறார்கள்? இவர்களுக்கு நாம் என்ன தீங்கு இழைத்தோம், என்று கேட்டு அந்த மக்கள் அழுகிறார்கள்!

இந்த இரண்டு கதைகளைப் போன்று பல ஆயிரம் சோகக் கதைகள் மீள்குடியேற்றம் என்ற பெயரில் அரசினால்- அதன் அதிகாரிகளால் - எழுதப்பட்டுக் கொண்டிருக்கின்றன! அவற்றையும் சேர்த்துக் கோர்த்துக் கட்டினால் வன்னி மண்ணில் மனிதநேயமும், மற்றும் மனிதாபிமானமும் எந்தளவுக்கு காலால் தூக்கி மிதிக்கப்படுகின்றன என்பது தெளிவாகிவிடும்!

இந்த வரிசையில் சாந்தபுரம், கிருஷ்ணன் கோயிலடி என்று ஊர்ப் பெயர்களின் பட்டியல் நீளும்.

ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கை மீளக் குடியமர்வு என்ற பெயரில் மேற்கண்டவாறு சீரழிக்கப்பட்டுக்கொண்டிருக்கையில், வன்னியில் இருந்து இடம்பெயர்ந்தோர் அடுத்த மாத இறுதிக்குள் மீளக் குடியமர்த்தப்பட்டு விடுவர் என்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்குப் பொறுப்பான விடயங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்திருக்கிறார்.

ஆரம்பத்தில் -

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த சுமார் மூன்று இலட்சம் தமிழ் மக்களையும் ஆறு மாதங்களில் மீளக் குடியமர்த்தி விடுவோம் என்று அரசாங்கம் அண்டப் புளுகு, ஆகாசப் புளுகு வரிசையில் அறிவித்திருந்தது.

அதற்கு இடைச் செருகலாக, போர்ப் பிரதேசத்தில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றி முடிக்காமல் அவசரப்பட்டு மக்களை மீளக் குடியேற்ற முடியாது. மீளக் குடியேற்றத்தின்போது பொதுமக்களில் ஒருவர் தானும் உயிரிழந்தால் அரசு மீதுதான் பழி சுமத்துவார்கள் என்று அரச தலைவர் ஒருமுறை தெரிவித்திருந்தார்.

கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பிரதேசங்களிலேயே, அது நடைபெற்ற வேகத்திலேயே மக்கள் மீளக் குடியேற்றமும் நடைபெறும் என்று தொடர்ந்தும் அரச தரப்பு அடிக்கடி கூறி வருகிறது.

ஆயின் மீளக்குடியேற்றத்துக்கு உகந்த பிரதேசங்களிலும், மக்களை நப்பாசை காட்டிக் கூட்டிச் சென்ற பின்னர், அவர்களது சொந்தக் காணிகளில், உடைந்த வீடுகள் அமைந்துள்ள இடங்களில் மீளக்குடியேற்றுவதில் தாமதம் காட்டப்படுவது ஏன்? மனிதநேயமோ மனிதாபிமானமோ இன்றி அவர்களின் ஆத்மாவைச் சிதைத்து வதைப்பது அரசாங்கத்துக்குத் தகுமா?

வன்னிப் பிரதேசத்தில், தனது தமிழர் விரோத நிகழ்ச்சி நிரலை பூர்த்தியாக்கும் வரை மீளக் குடியேற்றத்தை இழுத்தடிக்கும் உத்தியை அரசு கையில் எடுத்துள்ளதா? வன்னி மக்கள் இதற்கான விடையை யாரிடம் கேட்டறிவது?

# வடக்கு, கிழக்கு வைத்தியசாலைகளின் அபிவிருத்தி; சீனா 7 ஆயிரத்து 410 மில்லியன் ரூபா நிதியுதவி.

கொழும்பு, ஓக. 24

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அரச வைத்தியசாலைகளின் அபிவிருத்திக்கென சீன அரசாங்கம் 7 ஆயிரத்து 410 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இரு நாடுகளுக்குமிடையில் அண்மையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த நிதிமூலம் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள அரச வைத்தியசாலைகள் அபிவிருத்தி செய்யப்படும்.

முக்கியமாக புதிய வைத்தியசாலைக் கட்டடங்கள் அமைக்கப்படுவதோடு, சேதமடைந்த கட்டடங்கள் புனரமைக்கப்படும்.

மேலும் நவீன வைத்திய உபகரணங்கள் இந்த வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படுவதுடன் அவசர சிகிச்சைப்பிரிவு, வெளிநோயாளர் பிரிவு, சத்திரசிகிச்சைக் கூடம், மருத்துவ ஆய்வுகூட வசதிகள், தீவிர சிகிச்சைப்பிரிவு என்பனவும் அமைக்கப்படும்.

யுத்தத்தின் காரணமாக வடக்குக் கிழக்கிலுள்ள வைத்தியசாலைகள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் 30 ஆண்டு காலப் போர் காரணமாக இவற்றைப் புனரமைக்க முடியவில்லையெனவும் சுகாதார அமைச்சைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (க)

## கருவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்க சஜித் ஆதரவு

கொழும்பு, ஓக. 24

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரியவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்குமாறு அக்கட்சிக்குள் யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது என்று கட்சி வட்டாரம் தெரிவிக்கின்றது.

கரு ஜயசூரியவின் இல்லத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவே இந்த யோசனையை முன்வைத்தார் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான சஜித் பிரேமதாஸ, லக்ஷ்மன் கிரியல்ல, கபீர் காசீம் மற்றும் ஜோஸப் மைக்கல் பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

சஜித் பிரேமதாஸ தமக்குக் கட்சித் தலைவர் பதவி வேண்டாம் என்றும், கட்சியின் இரண்டாம் நிலை பதவி ஒன்றே போதும் என்றும் இக்கூட்டத்தில் கூறியிருக்கின்றார்.

அத்தோடு, ரணில் விக்கிரமசிங்க கட்சித் தலைவராகவும், கரு ஜயசூரிய எதிர்க்கட்சித் தலைவராகவும் நியமிக்கப்படவேண்டும் என்றதொரு யோசனையை சஜித் முன் வைத்திருக்கின்றார்.

இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்காகத் தொடர்ந்தும் பேச்சுகள் நடத்தப்படும் என்றும் இன்னும் பல யோசனைகள் முன்வைக்கப்படலாம் என்றும் கட்சி வட்டாரம் நேற்றுக் கூறியது. (ஓ-சி)

## தரம்-5 புலமைப் பரிசில் விடைத்தாள் கொழும்புக்கு

யாழ்ப்பாணம்,ஓக.24

ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணிக்காக நேற்றுமுன்தினம் இரவு கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.மாவட்டத்தில் சுமுகமான முறையில் நடைபெற்ற இந்தப் பரீட்சையில் மாணவர்கள் அதிக ஆர்வத்துடன் தோற்றியதாகக் கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பரீட்சை நிறைவடைந்ததும் விடைத்தாள்கள் உடனடியாக அன்றிரவு வாகனம் மூலம் கொழும்புக்குக் கொண்டுசெல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-26)

## வலி.கிழக்கில் விளைபயிர்களை நாசம் செய்யும் கால்நடைகள்

### கட்டிவளர்க்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.24

வலி.கிழக்குப் பிரதேசத்தில் தற்போது விவசாயச் செய்கை மும்முரமாக நடைபெற்று வருவதால் மக்கள் தமது கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேய்ச்சலுக்காக வளர்ப்புக் கால்நடைகளை அவிழ்த்து விடுவதால் அவை தோட்டங்களுக்குள் புகுந்து விளை பயிர்களை மேய்ந்து நாசம் செய்துவருகின்றன.

எனவே மக்கள் தமது வளர்ப்புக் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு இப்பகுதியில் உள்ள விவசாய சம்மேளனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

(த-26)

## நடுக்கடலில் ‘குமுதினி’ பழுது; கை கொடுத்தது ‘அக்குவாட்டி’!

யாழ்ப்பாணம், ஓக.24

பழுதடைந்த நிலையில் பயணிகளுடன் நடுக்கடலில் தத்தளித்த அரச படகான குமுதினியைக் கரை சேர்த்தது தனியார் படகான ‘அக்குவாட்டி’.

இதுபற்றித் தெரிய வருவதாவது:

நெடுந்தீவில் இருந்து நேற்றுத் திங்கட்கிழமை காலை 7மணிக்கு சுமார் 150 பயணிகளுடன் குறிகாட்டுவான் நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் படகான குமுதினி நடுக்கடலில் திடீரெனப் பழுதடைந்தது. கடல் கொந்தளித்துக் கொண்டிருந்ததால் பயணிகள் பயத்தினால் பெரிதும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தனர்.

இதே சமயம் மற்றும் ஒரு தொகுதி பயணிகளுடன் குறிகாட்டுவான் நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் படகான ‘அக்குவாட்டி’ நடுக்கடலில் குமுதினிப்படகு தத்தளித்துக் கொண்டிருந்ததை அவதானித்தது. உடனே குமுதினையை நோக்கித் திரும்பிச் சென்று அதனைக் கட்டி இழுத்தபடி குறிகாட்டுவான் துறைமுகத்தை சிறிது தாமதத்தின் பின் வந்தடைந்தது. பயணிகள் இதன் பின்னரே நிம்மதிப் பெருமூச்சை விட்டனர்.(க-111)

## தென்மராட்சியில் 5 கிராமங்களுக்கு மின் விநியோகம் ஆரம்பமானது

தென்மராட்சி,ஓக.24

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ‘கார்ப்’ திட்டத்தின் தென்மராட்சி பிரதேசத்தின் ஐந்து கிராமங்களுக்கென அமைக்கப்பட்ட மின்விநியோகத் திட்டம் கடந்த 20ஆம் திகதி ஆசிய அபிவிருத்தி வங்கியின் உபதலைவர் சியோவோ யு சாவோவினால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

மட்டுவில் கிழக்கு, சந்திரபுரம், கல்வயல், வெள்ளாம்போக்கட்டி, விடத்தற்பளை ஆகிய கிராமங்களுக்கு மின்விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வட மாகாண பொதுமுகாமையாளர் என். முத்துரட்ணானந்தன், உதவிப் பொது முகாமையாளர் வியனகே, பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (த-207)

## பனம் விதைகள் காரைநகரில் நடுகை

காரைநகர், ஓக.24

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இந்த வருடம் 25 ஆயிரம் பனம் விதைகள் நடுகைசெய்யப்படவுள்ளன.

பனம் விதைகள் நடுகை செய்வதற்கான இடங்கள் தற்போது தெரிவு செய்யப்பட்டு வருகின்றன. இதே வேளை, யாழ்.மாவட்ட ரீதியில் இந்த வருடம் 5 லட்சம் பனம் விதைகள் நடுகை செய்யப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(எ-250)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 09 | 25.08.2010 |
| | புதன்கிழமை |
| திதி: | : பிரதமை |
| | பி.இ.12.44 வரை |
| நட்சத்திரம் : | சதயம் |
| | பி.இ. 12.39 வரை |
| சுபநேரம் : | 04.35-06.05 வரை |
| ராகுகாலம் : | 12.05-01.35 வரை |

## தனியார் கடைகளில் விலை குறைவு; ‘கோப் சிற்றி’களில் வியாபாரம் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஓக.24

யாழ்.மாவட்டத்தில் உள்ள பலநோக்குச் கூட்டுறவுச் சங்கங்களில் திறக்கப்பட்ட பெரும்பாலான ‘கோப்சிற்றி’கள் வியாபார நடவடிக்கை இன்றி வெறிச்சோடிப் போயுள்ளதாகப் பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தக் ‘கோப்சிற்றி’களில் போதிய பொருள்கள் விற்பனைக்கு இல்லை எனவும், அங்குள்ள ஒரு சில பொருள்களும் தனியார் வியாபார நிலையங்களில் விற்பனை செய்யப்படும் விலைகளை விடக் கூடிய விலையில் விற்பனை செய்யப்படுவதாகவும் நுகர்வோர் குறைபட்டுக் கொள்கின்றனர்.

இதன் காரணமாகவே ‘கோப் சிற்றிகள்’ வியாபாரமின்றி வெறிச் சோடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிராமப்புற மக்களின் வசதிகருதி மஹிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் இந்தக் ‘கோப் சிற்றிகள்’ நிறுவப்பட்டன. இவற்றை உரிய வகையில் நடத்துவதற்கு கூட்டுறவுச் சங்கங்களின் அதிகாரிகள் வினைத் திறமைமிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லையெனக் குறை கூறப்படுகிறது.

எனினும் ஒரு சில சங்கங்களின் சிறப்பான செயற்பாடு காரணமாகச் சில ‘கோப் சிற்றிகள்’ சிறப்பாக செயற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

‘கோப் சிற்றி’களை விடத் தனியார் கடைகளில் பொருள்களின் விலைகள் குறைவாக உள்ளமையால் மக்கள் ‘கோப் சிற்றி’களை பெரிதாக நாடுவதில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - யாழ். பிரதான வீதியில் பஸ்ரியன் சந்திக்கு அண்மையில் இயங்கிவந்த கூட்டுறவுச் சங்கம் ஒன்றின் ‘கோப் சிற்றி’ கடந்த சில தினங்களுக்கு முன்னர் மூடப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வைத்தீஸ்வரன் சாரங்கன்



கீரிமலை வீதி, மாவிட்டபுரத்தினைப் பிறப்பிடமாகவும் வசந்தவில்லா, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தீஸ்வரன் சாரங்கன் (மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்,) அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாவட்டப் பதிவாளர் வைத்தீஸ்வரன் - மற்றும் புஸ்பராணி தம்பதியினரின் பாசமிகு மகனும், பிரகலாதன் (பொறியியலாளர், லண்டன்), வாமணன் (பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலச்சந் திரன், ஜெயபாலன், உமாதேவி ஆகியோரின் மருமகனும் ரோகினி, தாட்சாயிணி, சசிமளா, வாசுகி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.08.2010) புதன்கிழமை பிற்பகல் 2 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"வசந்தவில்லா",
டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.
T.P. : 0776622199, 0777033016 (102411)

தகவல் :
குடும்பத்தினர்.

## ஐயம்பிள்ளை செல்லத்துரை



வேலணை கிழக்கு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 3ஆம் வட்டாரம் வேலணை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை செல்லத்துரை நேற்று (23.08.2010) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - தெய்வானை தம்பதிகளின் அருமை மகனும் செல்லத்துரை - இராசம்மா தம்பதிகளின் அருமை மருமகனும் காலஞ்சென்ற பராசத்தியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கனகசபை, செல்லமுத்து, இராசம்மா, திலகவதி ஆகியோரின் அருமைச் சகோதரனும், வீரலட்சுமி, குருபாலன், சிவபாலன், சிவராசா (கொலண்ட்), காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் விநாயகமூர்த்தி, சிவநேசன், உதயகுமார், ஆனந் தகுமார், செல்வகுமார், ஜெயலெட்சுமி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமிர்தலிங்கம், அன்னலெட்சுமி, இந்திராணி, இரத்தினாபதி, நாகசோதி, அமுதினி, தவச்செல்வி, ராதை, ரஜனி, ஜெயச்சித்திரா, நித்தியானந்தரூபன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2010) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 3 மணியளவில் வேலணை சாட்டி மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் வட்டாரம்,
வேலணை கிழக்கு.
T.P. : 0217913259 (102412)

தகவல் :
பொன். அமிர்தலிங்கம்
(மருமகன்)


## விற்பனைக்கு

JAPAN YAMAHA MATE 80 MOTOR CYCLE
மற்றும் வீட்டுத்தளபாடங்களும் உடனடி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு :- முதலி கோயிலடி, கொக்குவில்.
T.P.: 0770367164

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ். நகரப் பகுதியில் ஆயிரத்து இருநூறு சதுர அடியில் அழகான வீடு அலுவலக மற்றும் கல்வி தொழில்சார் தேவைகளுக்குத் தகுந்த வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு : T.P.: 0775219961
0778890427

## விற்பனைக்கு

கிறைண்டிங் மில்செற் விற்பனைக்குண்டு
நிரோ பார்மஸி,
சட்டநாதர் வீதி,
T.P.: 0772208170


# மரண அறிவித்தல்

## இளையதம்பி நடராசா (நடா)

தோப்பு அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் ஹற்றனை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி - நாகம்மா தம்பதிகளின் மகன் நடராசா (நடா) 20.08.2010 அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் சோபனாவின் அன்புக் கணவரும், நிந்துஜா, ராகவி ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரன், காலஞ் சென்ற இராஜரட்ணம் மற்றும் புவனேஸ்வரி, தங்கராஜா (குணம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் திரு. திருமதி பொன்னையா தம்பதிகளின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.08.2010) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

24, கந்தையா கட்டடம்,,
ஹற்றன்.
T.P.:0718154787

தகவல் :
மனைவி,
பிள்ளைகள்.
(இ/569886)

### சாவகச்சேரி மகளிர் கல்லூரியினர் கல்விச்சுற்றுலா

சாவகச்சேரி, ஓக. 24

சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட 60 பேர் கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் தலைமையில் தென்பகுதிக்கான கல்விச்சுற்றுலா ஒன்றைக் கடந்த 21ஆம் திகதி ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் அநுராதபுரம், மிகிந்தலை, புத்தளம், உடப்பு, கொழும்பு, கதிர்காமம், நுவரெலியா, கண்டி, மாத்தளை போன்ற மாவட்டங்களின் வரலாற்று ஆன்மீக பொருளாதார இடங்களைப் பார்வையிடவுள்ளனர். (ஒ)


## நல்லூரான் உற்சவ தினங்களில் அதிரடி மலிவு விற்பனையில்...

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குளியலறை சாதனங்கள், சகல மாபிள் வகைகள் கொமட் செட் வகைகள், பைப் வகைகள், "DUKE" பெயின்ற் வகைகள், காலமீற்றி பேசன்கள் போன்றவற்றை நியாயமான மலிவான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

போக்குவரத்து வசதி இலவசம்.

ஸ்ரார் செராமிக்ஸ்
இல.05, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0215672061, 077 7578277.


# மரண அறிவித்தல்

## திருமதி முத்துக்குமாரு கற்பகம்



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி முத்துக்குமாரு கற்பகம் 22.08.2010 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பார்பதிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான இராமநாதர் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற முத்துக்குமாருவின் அருமைத் துணைவியும், பேரம்பலம், காலஞ்சென்ற கோபாலபிள்ளை மற்றும் தியாகராசா, சுப்பிரமணியம், நடராசா, குணசிங்கம், கமலாம்பிகை தில்லைநாதன் (கனடா), யோகநாதன் (UK), சண்முகநாதன்(UK), கமலநாதன்(UK), மகேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நாகம்மா (கனடா), காலஞ்சென்றவர்களான தில்லாத்தைப்பிள்ளை, கமலம்மா, சிந்தாமணி மற்றும் கந்தையா, பாலசிங்கம் (கனடா), கோபாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

29/1, றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.
தொ .பே: 0212227470 (ஏ/570122)

தகவல்:
பிள்ளைகள்,
எஸ்.கோபாலசிங்கம்
(சகோதரன்).

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அன்ரன் யோகராஜா கலிஸ்ரஸ் கஜேந்திரன் (கஜன்)

(பேராதனை பல்கலைக்கழக பொறியியல்பீட 3ஆம் வருட மாணவன்)



**எத்தனை ஆண்டுகள் சென்றாலும் - உனது நினைவுகள் எம்மைவிட்டு அகலாது**

**அன்னையின் மடியில்**
**15.09.1986**



**இறைவன் அடியில்**
**25.07.2010**

கடந்த 25.07.2010 அன்று அகாலமரணமடைந்த எமது ஏகபுதல்வன் கலிஸ்ரஸ் கஜேந்திரன் அவர்களுடைய மரணச்சடங்கில் பங்குபற்றியவர்களுக்கும், தொலைபேசி மூலம் தொடர்புகொண்டவர்களுக்கும், குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்களுக்கும், ஏனைய வழிகளில் உதவிசெய்த அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை(25.08.2010) புதன்கிழமை பாண்டியன் தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் அவருடைய ஆன்ம இளைப்பாற்றிற்காக காலை 6 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இத்திருப்பலியில் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன்அழைக்கின்றோம்.

இவருடன் மரணமடைந்த சந்துரு அவர்களின் ஆத்ம சாந்திக்காகவும் வேண்டிக்கொள்கின்றோம்.



115, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(102413)

**குடும்பத்தினர்,**
**நண்பர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப் பகுதிக்கான ஆசிரியர்கள் இடமாற்றம் மனிதாபிமான, திணைக்கள ரீதியில் முரணானது

## தீர்வு இன்றேல் போராட்டம் என்கிறார் மகாசிவம்

யாழ்ப்பாணம், ஒக.24

ஆசிரிய நியமன நிபந்தனைகளுக்கு மாறாக இடம்பெற்றுவரும் வன்னிப் பகுதிக்கான ஆசிரியர் இடமாற்றம் மனிதாபிமான ரீதியாகவும் திணைக்கள சட்ட ரீதியாகவும் முரணானதாகும்.

மூன்றாம் தவணைக்கான பாடசாலை ஆரம்பத் திகதியான அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரையான கால அவகாசத்தில் மாகாண கல்வி அமைச்சு அதற்கான தீர்வை வழங்காதவிடத்து அன்றைய தினம் ஒருநாள் அடையாள தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

இடமாற்றம் தொடர்பாக அறிவுறுத்தப்பட்ட ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்றுத் திங்கட்கிழமை கன்னாதிட்டியிலுள்ள 'சயன்ஸ் ஹோல்' கல்வி நிறுவனத்தில் இடம்பெற்றது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின் போது அவர் மேலும் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

கஷ்ட, மிகக் கஷ்ட பாடசாலைகளுக்கும் வெளிமாவட்டப் பாடசாலைகளுக்கும் ஆசிரியர் இடமாற்றம் இடம்பெற்று வருகிறது. இதன் காரணமாக பல்வேறு விதமான பிரச்சினைகளுக்கு ஆசிரியர்கள் முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

இடமாற்றத்துக்கென அமைக்கப்பட்டுள்ள இடமாற்றச் சபையுடனேயோ அல்லது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரநிதிகளுடனேயோ கலந்துரையாடி இவ்வாறான இடமாற்றங்கள் இடம்பெறவில்லை. இதனை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மாகாணக் கல்வி அமைச்சு தானே முடிவெடுத்து ஆசிரிய இடமாற்றத்தை அமுல்படுத்தி வருகிறது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தில் 98 வீதமான தமிழ் ஆசிரியர் பிரதிநிதித்துவம் உள்ளது. எனவே எமது சங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தியே இடமாற்றத்திட்டம் தயாரிக்கப்படவேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படாத இடமாற்றத் திட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும். அவ்வாறான திட்டம் குறித்து எமது சங்கம் கல்வி அமைச்சுக்கும் மாகாண கல்வி அமைச்சுக்கும் அறிவித்துத் தீர்வு காணத் தீர்மானித்துள்ளது.

அவ்வாறும் தீர்வு கிடைக்காத சந்தர்ப்பத்தில் வடமாகாண ஆளுநரை சந்தித்து அவர் ஏற்கனவே ஒரு சந்தர்ப்பத்தில் விடுத்த பணிப்புரைக்கு முரணாக இந்த இடமாற்றம் மேற்கொள்வதனை நிரூபித்து நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

அதன் முதற்கட்டமாக எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் தீர்வு கிடைக்கப் பெறாவிட்டால் ஒருநாள் அடையாளப் பணிப்புறக்கணிப்பை மேற்கொள்வோம்.

மாணவர்கள் கல்வியைப் பாதிக்காத வகையிலேயே ஒரு நாள் அடையாள பணிப்புறக்கணிப்பை கல்வித் திணைக்களத்தின் முன் மேற்கொள்ளவுள்ளோம். அத்தகைய போராட்டத்தில் இறங்குவதற்கு முன்னர் எமது ஆசிரியர்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதே எமது விருப்பம் - என்றார்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்ட செயலாளர் என். நகுலநாதன் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது. இதில் சங்க நிதிச் செயலாளர் சரா புவனேஸ்வரன், சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் பொ. அருணகிரிநாதன், வலிகாமம் செயலாளர் எஸ். தேவகுமார் ஆகியோரும் கலந்துகொண்டனர். (த-14)

## ரம்ழான் சிந்தனை

ரம்ழான் மாதத்தில் நோன்பு நோற்பவரின் முந்தைய, பிந்தைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டுவிடும். இரவுப் பொழுதுகளை விழித்திருந்து தொழுகையில் ஈடுபட்டுக் கழிப்பவர்களின் பாவங்களும் மன்னிக்கப்பட்டுவிடும். ஆயினும் ஒரேயொரு நிபந்தனைதான் உள்ளது. அவர்கள் தனது பேச்சிலும், செயலிலும் வாய்மையுடன் நடந்து, உறுதி மொழிகளை வாய்மையுடன் நிறைவேற்றட்டும். தன்னைத் தானே உணர்ந்து, சுய உணர்வு,சுய மதிப்பீடு ஆகியவற்றில் கவனம் பிசகாமல் நடக்கட்டும்.

-காதர்-




## மானிப்பாய் பொது நூலகம் வேறு இடத்துக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், ஒக.24

மானிப்பாயிலுள்ள பொதுநூலகம் தற்காலிகமாக வேறு இடத்திற்கு இடமாற்றப்படவிருக்கின்றது. இதற்கான ஒழுங்குகளை பிரதேசசபை செயலாளர் மேற்கொண்டுள்ளார்.

வலி.தென் மேற்குப் பிரதேச சபையின் காரியாலயத்திற்கு அருகில் இயங்கி வரும் பொதுநூலகம் பல வசதிகளுடன் நவீனமான முறையில் கட்டப்படவிருப்பதால் மேற்படி நூல் நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாசகர்கள் நலன்கருதி பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்வதில் செயலாளர் ஈடுபட்டுள்ளார். (த-115)

## வலி. தென்மேற்கில் வெள்ளத்தில் மூழ்கிப்போன வெங்காயப் பயிர்

சண்டிலிப்பாய்,ஒக.24

கடந்த வாரம் குடாநாட்டில் திடீரென்று பெய்த மழையினால் வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் வெங்காயச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

மானிப்பாய், கந்தரோடை, சங்குவேலி ஆகிய வயற் காணிகளில் பயிரிடப்பட்ட வெங்காயம் மழைவெள்ளம் தேங்கி நின்றதனால் சேதத்திற்குள்ளானது.

அறுவடைசெய்யப்பட வேண்டிய நிலையிலிருந்த வெங்காயம், அறுவடை செய்யப்பட்டு தென்னிலங்கைக்கு அனுப்புவதற்காக வயல் நிலங்களில் வைக்கப்பட்டிருந்த வெங்காயம் என்பன திடீரென்று பெய்த மழையினால் சேதத்திற்குள்ளாயின. இதனால் விவசாயிகளுக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த வாரம் பெய்த மழையைத் தொடர்ந்து இப்பகுதியில் உள்ள கமக்காரர் காலபோக நெற்செய்கையில் ஈடுபடுவதற்காக வயல் நிலங்களை உழுது பண்படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர். திடீரெனப் பெய்த மழை சில விவசாயிகளுக்குக் கவலையையும் சில விவசாயிகளுக்கு மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

(த-115)

# பக்தர்கள் 'அரோகரா' கோஷம் முழங்க சந்நிதி முருகன் தேரில் வலம் வந்தார்

வடமராட்சி,ஒக.24

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அரோகரா, ஆற்றங்கரையானே, அன்னதானக் கந்தனே என்ற கோஷங்கள் வானைப் பிளக்க தொண்டைமானாறு சந்நிதி முருகன் நேற்று தேரில் பவனிவந்து பக்தர்களுக்கு அருட்காட்சம் புரிந்தார்.

காலை 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்றதைத் தொடர்ந்து ஆறுமுகப் பெருமான் சுமார் 10 மணியளவில் தேர் ஏறினார். 10.30 மணிக்கு விநாயகப் பெருமானின் தேர், வேல் சுமந்த தேர் என்பன முன்னோக்கிச் செல்ல ஆறுமுகப் பெருமானின் தேர்ப்பவனி ஆரம்பமானது. சுமார் 11.45 மணியளவில் தேர் கோயில் வாசலை வந்தடைந்தது.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் வரை ஆறுமுகப் பெருமான் தேரில் இருக்க பக்தர்களின் அர்ச்சனைகள் இடம்பெற்றன.

பலநூற்றுக்கணக்கானோர் வடம் பிடித்து இழுக்க தேர் பவனியாகச் சென்ற போது தேரின் பின்னே பஜனைக் குழுவினர் பஜனைபாடிச் செல்ல, பின்னே நூற்றுக்கணக்கானோர் அங்கப்பிரதிஷ்டை செய்தனர். அங்கப்பிரதிஷ்டை செய்வோரின் பின்னாலே பெண்கள் அடி அழித்துச் சென்றனர்.


தேர்த்திருவிழாவிலே பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டார்.

பெருந்திரளான பக்தர்கள் தூக்குக் காவடி, பாற்காவடி, பறவைக்காவடி, கரகம், தீச்சட்டி, பாற்செம்பு என்பனவற்றை எடுத்து தமது நேர்த்திக் கடனை நிறைவேற்றினார்கள்.

கடந்த 30 ஆண்டு காலத்தின் பின்னர் திறக்கப்பட்ட அச்சுவேலி தொண்டைமானாறு வீதி ஊடாக பக்தர்களின் வாகனங்களும் காவடிகளும் சென்று வந்தன.

இன்று 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழா நடைபெறும். மாலை 5 மணிக்கு இடம்பெறும் மௌனத் திருவிழாவுடன் வருடாந்தத் திருவிழா நிறைவுறும்.

(த-236-253)



வரலாற்றுப் பிரசித்திபெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய தேர்திருவிழா நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

விநாயகர், வள்ளி, தெய்வயானை சகிதம் முருகப் பெருமான் தேரில் ஆரோகணிப்பதற்காக எழுந்தருளுவதை முதல் படத்திலும் விநாயகர் தேர் இழுக்கப்படுவதை இரண்டாவது படத்திலும் அதன் பின்னே ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ சந்நிதி வேலன் தேரில் ஆரோகணித்து வருவதை மூன்றாவது படத்திலும் இருப்பிடத்தைத் தேர் அடைந்த பின்னர் பச்சை சாத்தும் நிகழ்வு இடம்பெறுவதை நான்காவது படத்திலும் அடியார்கள் அங்கப் பிரதட்சணம், பறவைக்காவடி என்பவற்றின் மூலம் தமது நேர்த்திக்கடன்களை நிறை வேற்றுவதை இறுதி இரு படங்களிலும் காணலாம்.

*(படங்கள்:பா.துவாரகன், கணேசமூர்த்தி)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் அபிவிருத்திப் பாதையில்

நரைத்துப்போன நீல நிற சேர்ட்டை அணிந்திருந்த குமாரசுவாமி நாகேஸ்வரன் தனது காணியைச் சுற்றி அமைக்கப்பட்டிருக்கும் உயரமான வேலியின் பின்னர் நின்றவாறு நொந்துபோன முகத்துடன் கையசைக்கிறார்.

திருகோணமலையில் கரையோரத்திலுள்ள இவரது மூன்று ஏக்கர் விவசாய நிலத்தைச் சுற்றி வேலி அடைக்கப்பட்டிருக்கிறது.

ஐந்து ஆண்டுகளின் முன்னர் இலங்கை இராணுவத்தினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல் இந்தப் பகுதியில் உக்கிரமடைந்ததைத் தொடர்ந்து சம்பூரிலிருந்தும் அதன் அயல் கிராமங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்திருந்தார்கள்.

ஈற்றில் அவர்கள் தங்களது கிராமங்களுக்குத் திரும்பியபோது வெறும் போருக்குப் பின்னரான அபிவிருத்திக்கான திட்டங்களே அவர்களின் முன்னால் வைக்கப்பட்டிருந்ததே தவிர கிராமத்தில் எதுவும் நீர்நிலைகளைக் கடக்க வேண்டியிருக்கிறது.

ஆனால், வீதிகளைத் திருத்தித் தாரிடும் பணிகள் ஆரம்பித்துவிட்டன. அத்துடன், அதிக நேரத்தை எடுக்கும் சிரமம் நிறைந்த பாதைவழிப் பயணத்திற்கு மாற்றீடாக மிக விரைவில் பாலங்கள் நிர்மாணிக்கப்படும் எனத் தெரிகிறது.

எங்களது இந்தப் பயணத்தின்போது வீதியின் இரு மருங்கிலுமிருந்த கிராமங்கள் மற்றும் நகரங்களில் வழமையான வாழ்வு படிப்படியாகத் திரும்புவதாகத் தெரிகிறது.

சம்பூருக்கு அண்மையில் அமைந்திருக்கும் முஸ்லிம் இனத்தவர்கள் பெரும்பான்மையாக வாழும் மூதூர் பிரதேசத்திலேயே 2006ஆம் ஆண்டு மூர்க்கமான மோதல்கள் இடம்பெற்றிருந்தன.

மூதூரில் பாடசாலைக் கட்டடங்கள் உள்ளிட்ட புதிய கட்டடங்கள் தற்போது முளைத்திருக்கின்றன இருந்த கட்டங்களுக்கு மீள வர்ணம்




ராஜபக்ஷவின் தென்பகுதியைச் சேர்ந்த தீவிர ஆதரவாளர்களுக்கே சென்று சேரப் போகிறது என உள்ளூர்த் தலைவர்கள் கூறுகிறார்கள்.

தமிழர்களாக இருக்கலாம், முஸ்லிம்களாக இருக்கலாம், சிங்களவர்களாக இருக்கலாம், திருகோணமலை மாவட்டத்தில் என்றும் இது விடயம் தொடர்பாக முறையிடுவதற்கு 'இலங்கைத் தீவை ஆளும் குடும்பம் எதுவோ' அவர்களிடம் சென்று முறையிடுவதற்கான வசதியும் தங்களிடமில்லை என்கிறார்கள் இவர்கள்.

அங்கு உண்மையில் என்ன நடக்கிறது என்பதை அமைச்சர்கள் நன்கறிவார்கள். அரச அதிகாரிகள் இந்தப் பகுதிக்கு அடிக்கடி வந்து செல்கிறார்கள்.

சரத் பொன்சேகா போன்ற உண்மையான 'போர் வீரர்கள்' சிறைகளில் வாடுகின்ற அதேவேளை, விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் தலைவரும் மீள்குடியேற்றப் பிரதியமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் போன்றவர்கள் இந்த வீதியால் பயணிக்கும்போது அவர்களுக்கு மரியாதை செலுத்தும் நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டிருக்கிறோம் என மூதூர் நகர வீதியில் கடமையில் இருக்கும் படைச்சிப்பாய் ஒருவர் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

# முடக்கப்படும் சம்பூர் பிரதேசம்

மிஞ்சியிருக்கவில்லை.

இந்த ஜனவரிக்கு ஆறுமாதங்களுக்கு முன்னர் அவர்கள் திரும்பியிருந்தனர்.

- இவ்வாறு பிரிட்டனில் இருந்து வெளியாகும் 'எக்னோமிஸ்ட்' ஏடு எழுதியுள்ளது.

தொடர்ந்தும் அதில் எழுதப்பட்டிருப்பவை வருமாறு:-

போர் இடம்பெற்ற காலப்பகுதியில் சம்பூர் குடா ஊடாக விடுதலைப் புலிகள் உள்நுழைவதைத் தடுப்பதற்காக 'உயர் பாதுகாப்பு வலயமாக' மாற்றப்பட்ட பிரதேசங்களில் சம்பூரும் ஒன்று.

மே 2009இல் விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டிருந்தாலும் உயர் பாதுகாப்பு வலயங்கள் இன்னமும் அகற்றப்படாமல் இருப்பதால் அண்ணளவாக 6 ஆயிரம் பொதுமக்கள் இன்னமும் தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத நிலையில் உள்ளார்கள்.


இலங்கையும் இந்தியாவும் இணைந்து 500 மெகா வாற்ஸ் அனல் மின் நிலையத்தை அமைப்பதற்காகத் தற்போது சம்பூர் பகுதியில் சுற்றி வேலியிடப்பட்டு துப்பரவாக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பகுதியில் புதிய இறங்குதுறை ஒன்றையும், சிறப்புப் பொருளாதார வலயம் ஒன்றையும் அமைப்பதற்காகவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்தப் பிராந்தியத்தில் குறிப்பிட்ட சில கட்டுமானப் பணிகளை அரசு ஆரம்பித்திருக்கிறது.

கிண்ணியா தொடக்கம் மூதூர் வரையான குறுகிய தூரப் பயணத்தை மேற்கொள்வதில் இன்னமும் சிரமங்கள் நிலவுகின்றன. இந்தப் பயணத்தின் போது குண்டும் குழியுமாகவுள்ள வீதி வழியாகப் பயணிக்கவேண்டியிருப்பதோடு குறைந்த வலுவைக் கொண்ட வெளியிணைப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்ட பாதைகளைப் பயன்படுத்தி மூன்று இடத்தில் பூசப்பட்டிருக்கிறது. இந்த நகரம் மீண்டும் வளத்துடன் தலைதூக்குகிறது.

கிடைக்கப்பெறும் உதவித்தொகை அதிகரிக்குமிடத்து இந்த மீளெழுச்சி அதிகவே எடுக்கும்.

திருகோணமலை மாவட்டத்தின் கரையோரப் பகுதிகள் அனைத்திலும் உல்லாசப்பயணத்துறையினை மேம்படுத்தும் வகையில் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதைக் காட்டும் பிரமாண்டமான அறிவித்தல் பலகைகளை அதிகாரிகள் அமைத்திருக்கிறார்கள். நட்சத்திர விடுதிகள், உல்லாசப் பயணிகளுக்கான வலயங்கள்



என்பவை இந்த மேம்பாட்டுத் திட்டங்களில் அடங்குகின்றன.

உல்லாசப்பயணத்துறையின் மேம்பாட்டுக்கெனத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் இந்தக் காணிகள் பகிரங்க கேள்வி அறிவித்தல் ஊடாக முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் என அதிகாரிகள் கூறுகிறார்கள்.

ஆனால், இந்தக் காணிகள் இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த

வாழும் அனைத்துச் சமூகத்தவர்களும் சமமாக நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை செவிமடுப்பதற்கு அனைவரும் தவறிவிட்டனர்.

இடம்பெயர்ந்த மக்களின் நல்வாழ்வுக்கான அமைப்பின் தலைவரான நகுலேஸ்வரன் இடம்பெயர்ந்த மக்களை ஒன்றுதிரட்டும் முனைப்புகளில் ஈடுபட்டிருக்கிறார்.

உயர் பாதுகாப்பு வலையத்தை அமைப்பதற்காகக் காணிகள் சுவீகரிக்கப்பட்டவர்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்கப்பட்டிருக்கின்ற போதும் இவை பயிர்ச்செய்கைக்கு உகந்ததாக இல்லை என்றும், போதிய நீர் வசதிகள் அங்கில்லை என்றும் அவர் கூறுகிறார்.

தவிர, இடம்பெயர்ந்தோர் மத்தியிலிருக்கும் மீனவர்கள் தொழிற்செய்யும் வகையில் கடலோரமும் மாற்றீடாக வழங்கப்பட்ட பகுதியில் இல்லை என்கிறார் அவர்.

இவ்வாறாக தங்களுக்கான மாற்றுக் காணிகளைத் தெரிவுசெய்யும் விடயத்தில் பாதிக்கப்பட்டவர்களான தங்களுடன் கலந்துரையாடப்படவில்லை

இலங்கையின் ஒரேயொரு நான்கு நட்சத்திர ஜெனரலான ஜெனரல் சரத் பொன்சேகாதான் விடுதலைப் புலிகளுக்கெதிரான இறுதிப்போரைத் தலைமையேற்று நடத்தியிருந்தார்.

முன்னாள் இராணுவத் தளபதியாகவிருந்த சரத் பொன்சேகா நாட்டையும் உடனிணைந்தவர்களையும் 'காட்டிக்கொடுக்கும் வகையில் செயற்பட்டார்' எனவும், வழங்கப்பட்ட 'கட்டளைகளுக்கு அமைய' ஒழுகத் தவறிவிட்டார் என்றும், ஆதலால் இவருக்கு வழங்கப்பட்ட படை நிலைகள் பறிக்கப்படவேண்டும் என்றும் கடந்த ஓகஸ்ட் 13ஆம் திகதி இராணுவ நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. சரத் பொன்சேகாவிற்கு வழங்கப்பட்ட ஜெனரல் அந்தஸ்து நீக்கப்படுவதோடு பதக்கங்கள் பறிக்கப்படவேண்டும் என்ற இராணுவ நீதிமன்றத் தீர்ப்பிற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது அங்கீகாரத்தையும் வழங்கிவிட்டார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினது தலைமையிலான அரசுக்கு எதிராகச் செயற்படுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கெதிரான பரந்தளவிலான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றனவாகவே தெரிகிறது.

ஓகஸ்ட் 13ஆம் திகதியன்று 'ஜனநாயகத் திற்கு ஆதரவான' போராட்டத்தில் ஈடுபட்ட பொன்சேகாவின் தேசிய ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

நீண்ட பல ஆண்டுகளாகத் தொடர்ந்த போரின் பின்னர் நாடு அபிவிருத்தியை நோக்கிய பாதையில் பயணிக்கலாம். ஆனால், இலங்கையின் ஆட்சியில் ஜனநாயகப் பண்புகள் அருகிச் செல்வது மாத்திரம் உண்மை.

நன்றி:புதினப்பலகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தர்களின் தங்க நகைகளைக் குறிவைத்து பல்வேறு வேடங்களில் நடமாடும் திருடர்கள்

## 'கவரிங்' நகைகளை அணியுங்கள் என்கிறார் பொலிஸ் அதிகாரி

யாழ்ப்பாணம்,ஓக. 24

பல்வேறு வேடங்களில் நடமாடித் திரியும் திருடர்களிடம் இருந்து உங்கள் தங்க நகைகளைப் பாதுகாக்க விழிப்பாக இருங்கள் என்று பக்தர்களை எச்சரித்துள்ளார். யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா.

தற்போது நல்லூர் ஆலயத்தின் பெருந் திருவிழா நடைபெற்று வருகின்றது. இனிவரும் காலங்களில் முக்கிய திரு விழாக்கள் நடைபெறவுள்ளதால் பெருமளவான பக்தர்கள் வருவார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைத் திருடர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தங்க நகைகளைக் களவாடிச் செல்வார்கள்.

எனவே இவர்கள் தொடர்பில் மக்கள் அவதானமாக இருத்தல் வேண்டும். இவர்கள் பலவித வேடங்களிலும் நல்லூரில் வலம் வரலாம். அண்மையில் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் பெருந் திருவிழாவின் போது சாத்திரம் கூறுபவர்கள் போல் நடித்து தங்க நகைகளை அபகரித்த 12 பேரை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

எனவே ஆலயங்களுக்குச் செல்லும் பக்தர்கள் தங்க நகைகளை அணியாது 'கவரிங்' நகைகளை அணிந்து செல்வதன் மூலம் தங்க நகைகளைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

உங்களைத் துன்பத்தில் இருந்து காப்பாற்றும் வகையில் எம்மால் இயன்ற சகல நடவடிக்கைகளையும் நாம் எடுத்துள்ளோம். ஆனால் உங்களது தங்க நகைகளைப் பாதுகாக்க நீங்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் - என்றார் அவர். (த-6-16)

# இந்த மலசலகூடங்களை மக்கள் பயன்படுத்தலாம்

வடமராட்சி,ஓக.24

பருத்தித்துறை நகருக்கு வந்து செல்லும் பொது மக்கள் இயற்கைக் கடன்களைப் பூர்த்தி செய்ய முதலாம் குறுக்குத் தெருவில் உள்ள மீன்சந்தை, தும்பளை வீதியில் உள்ள பொது நூலகம் ஆகிய வற்றில் உள்ள மலசல கூடங்களைப் பயன்படுத்தலாம் என பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் அ.நடராசா தெரிவித்துள்ளார்.

நகர மத்தியில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதால் அப்பகுதியில் பொது மலசல கூடம் அமைக்க முடியாத நெருக்கடிநிலை இருந்து வருவதால் பொது மக்கள் குறிப்பிட மலசல கூடங்களைத் தேவைக்கு பயன்படுத்திக் கொள்ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-236)

# மக்கிக் குளத்தில் மண்டிக் கிடக்கும் தாமரைகளால் நுளம்புகள் பெருக்கம்!



யாழ்ப்பாணம், ஓக. 24

ஈச்சமோட்டை மக்கிக் குளத்தில் தாமரைக் கொடிகள் படர்ந்து காணப்படுவதால் இப் பகுதியில் நுளம்பின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

மேற்படி குளத்தில் தண்ணீரின் மட்டம் மிகவும் குறைந்துள்ளது.

இதனால் குளத்தை மூடி மறைத்தபடி தாமரைக் கொடிகளும், குளத்தின் கரைப் பகுதியில் புற்களும் படர்ந்துள்ளன.

இதனால் நுளம்புகள் பல்கிப் பெருகி அவற்றின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேபோன்று இப்பகுதியில் உள்ள மறவன்குளத்திலும் தாமரைகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-26)

# நெடுந்தீவு பயண சேவையில் ஈடுபட புதிய படகு கட்டும் பணிகள் ஆரம்பம்

நெடுந்தீவு, ஓக. 24

நெடுந்தீவு பயணச் சேவையில் ஈடுபடுத்துவதற்காக புதிய படகு கட்டும் பணிகள் கடந்த மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமானது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் இந்தப் படகு கட்டும் பணி ஆரம்பமாகியுள்ளது. இதற்காக 80 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது. இந்த ஆண்டின் இறுதிப் பகுதிக்குள் புதிய படகு சேவையில் ஈடுபடுமா என்பதை மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

கடந்த 4 வருடங்களுக்கும் மேலாக நெடுந்தீவுக்குப் புதிய படகு சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று கூறப்பட்ட போதிலும் எந்தவொரு புதிய படகும் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை.

பழைய படகுகளும் பாதுகாப்பான பயணத்துக்கு உத்தரவாதமில்லாத நிலையிலேயே படகுப் பயணம் தொடர்வதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (த-6-111)

# கைதடி மாணவர்கள் கல்விச் சுற்றுலா

யாழ்ப்பாணம்,ஓக.24

உலக தரிசன நிறுவனத்தின் அனுசரணையுடன் கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலய மாணவர்கள் தென்னிலங்கைக்கான கல்விச் சுற்றுலா ஒன்றை அண்மையில் மேற்கொண்டிருந்தனர்.

இச்சுற்றுலாவின்போது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்து, பௌத்த புராதன வழிபாட்டிடங்களையும் வரலாற்று ரீதியான பிரதேசங்களையும், புவியியல் ரீதியாக முக்கியம் பெற்ற பிரதேசங்களையும் மற்றும் அரசியல், விஞ்ஞான, பொருளாதார அம்சங்களை அறியக் கூடிய கல்விச் செயற்பாடுகளையும் மாணவர்கள் நேரில் பார்வையிட்டுப் பயன்பெற்றுள்ளனர் என்று அதிபர் தெரிவித்துள்ளார். (ஒ)

# வாழைப்பழம் நல்ல சூடு

கோப்பாய்,ஓக. 24

நீர்வேலி, திருநெல்வேலி வாழைக் குலை சந்தைகளில் தற்போது வாழைப் பழத்துக்கு உச்ச விலை கிடைப்பதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

தற்போது பல ஆலயங்களிலும் திரு விழாக்கள் இடம்பெறுவதாலும், விரத காலம் என்பதாலும் வாழைப்பழத்தின் தேவை அதிகரித்துள்ளது. இதனால் தற்போது சந்தைகளில் ஒரு கிலோ கதலி வாழைப்பழத்திற்கு 130 ரூபாவும் ஒரு கிலோ இதரைப் பழத்திற்கு 90 ரூபாவும் விவசாயிகளுக்கு கிடைத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் வாழைத்தோட்டங்களைத் தேடித் தென்னிலங்கை வியாபாரிகளும் வாகனங்களில் அலைவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-6-72-26)

## மகாஜனக் கல்லூரி மாணவர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம்,ஓக.24

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் மாணவர்களுக்கு தகவல் தொழில் நுட்பம் (GIT) பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடபெறவுள்ளதால் சகல உயர்தர மாணவர்களையும் சமுகமளிக்குமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். (த-6)

## ஆத்ம ஜோதி முத்தையாவின் குருபூசை தினம்

வலி.வடக்கு,ஓக.24

ஆத்ம ஜோதி முத்தையாவின் 15 ஆவது ஆண்டு குருபூசை ஏழாலையில் அமைந்துள்ள ஆத்மஜோதி தியான மணிமண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு சைவத்திரு சண்முகவடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது. (6-86)

## நல்லூரர் முருகனுக்கு இன்று மஞ்சம்

யாழ்ப்பாணம்,ஓக.24

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் 10 ஆம் திருவிழாவாகிய இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு திருமஞ்சத் திருவிழா இடம்பெறவுள்ளது.

இன்று மாலை முருகப் பெருமான் வள்ளி,தெய்வானை சமேதராக திருமஞ்சத்தில் வெளிவீதியுலா வரும் காட்சி இடம்பெறும். (த-86)

## நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் கூட்டம்

நல்லூர்,ஓக.24

நல்லூர் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்டீன் தலைமையில் நடைபெறும் என்று பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (6-111)




# கொழும்புத்துறை விநாயகர் ஆலயத்துக்கு தார் வீதி

யாழ்ப்பாணம்,ஓக.24

கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலய சுற்றாடல் பகுதிக்கு தார் வீதி புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது.

யாழ்.மாநகராட்சி மன்றத்தின் ஏற்பாட்டில் இந்த புதிய வீதியை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேர் வீதி வலம் வருவதற்கு வசதியாக இந்த புதிய தார் வீதி அமைக்கப்பட்டு வருவதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (எ-26)

# நல்லூர் திருவிழாக் கால பஸ்சேவை குறித்து பக்தர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.24

தூர இடங்களில் இருந்து நல்லூர் கந்தசுவாமி கோயில் பெருந்திருவிழாக்களில் கலந்துகொள்ளச் செல்லும் பக்தர்களுக்கான போக்குவரத்து உரிய முறையில் நடைபெறவில்லை எனக் கூறப்படுகிறது.

கடந்த காலங்களில் நல்லூர் ஆலயத் திருவிழாக்களின் போது - விசேட நாள்களில் மட்டும் மானிப்பாய் வீதியூடாகச் செல்லும் பேருந்துகள் பக்தர்களின் நலனுக்காக சுடுகாட்டாலடி, தட்டாதெரு, கந்தர் மடம் ஊடாகச் செல்வதனால் குறித்த பகுதிகளிலுள்ள பக்தர்கள் ஆலயத்துக்குச் சுலபமாகச் சென்றுவரக் கூடியதாக இருந்தது.

அது போன்று திருவிழா இடம்பெறும் அனைத்து நாள்களிலும் காலை, மாலை என இருவேளையிலும் பக்தர்கள் நல்லூருக்குச் சென்றுவரக்கூடிய வகையில் போக்குவரத்துச் சேவையை ஏற்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-314)



யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் 88 ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை முதற் படத்திலும், யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் ராஜாராம், இலங்கை தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் பந்து ரணவக்க ஆகியோர் உரை நிகழ்த்துவதை அடுத்துள்ள இருபடங்களிலும், கூட்டுறவுத் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவனொருவனுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பரிசில் வழங்குவதை நான்காவது படத்திலும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள்: ரட்ணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கிகள், நிதி நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றி பொதுமக்கள் தகவல் வழங்குவதற்கு உரிய வசதி

இலங்கை மத்திய வங்கியினால் அண்மையில் யாழ்ப்பாணம் 'கிறீன்கிராஸ்' விடுதியில் யாழ்.மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலை நடத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் டபிள்யூ.எம்.கருணாரத்தின வருகை தந்திருந்தார். யாழ்ப்பாணத்தில் தற்போது புதிது புதிதாய் முளைத்துவரும் நிதி நிறுவனங்கள், வங்கிகளின் நம்பகத்தன்மை, கடன் வழங்குவதில் பின்னடிக்கும் நிலைமை போன்ற விடயங்கள் பற்றி அவருடன் கலந்துரையாட சந்தர்ப்பம் கிடைத்தது. அதன் போது அவர் தந்த தகவல்களை இங்கு தருகிறோம். வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக பொதுமக்கள் தகவல் தருவதற்கு இனிமேல் கொழும்புக்குச் செல்லவேண்டியிருக்காது என்று கூறிய அவர், இங்குள்ள கிளையை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றார்.



## மத்திய வங்கியின் கிளைகள் தொடர்பாக பிரதி ஆளுநர் கருணாரத்ன விளக்கம்

கேள்வி: இலங்கை மத்திய வங்கியின் யாழ்ப்பாண அலுவலகம் திறக்கப்பட்டு குறிப்பிட்ட சிலகாலம்தான் ஆகின்றது. இக்காலப் பகுதிக்குள் எவ்வாறான இலக்குகளை மத்திய வங்கி அடைந்திருக்கின்றது?

பதில்: இக்குறுகிய காலத்தினுள் நாங்கள் வங்கிகளின் செயற்பாடுகளை ஒன்றிணைக்கும் நடவடிக்கைகளையும், அபிவிருத்திச் செயற்பாடுகளையுமே ஆரம்பித்திருக்கின்றோம். யாழ்ப்பாணத்தில் அல்லது வடமாகாணத்திலுள்ள ஏனைய மாவட்டங்களிலுள்ள வங்கிகளாகட்டும் எல்லாம் வெவ்வேறு வகையான செயற்றிட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன.சில வங்கிகள் தமது தனித்துவமான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன.மேலும் சில வங்கிகள் இலங்கை மத்திய வங்கியின் நிகழ்ச்சி திட்டங்களுக்கு அமைவாக செயற்பட்டு வருகின்றன. பிராந்திய அலுவலகத்தை நாங்கள் இங்கு அமைத்ததன் மூலம் இப்பிராந்தியத்தில் செயற்படுகின்ற எல்லா வங்கிகளையும் ஒன்றிணைத்துச் செயற்படுத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது.ஒருங்கிணைத்தல் என்பது மிக முக்கியமானதொன்றாகும்.

கே: அண்மைக்காலத்தில்தான் உங்கள் வங்கி இங்கு ஆரம்பிக்கப் பட்டது. உங்கள் வங்கி இங்கு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரும் வங்கிச் செயற்பாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. அப்படியானால் உங்கள் வங்கி இங்கு ஆரம்பிக்கப்பட்டதன் ஊடாக மக்கள் எவ்வாறான நன்மைகளை மேலதிகமாக பெறப்போகின்றார்கள்?

ப: இவ்வாறு ஆரம்பித்திருப்பதன் ஊடாக வங்கிகளிடமிருந்து பொதுமக்களுக்கு கிடைக்க வேண்டிய கடன்கள்,அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உதவியாக உள்ளது. இந்த வகையில் எமது திட்டங்களில் ஓர் அங்கமாகவே வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புதல், கடற்றொழில் விருத்தி சம்மந்தமாக கலந்துரையாடல்களை நடத்தியிருக்கின்றோம்.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் வேறுபட்ட தேவைகளுக்காக யாழ்பாணத்துக்கு வந்து சென்றபோது யாழ்குடாநாட்டு மக்கள் அவரிடம் இந்த மாவட்டத்தில் இலங்கை மத்திய வங்கியின் கிளையொன்றை ஆரம்பிக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தனர். ஏனெனில் சில வங்கிகள் மத்திய வங்கியின் அறிவுறுத்தலுக்கு அமைய கடன்களை வழங்குகின்றன.சில வங்கிகள் அவ்வாறு கடன் வழங்குவதில்லை.இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக பொதுமக்கள் எமக்கு தெரிவிப்பதில் பலத்த சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.அவ்வாறு தெரிவிப்பதானால் இதுவரை காலமும் கொழும்பில் வந்து முறைப்பாடு தெரிவிக்க வேண்டியிருந்தது. இதனால் பலர் முறைப்பாடும் செய்வதில்லை.

தற்போது எமது பிராந்திய அலுவலகம் இங்கு அமைந்திருப்பது எல்லோருக்கும் தெரியும்.இங்கு வந்து மக்கள் முறைப் பாடுகளை மேற்கொள்ள முடியும்.

கே: இவ்வாறு அமைந்திருப்பதனால் வங்கியாளர்களுக்கு ஏதாவது நன்மை உண்டா?

ப: யாழ் மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 60 ஆயிரம் மக்கள் இருக்கின்றார்கள். இந்த மக்களுக்கான கடன் திட்டங்களை வழங்குவதில் . வங்கிகள் பலத்த சிரமங்களை எதிர்கொண்டுள்ளன. இதற்கு மத்திய வங்கி ஒவ்வொரு வங்கிக்கும் கடன் திட்டங்களை பிரித்துக் கொடுப்பதன் மூலம் அவர்களது செயற்பாடுகளை இலகுவாக்க முடியும்.இதனை வங்கிகள் ஒழுங்காக பின்பற்றுகிறார்களா என்பதையும் நாம் நேரடியாக கண்காணித்துக் கொள்ளமுடியும்.

மேலும் இங்குள்ள வங்கி முகாமையாளர்களுக்கு மாதாந்த கூட்டங்களை நடாத்தி வருகின்றோம்.வங்கிகளினுடைய வளர்சிப் போக்குகள்,அவற்றின் நிலைகளை நேரடியாக கண்டு கொள்ளக் கூடியதாகவும் இருக்கும்.

ஒருங்கிணைந்த வங்கிச் செயற்பாடுகளை மேற்கொள்ள பிராந்திய அலுவலகம் நிச்சயமாக தேவை.

வடமாகாணத்திலிருந்து கடன்கள் பெறுவதற்காக வங்கிகளுக்கு விண்ணப்பிக்கும் பெரும்பாலானவர் களுக்கு தேசிய அடையாள அட்டை இல்லை. இது தொடர்பான முறைபாடு ஒன்று எமது ஆளுனருக்கு கிடைக்கப் பெற்றது.இது தொடர்பான நடவடிக்கையை உடனடியாகவே மேற்கொண்டார். தேசிய அடையாள அட்டையுடன் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடன் கலந்துரையாடி அவர்களின் பிரச்சினையை தீர்த்து வைத்தார்.

கே: இந்தப் பிராந்திய அலுவலகங்கள் மூலம் ஏதாவது அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றனவா?

ப: எமது அனைத்து வகையான அறிக்கைகளும் ஒவ்வொரு பிராந்திய அலுவலகம் மூலமாகத்தான் பெறப்படுகின்றன.சில அறிக்கைகள் அரசாங்கத்துக்கும் தேவையாக இருக்கின்றன.

**நேர்காணல் : டிலீப்அமுதன்**

மக்களின் வருமானம் அவர்களின் வாழ்க்கைச் செலவு,பொருளாதார வளர்ச்சி போன்ற பல்வேறுபட்ட அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.இவ்வாறு பெறப்படும் அறிக்கைகள் மூலமாகத்தான் அரசாங்கம் இப் பிரதேசங்களில் எவ்வகையான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளலாம் என்று தீர்மானிக்கப்படுகின்றது. இலங்கை அரசாங்கத்துக்கு பெரும்பான்மையான பொருளாதார திட்டங்கள் தொடர்பான ஆலோசனைகளை வழங்குவது இலங்கை மத்திய வங்கியே.

கே: யாழ்ப்பாணத்தில்தற்போது பலதரப்பட்ட வங்கிகள், நிதிநிறுவ னங்கள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் யாழ் நகரில் நிதி நிறுவனம் ஒன்று மூடப்பட்டுள்ளது. அவ்வாறு மூடப்பட்டதால் மக்களுக்கு புதிய நிதி நிறுவனங்கள் மீதாக சந்தேகம் எழுந்துள்ளது. எனவே மத்திய வங்கி,நிதி நிறுவனம்அல்லது வங்கிகள் தொடர்பாக எவ்வாறான உத்தரவாதம் கூறமுடியும்?

### பதிவு செய்த வங்கிகள்தான் கிளைகளை ஆரம்பிக்கலாம்

ப: பெரும்பான்மையான நிதிநிறுவனங்கள் எம்மிடம் பதிவு செய்துதான் உள்ளன. எம்மிடம் பதிவு செய்த நிதிநிறுவனங்களையே நாம் அவர்களின் மூலதனம், அவர்களின் நிலை என்பவற்றை ஆராய்ந்தே புதியகிளைகள் ஆரம்பிக்க அனுமதி வழங்குகின்றோம்.

3 மாதத்துக்கு ஒரு முறை தேசிய பத்திரிகைகளில் விளம்பரம் செய்கின்றோம். அதாவது எம்மிடம் இந்த வங்கிகள், நிதிநிறுவனங்கள், லீசிங்கம்பனிகள் ஆகியவைதான் அனுமதி பெற்றிருக்கின்றன என்றும் அதன் மூலம் மக்கள் தெரிந்துகொள்ள முடியும். அவ்வாறு மத்திய வங்கியின் உத்தரவாதம் அளிக்கப்பட்டவற்றின் பெயர்களையே பிரசுரிப்போம். அவற்றுக்கு ஏதாவது பாதகமான விளைவுகள் ஏற்பட்டால் மத்திய வங்கி உடனடியாக நடவடிக்கை எடுக்கும். இவ்வாறுதான் செலான் வங்கியினதும் பிரச்சினையை மத்திய வங்கி கையாண்டது. தற்போது அது வெற்றிகரமாக செயற்படுகிறது.

இதற்கு மேலதிகமாக நாங்கள் மக்களுக்கு விழிப்பூட்டும் வகையில் பயிற்சி பாசறைகளை வைத்து வருகின்றோம். ஏனைய பிராந்திய அலுவலகங்களில் இவ்வாறு வைத்து வருகின்றோம். விரைவில் இங்கும் அவ்வாறான நடவடிக்கைகளை ஆரம்பிப்போம்.

மக்கள் அவ்வாறு ஏதாவது வங்கிகளில் அல்லது நிதி நிறுவனங்களின் தவறான செயற்பாடுகளை அறிந்தால் எமக்கு உடனடியாக தகவல் தாருங்கள்.

கே: யாழ்ப்பாணத்தில் திடீரென்று போலி நாணயத்தாள்களின் புழக்கம் ஆக்கிரமித்துள்ளது. இதனை வங்கிகளில் உள்ள இயந்திரங்கள் மூலமாக இலகுவாக இனங்காண முடியும். ஆனால் சாதாரண கடைகளிலோ அல்லது பொதுமக்களோ இனங்காண முடியாது. எனவே இது தொடர்பாக மத்திய வங்கி என்னவிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கின்றது?

ப: பொலிஸார் இவ்வாறான போலி நாணயத்தாள் சம்பந்தமாக யாரையாவது கைது செய்தால் உடனடியாக நாங்கள் அவரிடம் விசாரணை நடத்தி அதை ஒழிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட முடியும். இல்லாவிட்டால் மக்களை விழிப்பூட்டும் நடவடிக்கையினையே செய்ய முடியும்.

நாங்கள் இலங்கையின் ஏனைய பகுதிகளில் இவ்வாறன பிரச்சினைகள் ஏற்படும் போது இது தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறோம். இதன் மூலம் அவர்களுக்கு எது உண்மையான நாணயத்தாள், எது போலியான நாணயத்தாள் என்பதை அவர்களால் இலகுவாக இனங்காண முடியும்.

அதன் மூலமாக மக்கள் போலி நாணயத்தாள்கள் தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாட்டை செய்வதன் ஊடாக அதனை இல்லாதொழிக்க முடியும். இதை எவ்வாறு இனங்காண்பது என்பது எல்லா மக்களாலும் இயலாத காரியம் தான். இருந்தபோதும் இயலுமானவரை மக்களுக்கு விழிப்பூட்டி அதனூடாக எம்மால் செய்யக்கூடியவற்றை செய்வோம். யாழ்ப்பாண மக்கள் படித்த மக்கள். அவர்கள் இதை இலகுவாக இனங்கண்டு கொள்வார்கள்.

எதிர்வரும் மாதம் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எமது யாழ்.பிராந்திய அலுவலகத்தில் நடைபெற உள்ளது. இதில் வங்கி முகாமையாளர்கள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சமயத் தலைவர்கள், ஊடகங்கள் ஆகியவற்றை அழைத்து இந்த விழிப்பூட்டல் கலந்துரையாடலை நடத்த உள்ளோம்.

கே: யுத்தம் முடிவடைந்த பின்னர் யாழ்ப்பாணத்தில் தற்போது புதிது புதிதாய் வங்கிகள்,நிதி நிறுவனங்கள் என்பன முளைத்திருக்கின்றன. அவை மக்களின் பணத்தை வைப்புச் செய்வதையே விரும்புகின்றனவே ஒழிய அவர்களுக்கான கடன் வசதிகள் வழங்க பின்னடிக்கின்றன. இதற்குப் பெரும்பாலும் புதிய வங்கிகள் புதிய நிதி நிறுவனங்களே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன. இதற்கு மத்திய வங்கி எவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளும்?

ப: மத்திய வங்கி அவர்களை கடன் கொடுக்குமாறு பணிக்கும் அங்கீகாரம் இலங்கைச் சட்டத்தில் இல்லை. ஆனால் அவர்கள் கடன்கொடுக்குமாறு கேட்டுக்கொள்ள முடியும். புதிய வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் தற்போது தான் முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் கால் பதிக்கின்றன. அவை இந்தப் பிரதேசத்தினை நன்றாக புரிந்து கொள்ள சிறிது காலம் தேவை. அவர்கள் இந்த இடத்தில் தம்மை வளப்படுத்திய பின்னரே இவ்வாறான் கடன் திட்டங்களை வழங்க முன் வருவார்கள். அவர்கள் இந்த மாவட்டத்தின் பொருளாதார நிலை, சூழ்நிலைகள், கலாசாரம் என்பவற்றை முதலில் நன்கு அறிய வேண்டும். அதன் பின்பு அவர்கள் மக்களுக்கு கடன் திட்டங்களை வழங்குவார்கள் என நம்புகின்றேன்.

கே: ஆனால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 'லீசிங் கம்பனிகள்' தாராளமாக 'லீசிங்' வழங்குகின்றனவே அது தொடர்பாக?

ப: அவை 'லீசிங்' வழங்குகின்ற படியால் தான் தாராளமாக வழங்குகின்றார்கள். ஏனெனில் 'லீசிங்' வழங்குவதானால் அவர்களிடம் ஒரு பிடிப்பு அதாவது வாகனமானால் வாகனப் புத்தகம் லீசிங் கம்பனியிடம் இருக்கும். அதனால் அவர்கள் 'லீசிங்' வழங்குகிறார்கள். கடனைபெற்றுவிட்டு குறித்த நபர் தப்பித்துவிட்டால் முழுப்பொறுப்பும் குறித்த வங்கியையோ நிதி நிறுவனங்களையோ சார்ந்துவிடும். அதனால்தான் அவர்கள் பயப்படுகின்றார்கள் என்று நினைக்கின்றேன்.

கே: யுத்தம் முடிவடைந்து யாழ்ப்பாணம் அபிவிருத்தியடைந்து வருகின்றது. சுற்றுலா பயணத்துறை

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அம்பாறை மாவட்டத்தில் காற்றுடன் மழை: 65 குடும்பங்கள் நிர்க்கதியான நிலையில்!

## 14 வீடுகள் முற்றாக அழிவு: 51 வீடுகள் சேதம்

அம்பாறை, ஓக. 24

அம்பாறை மாவட்டத்தின் அம்பாறை மற்றும் தமண பிரதேச செயலாளர் பிரிவுகளில் கடந்த சனிக்கிழமை வீசிய பலத்த காற்றுடன் கூடிய மழை காரணமாக 65 குடும்பங்கள் நிர்க்கதி நிலைக்குள்ளாகியுள்ளன.

பலத்த காற்று வீசியதன் காரணமாக நாமல் ஓயா பிரதேசசபைக்கு முன்னாலுள்ள சந்தைக் கட்டடத் தொகுதிக் கருகிலிருந்த பாரிய புளியமரம் ஒன்று விழுந்ததனால் கட்டடத்தொகுதி முழுமையாகச் சேதமடைந்துள்ளது. அத்துடன், அம்பாறை - இங்கினியாகல வீதியில் மரங்கள் வீழ்ந்து காணப்பட்டமையால் பிரதான வீதியில் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டிருந்தது.

இந்த அனர்த்தம் காரணமாக தமண பிரதேச செயலகப்பிரிவில் 5 வீடுகள் முழுமையாகவும், 17 வீடுகள் பகுதியாகவும் -அம்பாறை பிரதேச செயலகப்பிரிவில் 14 வீடுகள் முழுமையாகவும் 35 வீடுகள் பகுதியாகவும் - சேதமடைந்துள்ளன.

நிலைமையை நேரில் பார்வையிடச் சென்ற அம்பாறை மாவட்ட அரச அதிபர் சுனில் கன்னங்கரா பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான தற்காலிகக் கூடாரங்களையும் உலர் உணவுப்பொருள்களையும் உடனடியாக வழங்குமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார். (ளி)

## சிப்பாயின் குடும்பத்துக்கு வீடு கையளிப்பு

திருகோணமலை, ஓக. 24

கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொகான் விஜயவிக்கிம யுத்தத்தில் மரணமடைந்த இராணுவ சிப்பாய் ஒருவரின் குடும்பத்திற்கு வீடு ஒன்றை அண்மையில் கையளித்தார். திருகோணமலை மிகிந்தபுரத்தில் வசித்த சாமகே குரே என்ற இராணுவ வீரரின் குடும்பமே இவ்வீட்டைப் பெற்றுள்ளது.

திருகோணமலை 22ஆவது படைப்பிரிவு இராணுவத்தினர் இவ்வீட்டை நிதி சேகரிப்பு மூலமாக அமைத்துக்கொடுத்துள்ளனர், 11 லட்சம் பெறுமதியான வீடு ஒன்றே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது. (ளி)

## கிழக்கு கல்வித் திணைக்களத்துக்கு மேலதிக கல்விப் பணிப்பாளர்

மூதூர், ஓக. 24

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் வெற்றிடமாகவிருந்த மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு கல்குடா வலயப் பிரதிப் பணிப்பாளராக விருந்த செ.ஸ்ரீ கிருஷ்ணராஜா பதவியுயர்த்தப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக் கல்வி நிர்வாக சேவை 2-1 தரத்திலுள்ள இவர் மூதூர் கிழக்கில் சேனையூரைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ளி)

## உதவித் திட்டமிடல் பணிப்பாளரின் இடமாற்றத்தை ரத்துச் செய்யக் கோரிக்கை

அம்பாறை, ஓக.24

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய உதவித் திட்டமிடல் பணிப் பாளரின் இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் நிர்வாகப் பணிப்பாளர் யூ.கே. காலிதீன் அம்பாறை அரச அதிபரிடம் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சாய்ந்தமருதின் அபிவிருத்திக்குப் பெரிதும் பங்களிப்புச் செய்த மேற்படி உதவித் திட்டமிடல் பணிப்பாளரின் இடமாற்றம் காரணமாக சாய்ந்தமருதின் அபிவிருத்தி பெரிதும் பாதிக்கப்படும் என்றும் அவர் தமது கோரிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே இவரது இடமாற்றத்தை ரத்துச் செய்து, மீண்டும் சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்கு இவரை இடமாற்றம் செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இக் கோரிக்கையின் பிரதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ளி)




## வெளிவாரிப் பட்டதாரிகளுக்கான பரீட்சை நிலையம் திருகோணமலையில் நிறுவப்படவேண்டும்

### மாணவர்கள் கோரிக்கை

திருகோணமலை, ஓக. 24

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த வெளிவாரிப் பட்டதாரிகள், தமக்கான பரீட்சை நிலையம் ஒன்று திருகோணமலை மாவட்டத்தில் நிறுவப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கின்றனர். பேராதனை பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்பை இவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இப்பல்கலைக்கழகத்தில் தமிழ், சிங்கள, ஆங்கில மொழி மூலம் கற்கும் சுமார் 1000க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒரு வருடத்தில் இரு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

இந்த மாணவர்கள் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டே கண்டி, குருநாகல், கொழும்பு ஆகிய இடங்களில் மாதக்கணக்கில் தங்கியிருந்து பரீட்சைகளுக்குத் தோற்றுகின்றனர்.

சில தனியார் கல்வி நிலையங்களைச் சேர்ந்தவர்கள், மாணவர்களைப் பரீட்சை நிலையத்துக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி ஒருவரிடமிருந்து சுமார் 15 ஆயிரம் தொடக்கம் 20ஆயிரத்துக்கு மேற்பட்ட தொகையைப் பெறுகின்றனர். சில சமயங்களில் அவர்களே மாணவர்களை ஏமாற்றி இடைநடுவில் கைவிட்டு விடுகிறார்கள் என்றும் இவர்கள் முறையிடுகிறார்கள்.

கடந்த காலங்களில் பல மாணவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். அவர்கள் பரீட்சை நிலையங்களுக்குச் செல்லாமல் வீடு திரும்பியுள்ளனர். இது தவிர சிலர் மாணவிகளைத் திருமணம் முடித்துக்கொடுத்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

சகோதரத்துணை இல்லாதவர்கள் ஒருசிலரை நம்பிச் செல்லும் போது அவர்களே இவர்களை மோசமாக நடத்திய சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. பட்டம் பெற்றால்தான் உத்தியோகம் எடுக்க முடியும் என்ற ஆர்வத்தில் உள்ள ஏழை மாணவர்களின் நிலை மிகவும் பரிதாபகரமாகவே உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, ஏனைய மாவட்டங்களுக்கு பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டமை போன்று திருகோணமலையிலும் அமைக்கப் படவேண்டும். அதனால் இத்தகைய பிரச்சினைகளிலிருந்து விடுபட முடியும் என்றும் இவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். (ளி)

## மலையக ஆசிரியர்களிடம் கூட வாசிப்புப் பழக்கம் இல்லையே

### 'கொழுந்து' சஞ்சிகை ஆசிரியர் அந்தனி ஜீவா ஆதங்கம்

கண்டி, ஓக.24

மலையகச் சமூகத்தினரிடையே வாசிப்புப் பழக்கம் அருகி வருகின்றது. குறிப்பாக இங்குள்ள ஆசிரியர்களிடம் கூட வாசிக்கும் பழக்கம் இல்லை - என 'கொழுந்து' சஞ்சிகை ஆசிரியர் அந்தனி ஜீவா ஆதங்கம் வெளியிட்டார்.

கண்டி இந்து இளைஞர் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை 'கொழுந்து' சஞ்சிகையின் 31 ஆவது இதழ் வெளியீட்டு விழா நடைபெற்றது. இதில் உரையாற்றியபோதே அந்தனி ஜீவா இதனைத் தெரிவித்தார். நிகழ்வை கண்டி தமிழ்ச்சங்கம் ஏற்பாடு செய்திருந்தது.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மலையக இலக்கியம் இன்று மிகவும் வேதனைக்குரிய நிலையில்தான் காணப்படுகின்றது. ஒப்பீட்டளவில் ஏனைய சமூகங்களுடன் பார்க்கும்போது எமது சமூகம் வாசிப்பில் பின்னடைவிலேயே உள்ளது.

மலையகச் சமூகம் வாசிப்பது மிகக் குறைவு. சொல்லப்போனால் மலையகத்திலுள்ள ஆசிரியர்கள் கூட வாசிப்பதில்லை. வாசிப்புப் பழக்கமின்றேல் இலக்கியத்தை வளர்க்க முடியாது - எமது தமிழையும் வளர்க்க முடியாது.

இன்றைய நவீன உலகில் இணையத் தளங்கள் மூலம் வாசிப்பதற்கு நிறைய வசதிகள் உண்டு. 'நூலகம்' என்ற இணையத்தில் 265 சஞ்சிகைகள் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன. இவற்றை வாசித்துப் பயன்பெறமுடியும்.

வடக்கு, கிழக்கில் உள்ளவர்கள் நிறையவே வாசிக்கின்றார்கள். கிழக்கில் தமிழர்கள் மட்டுமல்ல முஸ்லிம்களும் வாசிப்பில் ஈடுபாடு கொண்டுள்ளனர். ஆனால் ஹற்றன் நூலகத்திலுள்ள தமிழ் நூல்களை எமது மலையகத்தவர்கள் பயன்படுத்துவதே இல்லை.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தமிழ் இலக்கிய மற்றும் கலை வளர்ச்சிக்கு நிறையச் சந்தர்ப்பங்களை உருவாக்கியது. எனினும், மலையகச் சமூகம் அவற்றைப் பயன்படுத்தவில்லை.

இந்தியர்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் சினிமா மோகத்தில் சிக்கித் தவிக்கின்றார்கள். இலங்கையர்களை எடுத்துக் கொண்டால் அரசியலில் சிக்கித் தவிக்கின்றார்கள். கலை இலக்கிய தாகமோ எங்குமே இல்லை - இப்படி அந்தனி ஜீவா தெரிவித்தார்.

சஞ்சிகையின் முதல் பிரதியை தொழிலதிபர் பி.செல்லையா பெற்றுக் கொண்டார். (ளி)




## பெரஹராவில் திறமை காட்டியவர்கள் ஜனாதிபதியால் பாராட்டிக் கௌரவிப்பு

கண்டி, ஓக.24

கண்டி, எசல பெரஹராவில் பங்குபற்றும் திறமை வாய்ந்த கலைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஜனாதிபதியால் கௌரவிக்கப்படவுள்ளனர்.

நாளை புதன்கிழமை பெரஹரா நிறைவுற்ற செய்தியை தலதாமாளிகை தியவதனே நிலமேயும், பஸ்நாயக்க நில மேக்களும் ஜனாதிபதியிடம் கையளிப்பர்.

இந்நிகழ்வு கண்டி ஜனாதிபதி மாளிகையில் நடைபெறும். இதையடுத்து நடைபெறும் பாராட்டு நிகழ்வில் சம்பந்தப்பட்ட கலைஞர்களும், மாணவர்களும் பாராட்டிக் கௌரவிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ளி)

## ஆங்காங்கே செப்பனிடப்படும் வீதிகள் மாவனல்லைப் பிரதேச மக்கள் விசனம்

மாவனல்லை, ஓக.24

கமநெகும வேலைத் திட்டத்தின் கீழ் மாவனல்லைப் பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் வீதிப் புனரமைப்புப் பணிகள் குறித்து பிரதேசவாசிகள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

சில வீதிகள் ஆங்காங்கே புனரமைக்கப்படுவது குறித்தே அவர்கள் விசனிக்கின்றனர்.

மாவனல்லை நகரிலிருந்து நயாவலை வரை செல்லும் பாதை, ஹிங்குல்ஓயா வீதி மற்றும் கிருங்கதெனிய பள்ளிவீதி ஆகிய வீதிகள் இடைக்கிடையே கொங்றீட் இடப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளன.

இது பற்றிக் கேட்டால், 'வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒதுக்கப்பட்ட நிதி போதாது' என அதிகாரிகள் கையை விரிக்கின்றனர் என்று அவர்கள் கூறுகின்றனர்.

எனவே, இது குறித்து உரிய தரப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ளி)

## கண்டியில் பெய்த அடைமழையால் பெரஹராவின் வழமைநிலை பாதிப்பு

கண்டி, ஓக.24

கண்டியில் தொடர்ந்து பெய்துவரும் அடைமழை காரணமாக பொதுமக்களுக்கு எசல பெரஹரா மற்றும் களியாட்ட நிகழ்வுகளைப் பார்வையிடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை மாலை தொடங்கிய மழை நேற்று முன்தினம் வரை நீடித்ததால் பெரஹராவின் வழமைநிலை பாதிக்கப்பட்டது.

இது தவிர மாவட்டத்தின் பல இடங்களில் மண்சரிவு அபாயமும் தோன்றியுளது. மகாவலி கங்கையில் தண்ணீர் நிறைந்து காணப்படுவதால் கரையோரங்களிலிருக்கும் மரங்கள் சரிந்து விழும் நிலையிலுள்ளன.

மரக்கறித் தோட்டங்களிலும் தண்ணீர் தேங்கி நிற்கின்றது. இதனால் உற்பத்தியாளர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தநிலை [illegible] பாரிய அனர்த்தம் [illegible] மக்கள் அஞ்சுகின்றனர். (ளி)

## பேராதனை தாவரவியல் பூங்காவில் பூத்துக் குலுங்கும் 'ஓர்கிட்' மலர்கள்

கண்டி, ஓக.24


பேராதனை தாவரவியல் பூங்காவில் உள்ள 'ஓர்கிட்' இல்லத்தில் மலர்கள் பூத்துக் குலுங்க ஆரம்பித்துள்ளன. வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை பெரிதும் கவர்ந்த இவ்வில்லத்தை நோக்கி தற்போது உள்நாட்டினரும் வர ஆரம்பித்துள்ளனர்.

ஓர்கிட் மலர்கள் தாராளமாகப் பூத்துக் கிடப்பதால் பேராதனைப் பூங்கா புதுப் பொலிவு பெற்று மேலும் அழகுடன் காட்சி தருகின்றது.

[illegible]ளுக்கு ஒரு முறைதான் இவ்வாறு ஓர்கிட் மலர்கள் பூத்துக் குலுங்[illegible] என பூங்கா அதிகாரிகள் கூறுகின்றனர். தினந்தோறும் ஆயிரக்கணக்கானோர் இந்த அரிய காட்சியைக் காண இங்கு வருகின்றனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ளி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 13 வருடங்களாகத் தகவல் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கும் 'மைக்ரோ பிசி சிஸ்ரம்'




இலங்கையில் 'மைக்றோ பிசி சிஸ்ரம்' ஆனது 13 வருட காலமாக தகவல் தொழில் நுட்பத்தில் ஈடுபட்டு மக்களுக்கான தகவல் தொழில் நுட்பம் சம்பந்தமான தேவைகளையும், சேவைகளையும் வெற்றிகரமாக வழங்கிக் கொண்டிருக்கின்றது.

மேற்படி நிறுவனம் இலங்கையில் ஆறு கிளை நிறுவனங்களைக் கொண்டும் கொழும்பு மாநகரில் தலைமை அலுவலகத்தைக் கொண்டும் இயங்கி வருகின்றது.

இந்நிறுவனம் கணனி, தகவல் தொழில் நுட்பம் சம்பந்தமான பொருள்களை நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பது முக்கிய அம்சமாகும்.

'மைக்ரோ பிசி சிஸ்ரம்' மொத்தமாக 108 உத்தியோகத்தர்கள், ஊழியர்களுடன் இயங்கிக் கொண்டிருக்கிறது. இவர்களுள் 48 பேர் விற்பனை தொடர்பாகவும் 60 வரையானவர்கள் தகவல் தொழில் நுட்பத்துடனும் வாடிக்கையாளர் சேவையுடனும் தொடர்புள்ளவர்களாக உள்ளனர்.

இந் நிறுவனம் Intex, Mipaq போன்ற தரமான கணனிப் பொருள்களை இறக்குமதி செய்து நாடுமுழுவதும் விநியோகஸ்தர் வலைப்பின்னல் (Dealer Net work) ஊடாக விற்பனை செய்துகொண்டு வாடிக்கையாளர்களுக்குத் தரமான சேவையை வழங்கிக் கொண்டிருக்கின்றது.

தற்பொழுது மைக்றோ பிசி புகழ்பெற்ற இன்னோர் அமைப்பான ஐக்கிய அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட 3M நிறுவனத்துடன் இணைந்து யாழ். மக்களுக்கும், யாழ்.அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் வலைப்பின்னல் (Net work) தொலைத் தொடர்பு (Telecommunication) என்பவற்றில் முற்று முழுதான தீர்வு ஒன்றை வழங்கும் முகமாகவும் இங்குள்ள தேவைகளையும் நிறைவு செய்யவும் முனைகின்றோம்.

3M தயாரிப்புகள் ஏறக்குறைய எண்ணாயிரம் (8000) வகைகள் உள்ளதாகக் கருதப்படுகின்றது. இவற்றுள் எங்கள் நிறுவனம் தெரிவு செய்து கொண்டது. Net work and Telecommunication Cable Solution ஆகும்.

விளம்பர வரணம்

## விண்ணப்பிக்கலாம்

காரைநகர்,ஒக.23

அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சில் அலுவலக உதவியாளர்கள், வாகனச் சாரதிகள் பதவியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் செயலாளர், அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு, சுதந்திரச் சதுக்கம் கொழும்பு-07 என்னும் முகவரிக்கு தமது விண்ணப்பப்படிவங்களை பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-250)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,
ஒக.23

யாழ்.சுண்டுக்குழி, கொய்யாத்தோட்டம், புதுவீதி ஞான செல்வ விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.20மணி தொடக்கம் 7.20 மணி வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6மணி தொடக்கம் பிற்பகல் 3மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம் பெறும்.

(204)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்டு உத்தரவாதமளிக்கப்பட்ட No.1பிறிமா புறொயிலர் கோழிக் குஞ்சுகள் 25.08.2010 அன்று விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே: 0212226944

நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையத்திலும் பதிவு செய்யலாம்.
தொ.பே: 0774656377

சூரிபடி பாம் வட்டுக்கோட்டையிலும் பதிவு செய்யலாம்.
021 321 6290

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ க.கிருஷ்ணமூர்த்தி
அவர்களின் அன்புமிகு துணைவி

### திருமதி ஜெகதீஸ்வரி கிருஷ்ணமூர்த்தி

அவர்கள் இறைபதமடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீவீரபத்திரர் ஆலயம்,
நுணாவில் மேற்கு.

ஆலய பரிபாலன சபையினர்,
அறநெறிப் பாடசாலைச் சமூகம்.

FEED.MY SHEEP-JOHN 21:17

***

WE CONGRATULATE
OUR DISTINGUISHED SON

**REV.Dr.ALBERT WILFRED JEBANESAN**

WHO IS BEING INDUCTED
TODAY ON THE 24th AUG 2010
AS THE PRESIDENT OF THE METHODIST
CONFERENCE OF SRI LANKA

JAFFNA CENTRAL COLLEGE.

**தவறிவிட்டன:** வவுனியாவில் இருந்து கொடிகாமத்திற்கு பஸ்ஸில் பயணம் செய்யும்போது வெற்றிலைக்கேணி, முள்ளியான் என்னும் முகவரியையுடைய செல்வயேந்திரன் இந்திராணி என்பவருடைய திருமணச் சான்றிதழ், அவருடையதும் அவருடைய பிள்ளைகளினதும் பிறப்புச் சான்றி தழ்கள், I.C.க்கான பொலீஸ் ரிப்போட் படம், இலங்கை வங்கி (பருத்தித்துறை), மக்கள் வங்கி (கிளிநொச்சி) ஆகிய வங்கிப் புத்தகங்கள் குடும்ப அட்டை (J/406) மற்றும் சில ஆவணங்கள் பையுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்வரும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே: 0770802162

## தேவை

கைதடியில் இயங்கும் Lanka Filling Station விற்பனை நிலையத்தை மேற்பார்வை செய்வதற்கு முகாமையாளரும் மற்றும் ஓய்வு பெற்ற கணக்காளரும், பம்பில் வேலை செய்பவர்களும் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

Lanka Filling Station, Kaithady
T.P: 0777863024
(தொலைபேசியில் மட்டும் தொடர்பு கொள்ளவும்).

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி
### சின்னத்தம்பி வள்ளிப்பிள்ளை

அன்னை மடியில்:
15.04.1928

ஆண்டவன் அடியில்:
27.07.2010

கடந்த 27.07.2010இல் காலமான எமது குடும்பத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்கள், பலவழிகளில் உதவி புரிந்தோர் மற்றும் தொலைபேசியில் தொடர்புகொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பதுடன் நாளை 25.08.2010 புதன்கிழமையன்று காலை எமதில்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சி.செல்வராசா (மகன்)
அர்ச்சனா மில், கரவெட்டி வடக்கு

அமரரின் குடும்பத்தினர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொண்டைமானாறு செல்வச்சந்நிதி

## முருகன் ஆலய தீர்த்தோற்சவ சிறப்புமலர்

## 24.08.2010



### எந்நிதியும் தருபவன் சந்நிதியான்

சந்நிதி என்றால் தொண்டைமானாறு செல்வச்சந்நிதியையே குறிக்கும். பழமையும் பெருமையும் மிக்க சந்நிதித் தலம் கந்தபுராண வரலாற்றுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகிறது. முருகப் பெருமானின் தூதுவராகச் சூரனைச் சந்திப்பதற்கெனத் திருச்செந்தூரில் இருந்து மகேந்திரபுரிக்கு வருகை தந்த வீரவாகுதேவர் இங்கு தங்கி முருகப் பெருமானை வழிபட்டார் என்று கூறப்படுகிறது. தொண்டைமானாறு வள்ளி ஆறு என்றும் கோயில் இருக்கும் இடம் கல்லடி என்றும் அழைக்கப்பட்டது. ராவக என்ற தவமுனிவர் சமாதி அடைந்த இடத்திலேயே ஆலயத்தின் தல விருட்சமாகிய பூவரசு காணப்படுகின்றது. சந்நிதியானின் பூவரச மர நிழல் ஞான பண்டிதன் நடனமாடித் திரிந்து அருள் விளையாட்டுக்களை நடத்தும் இடமாகத் திகழ்கிறது. மலை போலத் துன்பங்களைத் தாங்கி வரும் அடியவர்கள் பலர் இந்நிழலில் இருந்து சந்நிதியானின் திருவடிகளைத் தஞ்சமெனப் பற்றி தீர்வுகள் கண்ட வரலாறுகள் பல உண்டு.

முருக பக்தராகிய மருதர் கதிர்காமரை கதிர்காமத்திற்கு அழைத்துச் சென்ற முருகன் அங்கே செய்யப்படும்பூசை முறைகளைக் காட்டி அந்த வழியிலே தன்னையும் பூசிக்குமாறு பணித்தார். தமது வாயை வெள்ளைத் துணியால் கட்டி அறுபத்து நான்கு ஆலம் இலைகளில் காலையும் மாலையும் அமுது படைத்து விபூதி நிறைந்த தட்டில் கர்ப்பூரத்தை வைத்து தீபம் காட்டிப் பயபக்தியுடன் கதிர்காமர் பூசை செய்து வந்தார். கதிர்காமரின் பரம்பரையில் வந்தவர்கள் ஆசார சீலர்களாக இன்றும் அந்த மரபிலேயே பூசைகளைச் செய்து வருகிறார்கள். முருகப்பெருமானுக்கு நிவேதித்த ஆலம் இலைப் பிரசாதமும், தீர்த்தமும், திருநீறும், தலவிருட்சமாகிய பூவரசமரத்தின் பழுத்த இலையும் தீராத வினைகளையும் தீர்க்க வல்லவையாக உள்ளன. சனிக்கிழமைகளில் சுத்தமான எள்ளில் இருந்து ஊற்றப்படும் நல்லெண்ணையில்திருமுழுக்குப் பூசையும், மாலையில் பிட்டுப் பிரசாதமும் நிவேதிக்கும் வழக்கம் உண்டு.

கதிர்காமக் கொடியேற்றத்தின்போது சந்நிதி முருகன் ஆலயத்தில் இருந்து அடியார்கள் பாதயாத்திரையாக கதிர்காமம் சென்று முருகனைத் தரிசித்து வந்தார்கள். உடல் உபாதைகள் எதையும் பொருட்படுத்தாமல் முருக நாமத்தை உச்சரித்தபடியே திருவடி யாத்திரையாகக் கதிர்காமம் செல்லும் அடியவர்கள் அங்கு சென்றடைந்ததும் ஆனந்தக் களிப்பில் தம்மை மறந்து ஆடியும் பாடியும் அழுதும் தொழுதும் முருகனை வணங்குவார்கள்.

உள்நாட்டுப் போரினால் சந்நிதி ஆலயச் சூழலும் சிதைவுற்றது. கோயிலின் மூன்று திசைகளிலும் 45 அன்ன சத்திரங்களும், 36 கிணறுகளும், இரண்டு குளங்களும் இருந்தன. ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஒரே நேரத்தில் நீராடக் கூடிய முறையில் நீர் நிலைகளும், தங்கியிருந்து உணவு உண்ணக் கூடிய முறையில் அன்ன சத்திரங்களும் அமைந்திருந்தன. இது வேறு எக் கோயிலிலும் இல்லாத விசேட அம்சமாகும். சந்நிதியில் ''சோறு மணக்குதடா'' என்று தவத்திரு யோகர் சுவாமிகள் கூறியிருந்தார்.

கோயிலின் தெற்குத் திசையில் தென்னை மரச் சோலையின் நடுவே மயில்வாகன சுவாமிகள் ஆனந்தாச்சிரமத்தினை மிகச் சிறப்பாக நடத்தி வந்தார். இவரின் சீடரான மோகனதாஸ் சுவாமிகள் சந்நிதியான் ஆச்சிரமத்தினை நிறுவிச் சிறப்பாக நடத்தி வருகின்றார். அன்னதானப் பணியுடன் ஆச்சிரமத்தின் கலை பண்பாட்டுப் பேரவையால் சமய நிகழ்ச்சிகளும் ஆச்சிரமத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. ''ஞானச்சுடர்'' என்ற ஆன்மீகப் பத்திரிகையைப் பத்து வருடங்களுக்கு மேலாக வெளியிட்டு வருகிறார்கள். இன்று மீண்டும் பல அன்னதான மடங்கள் ஆலயச் சூழலில் இயங்க ஆரம்பித்துள்ளன.

கடவுள் சுவாமிகள், கௌரிபாலா என்று அழைக்கப்பட்ட ஜேர்மன் சுவாமிகள், திருப்புகழ் சுவாமிகள் எனப் பல சித்தபுருஷர்கள் சந்நிதி ஆலயச் சுழலிலே நடமாடித் திரிந்தார்கள். போர்க்காலச் சூழலினால் பாதிப்புற்ற சந்நிதி ஆலயம்புனரமைக்கப்படுவதற்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் வளர்ச்சிக்கும் அண்மையிலே சிவபதம் அடைந்த தவத்திரு முருகேசு சுவாமிகள் உறுதுணையாக இருந்து செயற்பட்டார்கள்.

பாற்காவடி, பறவைக்காவடி, ஆட்டக்காவடி, தூக்குக்காவடி எனப் பல காவடிகளை மகோற்சவ காலத்திலே ஆலய வீதிகளிலே காணலாம். அங்கப் பிரதட்சணம் செய்தும், அடி அழித்தும், கர்ப்பூரச் சட்டி எடுத்தும், காவடி கரகம் ஆடியும் அடியவர்கள் பக்தி பூர்வமாக வழிபடும் காட்சியைச் சந்நிதியிலே காணலாம்.

சந்நிதி முருகனின் அடியவர்களின் கூட்டு முயற்சியினால் இந்திய சிற்பசாரியர்களின் துணையுடன் 1984 ஆம் ஆண்டு சித்திரத் தேர் அமைக்கப்பட்டது. மூன்று வருடங்களே முருகப்பெருமான் அத்தேரிலே பவனி வந்தார். 1987ஆம் ஆண்டு சந்நிதியானின் தேர் ஈனர்களால் எரிக்கப்பட்டது. பின்னர் கட்டுத் தேரில் தொடர்ந்து பவனி வந்த முருகனுக்குக்கு புதிய சித்திரத்தேர் அமைக்கப்பட்டது. சந்நிதியானின் திருக்கோயில் வழிபாட்டுத் திருத்தலமாக மாத்திரமல்லாமல், அன்ன சத்திரமாக, உடல் நோய், உளநோய் என்பவற்றை நீக்கும் வைத்தியசாலையாக, அநாதைகள், வயோதிபர்களை ஆதரிக்கும் விடுதியாக, அங்கவீனரின் இருப்பிடமாக, தபோதனர் சாலையாக, சமய, கலாசாரப் பண்பாட்டுப் பேரவையாக திருமண மண்டபமாக, குபேர புரியாக மிளிர்கிறது.

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்.

### இரட்சிக்க வேண்டுமையா!

விண்ணவரும் மண்ணவரும் கண்ணீர் மழை சொரிய
விரைந்தோடிச் சந்நிதியில் வேற்படையாய் வந்துதித்த-
சண்முகனே
ஆனைமுகன் தம்பியாய், தந்தையின் மைந்தனாய்
ஆறுமுகமாக அம்மை அணைத் தெடுத்த- சண்முகனே
ஆறுதல் கூறியே தேறுதல் செய்யும்
அம்மை தெய்வானையுடன் அருள் சுரக்கும் வள்ளியையும்
பச்சைமயில் மீதேறி துள்ளி விளையாடி வந்து பக்தருக்கு
இச்சமயம் துணைசெய்து இரட்சிக்க வேண்டுமையா!

வே.பி.சண்முகநாதன், வேலணை.

### தீர்த்தமாடி எம் குறைகள் தீர்ப்பாய்

சந்நிதியில் வந்துதித்த முருகா - எம்
சந்நிதி காத்திடும் மால் முருகா
தேரேறித் தீயதை அழித்தாய்- இன்று
தீர்த்தமாடி எம் தீராத துயர்கள்
தீர்த்து வைக்க வாராய்
காவடியாய் கற்பூரச் சட்டியதாய் - உன்
சேவடியை வணங்கிட நாம் வந்தோம் ஐயா
அன்னதானக் கந்தனாய் அரும்பசி போக்கவும்
மன்னவனே இன்று உன்னோடு
தீர்த்தமாடிடும் எம் துயர் தீர்ப்பாய்

வேல்நந்தன், புலோலியூர்.


## அன்னதானக் கந்தனுக்கு அரோகரா....! தீர்த்தோற்சவம் சிறப்புற வாழ்த்துவோர்

**கணபதி களஞ்சியம்**
கற்பகப் பிள்ளையார்
கோயிலடி,
உரும்பிராய்.

சித்திரத்தேர் கோலம் காணப் பெற்றவரும்
உற்றவரும் மடங்களில் இடம்கேட்டு
தங்குவதை அறியாயோ
சின்னஞ்சிறு பாலகனாக நீ தேரேறி ஆடியதை
கேட்ட முதல் எந்நிலை அறியமாட்டாயோ
மாற்றம் தந்தாய் ஏற்றம் தந்தாய்
மறவாவரம் தருவாயோ
என வேண்டி நிற்பவர்கள்
**கணபதி**
வெதுப்பக,களஞ்சிய
உரிமையாளரும் ஊழியர்களும்
உரும்பிராய்.

**கிருஸ்ணா ஸ்ரோர்ஸ்**
காரைநகர் வீதி,
சங்கானை.

**சந்நிதியான் ஆச்சிரமம்**

சீனா, பர்மா, இந்தியா, பாகிஸ்தான்,
கனடா, பல்கேரியா போன்ற
நாடுகளிலிருந்து நேரடியாக
இறக்குமதி செய்யப்பட்ட உணவுப்
பொருள்களை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
**வேணி களஞ்சியம்**
165, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

**பாக்கியரத்தினம்**
கட்டடப்பொருள்கள் விற்பனை நிலையம்
163, 165, பிரதான வீதி, சங்கானை.
தொ.பே: 060 221 2713
கிளை: தரன் ரேடர்ஸ்
130, 132, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2664,
021 222 7184

**க.கு.கந்தையாபிள்ளை**
பலசரக்குமாளிகை
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**செல்வா ஹாட்வெயர்**
ஆவரங்கால்.

**நவரத்தினராசா**
குடும்பம்
குப்பிளான்.

கூல் பானங்கள், கேக் வகைகள்,
றோல், பற்றிஸ், பிஸ்கட் வகைகள்,
ஐஸ்கிறீம், சர்பத் மற்றும் சிற்றுண்டி
என்பவற்றை தரமாகப்
பெற்றுக்கொள்ள
**லிங்கன் கிறீம் கவுஸ்**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**கணன்**
போட்டோ பிரதி நிலையம்
பருத்தித்துறை.

**நியூ சந்திரா கிறீம் ஹவுஸ்**
கந்தரோடை, சுன்னாகம்.
தொ.பே: 0775008709

**ரமணன்**
கட்டப்பொருள் விற்பனை நிலையம்
525, 528, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். 021 222 9396


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



காலை நேரத்தில் கலகலப்பான அனுபவங்களை எதிர் கொள்ளலாம். செய்த வேலை ஒன்றில் ஏற்பட்ட குளறுபடியால், அதை மீண்டும் செய்யலாம். தண்டச் செலவுக ளைத் தவிர்த்து சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள். தாய்வழி அனுகூலம் பெறலாம். தொழில் ரீதியான பயணங்கள் செல்லலாம். கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும்.

### இடபம்




திட்டமிட்ட சில வேலைகளை மாற்றி அமைப்பீர்கள். வழக்கத்திற்கு மாறான வேலைப்பளுவால் வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும். சில விடயங்களில் ஒருவரை மலை போல் நம்பி அவர் கடைசி நேரத்தில் கைவிடலாம். குடும்ப உறுப்பினர்கள் கேட்ட பொருள்களை வாங்கிக் கொடுக்க முடியாமல் சாக்குப்போக்குச் சொல்லலாம்.

### மிதுனம்



தம்பதியர் இடையே ஒற்றுமை அதிகரிக்கும். தொழில், வியாபார ரீதியாக வர வேண்டிய பணவரவுகளைக் கேட்டுப் பெறலாம். கூட்டு முயற்சிகளில் வெற்றி உண்டு. சிலர் உங்களின் செயற்பாடுகளைப் பார்த்து பொறாமைப்படலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தேடி வரலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவீர்கள்.

### கடகம்



புதுமையான அனுபவங்களைச் சந்திக்கலாம். வெளியூர்களில் இருக்கும் உறவினர் ஒருவர் உங்களின் வீட்டிற்கு வரலாம். பணப் பற்றாக்குறை தீரும். கோபம், வேகத்தை மற்றவர்களிடம் வெளிக் காட்டாமல் நடந்து கொள்ள வேண்டும். உங்களின் பெருமையான செயற்பாடுகளைப் பற்றி மற்றவர்களிடம் சொல்வீர்கள். வெற்றிகரமான நாள்.

### சிங்கம்



எதிலும் அவசரம் இல்லாமல் நிதானமாகச் செயற்பட வேண்டிய நாள். கொடுக்கல் ,வாங்கல்களில் எச்சரிக்கை அவசியம். மற்றவர்கள் பிரச் சினையாக நினைக்கும் வேலை ஒன்றை நீங்கள் துணிச்சலாகச் செய் வீர்கள். நண்பர்கள், உறவினர்கள் சிலருடன் வெளியிடங்களுக்குச் செல் லலாம். சில பொருள்களை மறதியாக வைத்துவிட்டு தேட நேரிடலாம்.

### கன்னி



சில காரியங்கள் கை நழுவிப் போனாலும், அதற்காகப் பெரிய அளவில் அலட்டிக் கொள்ள மாட்டீர்கள். நண்பர்களுடன் தேவையற்ற வாக்குவாதங்கள் செய்யலாம். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் உறவினர்களை அடையாளம் கண்டு கொள்வீர்கள். நினைத்த பொருள் ஒன்றை வாங்க ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களுக்குச் அலை யலாம்.

### துலாம்



காலையில் தடைபட்ட வேலை ஒன்று மாலையில் விறுவிறுப்பாக முடியும். நண்பர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்வது நல்லது. சுய தொழில் புரிவோர் கடன் உதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் பலன் கிடைக்கும். அதிக விலைக்கு வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்குவீர்கள்.

### விருச்சிகம்



பிள்ளைகள் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். சகோதரர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். உங்களின் வேலை ஒன்றை முடிக்க மற்றொருவருக்கு பணம் கொடுப்பீர்கள். பல நாள்களாக நீங்கள் எதிர்பார்த்த நல்ல தகவல் தேடி வரலாம். நீண்ட நாள்களாகத் தள்ளி வைத்த வெளியூர் பயணங்கள் செல் லும் சூழ்நிலை உருவாகும்.

### தனுசு



சந்தோஷமான செய்திகளைக் கேட்கலாம். அலைந்து திரிந்து முடிக்க நினைத்த வேலை ஒன்று சுலபமாக முடிவுக்கு வரும். வேலையாள்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். கலைஞர்கள் எதிர்பார்த்த வாய்ப்புகள் கிடைப்பது தள்ளிப் போக லாம். வீட்டு உபயோகப் பொருள்கள், மின் சாதனங்கள் வழி யில் செலவுகள் ஏற்படலாம்.

### மகரம்



சிறிய விடயங்களுக்காக பெரிய அளவில் சிரமப்படலாம். தாய் வழி உறவுகள் மீதான பாசம் அதிகரிக்கும். தெரிந்தே சில தவறுகளைச் செய்துவிட்டு, அதற்காக சிலரிடம் வருத்தம் தெரிவிக்கலாம். இலாப, நஷ்டக் கணக்குப் பார்த்து செயற் படும் சிலர் மீது எரிச்சல் அடைவீர்கள். நன்றி மறந்த சிலரை எண்ணி வேதனைப் படுவீர்கள்.

### கும்பம்



பெண்கள் வழியில் பெருமைப்படும் உதவிகள் கிடைக் கலாம். வெறுப்பு, விரக்தி விலகி உற்சாகம் பெருகும். காலை நேரத்தில் மாமன், மைத்துனர்கள் மூலம் முக்கியமான செய்தி களைக் கேட்கலாம். வியாபாரிகள் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பர். நண்பர்களுக்காக மற்றொருவரிடம் உத்தர வாதம் கொடுக்கலாம்.

### மீனம்



சிலரிடம் பரிவு, பாசமாக நடந்து கொள்வீர்கள். என்றோ செய்ய நினைத்த காரியம் ஒன்றை இன்று திடீரெனச் செய்ய வேண்டியது நேரிடலாம். அவசர செலவுகளைச் சமாளிக்க ஒருவரிடம் பணம் கைமாத்து வாங்கலாம். மற்றவர்களுக்காக சில விடயங்களில் விட்டுக் கொடுப்பீர்கள். உறவினர்கள் சிலரின் வீடுகளுக்குச் செல்லலாம்.

## மின்தடையால் வடமராட்சியில் மாணவர், பொதுமக்கள் பாதிப்பு

வடமராட்சி,ஓக.24


வடமராட்சிப் பிரதேசத்தில் மின்சாரம் அடிக்கடி தடைப்படுவ தால் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அரச அலுவலர்கள் மற் றும் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த இரு தினங்களாக இரவு நேரங்கள் மட்டுமல்லாது பகல் வேளைகளிலும் பல மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்படுகின்றது. இதனால் மாணவர்கள் பரீட்சைக்குப் படிக்க முடியாமலும் பரீட்சை மண்ட பங்களில் போதிய வெளிச்சமின்மையால் பரீட்சை எழுதுவதிலும் பலத்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அலுவலகங்களில் கணனிகளை இயக்கி கடமைகளைப் புரிவதிலும் இடையூறுகள் ஏற்பட்டன.

இப்பிரதேசத்தில் அடிக்கடி மின்தடை ஏற்படாமலிருக்க உரிய நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர். (எ-236)


ஈராண்டு நினைவில்





திருமதி
முருகன் பூரணம்
மலர்வு - 05.07.1932
உதிர்வு - 24.07.2008

முருகன் மகாலிங்கம்
(முன்னாள் லிகிதர் (கிளாக்), கிளிநொச்சி M.O.H)
மலர்வு - 03.10.1951
உதிர்வு - 28.08.2008

வையகத்தில் வாழ்ந்திட்ட நாளில்
உமையுருக்கி எமை வளர்த்த
அன்பு மிகவுடைய தெய்வமே தாயே!
உள்ளத்தால் உயர்வாகி வாழ்விற்கு வழிகாட்டி
மனிதருள் மாணிக்கமாய் திகழ்ந்த
எங்கள் சூரியத் தேவரே!
ஈராண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் - எம் மனதில்
என்றும் நின்று நிழலாடும்.

அறிவொளி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.
(102207)

என்றும் உங்கள்
குடும்ப உறவுகள்.

1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் தர்மலிங்கம் சிவக்கொழுந்து (அன்னம்மா)



தாயின் மடியில்
30.05.1930

தலைவன் தாளில்
03.09.2009

அன்பாலும் பண்பாலும்
எம் எல்லோரையும்அரவணைத்த
எம் அன்புத் தெய்வமே!
மீளாத்துயில் கொண்டு வருடம்
ஒன்று கடந்தாலும் உங்கள்
இறப்பை எம் மனம்
நம்ப மறுக்கின்றதே
வருடம் ஒன்று சென்றாலும்
தாயே உன் அன்புமுகம் எம்
நினைவில் மறையாதம்மா!
உங்கள் ஆன்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்.

5ஆம் வட்டாரம்,
மண்கும்பான் மேற்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புக்கு எல்லை இல்லை

ஓர் ஊரிலே ஒரு பெரியவர் இருந்தார். அந்த ஊருக்கு வெளியிலே ஒரு காடு இருந்தது. அந்தக்காட்டிலே ஓர் ஆசிரமம் இருந்தது. அதில் அவர் வாழ்ந்து கொண்டிருந்தார்.

ஒரு நாள் நடு இரவு அவர் மட்டுந்தான் அந்த ஆசிரமத்தில் தூங்கிக்கிட்டிருந்தார். வேறுயாருமே அங்கே இல்லை. அப்படியிருந்தும் அந்த நேரத்திலே யாரோ கதவைத் தட்டுறது மாதிரி சத்தம் கேட்டது. இவர் எழுந்து போய் கதவைத் திறந்து பார்த்தார்.

ஓர் இளைஞர் நின்றான் முகத்தைப் பார்த்தால் மிகவும் பரிதாபமாக இருந்தது. தம்பி யாரப்பா நீ... என்ன வேணும் உனக்கு எப்படி இந்த நேரத்திலே நீ இங்கே வந்தே..? என்று கேட்டார்.

''சுவாமி .. நான் ஒரு வழிப் போக்கன். இந்த வழியா வந்து கொண்டிருந்தேன் இருட்டிப் போயிற்று ஊருக்குப் புதிசு... அதுதான் எங்கே போவதென்று தெரியாமல் இங்கே வந்தேன்.

இன்றைக்கு இரவு மட்டும் தங்குவதற்கு ஏதாவது இடம் கிடைக்குமா என்று தேடிவந்தேன் இங்கே வேறே எதுவும் தங்குவதற்கு வசதி இருக்கிறதா தெரியவில்லை. இந்த ஆசிரமம் தான் கண்ணில் தென்பட்டது. அதுதான் கதவைத்தட்டினேன். உங்களுக்குத் தொந்தரவு கொடுத்து விட்டேன் என்னை மன்னித்து விடுங்கள்'' என்றான்

அவர் இவன் முகத்தைப் பார்த்தார் பாவமாக இருந்தது.

''தம்பி நீ வேறு எங்கும் போகவேண்டாம் இங்கேயே தங்கு என்றார்.'' அது சரி உன் முகத்தைப் பார்த்தால் வாடிப்போய் இருக்குதே நீ எதுவும் சாப்பிடவில்லைப் போல் இருக்குதே அப்படித்தானா...?

'ஆமாம்!' என்று தலையை அசைத்தான்.

உடனே அந்த நேரத்திலும் அவரால் முடிந்த அளவுக்கு ஏதோ உணவு தயாரித்து அவனுக்குக் கொடுத்தார். ''இதோ இதைச்சாப்பிடு!'' என்றார்.

அவன் சாப்பிட்டு முடித்தான். பின்பு படுக்க வசதி செய்து கொடுத்தார் படுத்தான்.

காலையில் எழுந்தவுடன் மறுபடியும் உணவு தயாரித்துக் கொடுத்தார். அதையும் சாப்பிட்டு விட்டு அவன் புறப்பட்டான் அப்போது கேட்டார்.

''அது சரி... தம்பி உனக்கு எந்த ஊரு என்ன தொழில் செய்கிறாய்?

''சுவாமி... நீங்கள் நல்லவங்க.. உங்களிடம் பொய் சொல்லக் கூடாது. உண்மையைச் சொல்கிறேன்..!

''சரி சொல்லு!''

'' நான் ஒரு திருடன்... நேற்று இரவு பக்கத்து கிராமத்திலே ஒரு வீட்டில் திருடவந்தேன். சில காவலர்கள் என்னைத் துரத்தினார்கள். அவர்களிடமிருந்து தப்பி ஓடி வந்தபோதுதான் இந்த ஆசிரமம் கண்ணிலேபட்டது. உங்களிடம் பொய் சொல்லி உள்ளே வந்து தங்கிவிட்டேன் ஜயா!

என்னை மன்னித்து விடுங்கள்'' இப்படி சொல்லிவிட்டு அவன் போய்விட்டான்.

பெரியவர் திகைத்துப் போய் விட்டார் அவருக்கு வருத்தமாக இருந்தது.

'' ஆகா... எவ்வளவு பெரிய பாவம் செய்திருக்கிறோம் இது எவ்வளவு புனிதமான இடம் இதில் திருடன் தங்கிவிட்டுப் போயிருக்கிறான். அதற்கு நான் காரணமாகிவிட்டேன் இந்தப்பாவத்தை எங்கே போய் கழுவுவேன் இப்படி எண்ணி கவலைப்பட ஆரம்பித்தார்.

இறைவனிடம் வேண்டினார்.

''கடவுளே! ஒரு திருடனுக்கு அடைக்கலம் கொடுத்து, சாப்பாடும் போட்டு அனுப்பியிருக்கிறேனே இப்படிப்பட்ட ஒரு இழிவு நிலைக்கு என்னை ஆளாக்கி விட்டாயே..'' என்று கலங்கினார்.

இறைவனிடமிருந்து உடனே அவருக்கு பதில் கிடைத்தது.

''இதோ பாரப்பா! அந்தத் திருடனை ஒரு நாள் உன் ஆசிரமத்தில் தங்கவைத்து சாப்பாடு கொடுத்ததற்கு இப்படி புலம்புகிறாயே.. அவனுக்கு 30 வயசாகுது கடந்த 30 வருடமாக அவனைதான் இந்த பூமியிலே தங்கவைத்து வேளாவேளைக்கு உணவும் கொடுத்து காப்பாற்றி வருகிறேனே இந்தப்பாவத்தை நான் எங்கே போய்க் கழுவுறது?

இறைவனின் வார்த்தைகளைக் கேட்டதும் பெரியவருக்கு விழிப்புணர்வு கிடைத்தது.

அன்புக்கும் கருணைக்கும் எல்லை இல்லை என்பதை அவர் புரிந்து கொண்டார்.

ஒரு குருவும் சீடனும் ஒரு சாலை வழியால் நடந்து போய்க்கொண்டிருந்தார்கள். வழியிலே பார்வையில்லாத பிச்சைக்காரன் நின்றான். ''அவனுக்கு ஏதாவது தர்மம் செய்'' என்றார் குரு. அத்தச் சீடன் ஒரு நாணயத்தை போட்டான்.

குரு சொன்னார். ''நீ தர்மம் செய்யும் போது அவனை மதித்திருக்க வேண்டும். அதற்கு அடையாளமாக உன் தொப்பியைச் சற்று கழட்டிப் பணிவாகக் காட்டி யிருக்க வேண்டும். ''ஏன் அப்படி; சொல்கிறீர்கள் சுவாமி?''

''தர்மம் செய்யும் போது ஒருவன் அப்படித் தான் பணிவாக நடந்து கொள்ள வேண்டும்'' ''அவனுக்குத் தான் பார்வையில்லையே..?''

''யார் கண்டது? ஒருவேளை அவன் ஓர் ஏமாற்றுக்காரனாகக் கூட இருக்கலாம்!''

கோ.சுவாமிநாதன்.

# இரட்டை அர்த்த வசனங்கள்

சாதாரணமாக பேசுவதில் மூன்று அர்த்தங்கள் உள்ளது. எதைப் பேசினாலும் அர்த்தத்தோடு பேசுவது ஒருவகை அர்த்தமே. இல்லாமல் பேசுவது ஒரு வகை. இரண்டு, மூன்று அர்த்தங்கள் வரக்கூடிய வகையில் பேசுவது ஒருவகை.

இரண்டுபேர் சந்தித்துப் பேசிக் கொண்டு இருக்கும் போது ஒருவர் கேட்டார் உங்கள் ஊரில் யாரோ இறந்து போய் விட்டதாச் செய்தி வந்ததே அது நீயா உன் அண்ணனா? என்று கேட்டார். அதற்கு அவர் சொன்னார் எனக்குத் தெரியவில்லை. நான் வேண்டுமென்றால் என் அண்ணனைக் கேட்டுச் சொல்கிறேன் என்றார். இதில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா. எதைப் பேசுகிறோம் என்று தெரியாமல் பேசுபவர்கள் பலபேர் இருக்கிறார்கள். ஒருமுறை எழும்பூர் ரயில் நிலையத்தில் நான், தீபம் நா.பார்த்தசாரதி, கி.வா.ஜகந்நாதன் மூன்று பேரும் நின்று கொண்டிருந்தோம்.

எழும்பூர் ரயில் நிலையத்தில் பெயின்ட் அடித்திருந்தார்கள். பார்த்தசாரதி அதில் சாயப் போனார். குறுக்கிட்டு கி.வா.ஜகந்நாதன் சொன்னார் சாயச்சுவர் இல்லை என்றார். சாயச்சுவர் அதில் சாய சுவர் இல்லை என்று இரண்டு அர்த்தம் வந்தது. இப்படி பேசுவது சாமர்த்தியம்.

ஒரு புலவருக்குப் பார்வை இல்லை. அவர் மிக்க ஆற்றல் உள்ளவர். அவர் ஒரு நாள் அரசசபைக்கு சென்றிருந்தார். அவரது திறமையைப் பாராட்டி பொன்னாடை போர்த்த அமைச்சரைக் கொண்டு வரச் சொன்னார். அமைச்சர் கண் தெரியாத புலவர் தானே என்று கிழிந்த பொன்னாடை ஒன்றைக் கொடுத்தார். ராஜாவும் அதைப் பார்க்காமல் போர்த்திவிட்டார்.

அவர் பொன்னாடையை கையாலேயே தடவ அரசர் நினைத்தார் அவர் டிசைன் தான் தேடுகிறார் என்று. அதில் மாங்காய் போட்டிருக்கிறது என்றார். தடவிப் பார்க்கும் போது அது கிழிந்திருப்பதைக் கண்டு புலவர் சொன்னார் பிஞ்சும் இருக்கிறது என்று. இதில் பிய்ந்து போய் இருக்கிறது என்று ஒரு அர்த்தம்.

ஒரு ஜமீனைப் பார்ப்பதற்கு புலவர் ஒருவர் பேரனார். நூறு ரூபாய் தருகிறேன் என்று உட்கார வைத்துவிட்டு உள்ளே போய் வந்து நூறு ரூபாய் கொண்டு வந்து கொடுத்தார். புலவர் அதை வாங்கவில்லை. 200 ரூபாய் தருவதாக சொல்லிவிட்டு 100 ரூபா தந்தால் எப்படி. ஜமீன் யோசித்தார். ஒருவேளை 200 ரூபா தருவதாகச் சொல்லி இருப்பனோ என்று யோசித்துவிட்டு 200 ரூபா கொடுத்தார். அப்போதும் அவர் வாங்கவேயில்லை. 200,300,400 என்று மாறி மாறி சொல்லிக் கொண்டு இருந்தார்.

ஜமீன் யோசித்துவிட்டுச் சொன்னார் 400 ரூபாவே தருகிறேன். ஆனால் சொல்லாததைச் சொன்னால் எப்படி என்று கேட்டார். புலவர் சொன்னார் இருநூறு தருவதாகச் சொன்னீர்கள் அதுதான். 200 உம், முந்நூறு தருவதாகச் சொன்னீர். முன்பு நூறு தருவதாகவும் நானூறு என்றால் நான் நூறு தருகிறேன் என்றீர்கள். அது தான் வாங்கவில்லை என்று பதில் சொன்னார். ஜமீன் புலவரின் புலமையைப் பாராட்டி அவர் சொன்ன அனைத்துப் பணத்தையும் பரிசாகக் கொடுத்தார்.

இரண்டு அர்த்தத்தில் பேசுவது முக்கியம் இல்லை. இரண்டும் அர்த்தமும் கேட்கும் படியாக இருக்கட்டும்.

சுகி.சிவம்

# வெளிச்சம் தேவை....!



ஓர் ஊரில் ஒரு குரு இருந்தார். அவரிடம் நான்கு சீடர்கள் இருந்தார்கள். ஒரு நாள் அந்தக் குரு சீடர்களைக் கூப்பிட்டார்.

''இதோ பாருங்க... இப்ப நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கப் போகிறேன் அதற்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டும்.

''கேளுங்கள் குருவே... சொல்கிறோம் என்றார்கள்.

முதலில் நீங்கள் போய் ஒரு பானை கொண்டு வாருங்கள்?

ஒரு சீடன் ஓடிப்போய் ஒரு மண்பானையை எடுத்துக் கொண்டு வந்தான். குரு அந்தப் பானையை வாங்கினார். தலைகீழாகக் கவிழ்த்து வைத்தார்.அதன் பின் கேட்டார்.

''இதிலே என்ன இருக்குது சொல்லுங்கள் பார்க்கலாம்!'' என்றார்.

''இதிலே ஒன்றும் இல்லை!'' என்றார்கள் மூன்று சீடர்கள் நாலாவது சீடன் மட்டும் கொஞ்சம் யோசித்தான். அப்புறம் சொன்னான். ''குருவே! இந்த பானை நிறையக் காற்று உள்ளது.

''என்ன இருக்கு? என்று குரு கேட்டார் இல்லையா?

அதனாலே ஏதோ இருக்கு ... அது என்னவா இருக்கும் அந்த புத்திசாலி சீடன் யோசித்தான். அதனாலே சரியான பதிலை சொல்லினான்.

''சரி! இப்ப இன்னொரு கேள்வி என்றார் குரு. கேளுங்கள் என்றார்கள் சீடர்கள்

இந்த பானையிலே இருக்கிற காற்றை வெளியே எடுக்க வேண்டும்... அது முடியுமா?'' என்று கேட்டார். குரு வழக்கம் போல் அந்த முதல் மூன்று சீடர்களும், முடியாது...!'' என்று ஒரே பதிலாக சொன்னார்கள்.

நாலாவது சீடன் மட்டும் மறுபடியும் கொஞ்சம் யோசித்தான். ''முடியும்!'' என்றான்.

''எப்படி முடியும்? அதைச் செய்து காட்டும்! என்றார் குரு.

ஒரு வாளி நிறையத் தண்ணீர் கொண்டு வந்தான் அதை அந்த மண்பானையிலே ஊற்றினான். பானை தண்ணீரால் நிரம்பியதும் காற்று வெளியே போய் விட்டது!

இப்போது அந்த குரு உபதேசம் செய்தார் ''சீடர்களே! நமது மனசு இந்தப் பானை மாதிரி உள்ளே என்னென்ன தீமைகள் இருக்கிறது நமக்கு நமக்கே தெரியாது. காற்று கண்ணுக்குத் தெரியுதா? அது மாதிரி!

நமது மனசுக்குள்ளே இருக்கிற தீமைகளை நாமாக வெளியே எடுக்க முடியாது. அந்தத் தீமைகளை வெளியே கொண்டுவர சுலபமான வழி. அதற்குள்ளே நல்லதை நிரப்ப வேண்டும் அவ்வளவு தான் நல்ல எண்ணங்கள் உள்ளே போனால் உள்ளே இருக்கிற தீய எண்ணங்கள் வெளியே போயிடும்.

வெளிச்சம் உள்ளே போனால் இருட்டு காணாமல் போயிடும்.

அருட் தந்தை வேதாத்ரி மகரிஷி இந்தக் கதையைச் சொல்வது வழக்கம்.

ஒரு காடு அதிலே இரண்டு நண்பர்கள் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

திடீர் என்று எதிரே ஒரு கரடி வந்தது. ஒருவர் பக்தில் இருந்த மரத்தில் ஏறி உட்காந்தார் இன்னொருவர் அங்கே இருந்த ஒரு குகைக்குள் ஓடிப்போய் ஒளிச்சார்.

கரடி அங்கே நின்றது. குனகக்குள்ளே ஓடினவன் இரண்டு நிமிடம் கழித்து வெளியே வந்து எட்டிப் பார்த்தான் கரடியைப் பார்த்தான். மறுபடி உள்ளே ஓடினான். கொஞ்ச நேரம் கழித்து வெளியே வந்தான். பார்த்தான் திருப்பி உள்ளே ஓடினான். இப்படியே திரும்பத் திரும்ப செய்து கொண்டிருந்தான்.

மரத்தின் மேலே இருந்தவன் இதைப்பார்த்தான் முட்டாள்! ஏன் இப்படித் திரும்பத்திரும்ப ஓடி வராது பேசாமல் உள்ளே இருக்க வேண்டியது தான் என்று கத்தினான்.

இவன் அவனைவிட வேகமாக கத்தினான். என் விவரம் தெரியாது பேசாதே உள்ளே கரடி இருக்கிறது என்றார்.

இப்படித்தான் இன்றைக்கு பல பேர் வாழ்கிறார்கள் உள்ளே கெட்ட எண்ணம் வெளியே கெட்ட எண்ணம் கெட்ட செயல்கள்.

நல்ல எண்ணங்கள் நம்மை மேம்படுத்தும் வெளிச்சத்தை உள்ளே அனுப்பு வோம் இருள் விலகி ஓடட்டும்.

கோ.சுவாமிநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.நகரில் சர்வதேச தரத்தில் 'நொதேர்ன் சென்றல் ஹொஸ்பிற்றல்'

யாழ்.நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அடிக்கல் நாட்டப்பட்ட நொர்தேன் சென்றல் ஹொஸ்பிற்றல் சர்வதேச தரம் வாய்ந்ததாக அமையுமென அம்மருத்துவமனையின் ஆலோசகராகப் பணிபுரியும் டாக்டர் கீர்த்திசிறி எதிரிசிங்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அமைதி திரும்பியுள்ள நிலையில் அங்கு பரவலானளவில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தென்னிலங்கையைத் தளமாகக் கொண்டியங்கும் நிதி நிறுவனங்களும் ஏனைய கம்பனிகளும் வெளிநாட்டு முதலீட்டாளர்களும் யாழ்ப்பாணத்தினையே இலக்காகக் கொண்டுள்ளனர்.

இதன்பயனாக யாழ்ப்பாணத்தில் புதிய வங்கிகள் பலவும் திறக்கப் பட்டுள்ள அதேவேளை, பல புதிய கம்பனிகளும் தமது கிளைகளை இங்கு ஆரம்பித்துள்ளன.

ஆனாலும் மருத்துவத்துறை அபிவிருத்தியில் யாழ்ப்பாணத்தில் சடுதியான ஒரு முன்னேற்றம் காணப்படவில்லை. இந்நிலையிலேயே யாழ்.குடாநாட்டு மக்களுக்கு சர்வதேச தரத்திலான சிகிச்சைகளை வழங்கும் நோக்கில் 'நொதேர்ன் சென்றல் ஹொஸ்பிற்றல்' நிர்மாணிக்கப் படவுள்ளதாக டாக்டர் கீர்த்திசிறி எதிரிசிங்க தெரிவித்தார்.

இது முதலீட்டு சபையின் (BOI) முழு அங்கீகாரம் பெற்ற பாரிய திட்டமாகும். இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்; புதிய சிகிச்சை முறைகளுடனான சர்வதேச தரத்திலேயே இம்மருத்துவமனை நிர்மாணிக்கப்படவுள்ளது. 100 படுக்கை வசதிகளும் நவீன மருத்துவ மனை சாதனங்களும் இங்கு அமைக்கப்படும். 30 வருடகாலமாக வடமாகாண மக்களின் நன்மதிப்பைப் பெற்று இயங்கிவரும் சென்றல் நேசிங் ஹோமின் 2 ஆம் கட்ட விசாலமான விஸ்தரிப்புத் திட்டமாக இது அமை கின்றது.

குடாநாட்டு மக்கள் தமது மருத்துவ தேவைகளை அங்கேயே நிறை வேற்றிக்கொள்வதற்குரிய வாய்ப்புகள் இதனால் ஏற்பட்டுள்ளன.

மோதல்கள் முடிவடைந்து நாட்டில் அமைதியான சூழ்நிலை உருவாகி யுள்ள நிலையில் தற்போது புதிய வாய்ப்புகள் உருவாகியுள்ளன. இதன் மூலம் கிடைத்துள்ள அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மக்களுக்குச் சிறந்த சேவையாற்ற முடியும்.

யாழ்.குடாநாட்டின் பொருளாதார அபிவிருத்தி மீது அரசு கவனம் செலுத்தும் அதேவேளை வெளிநாடு களும் யாழ்ப்பாணத்தில் முதலீடு செய்வதற்கு விரும்புகின்றன.

அரச சார்பற்ற நிறுவனங்கள் பல இங்கு பல திட்டங்களை உருவாக்கி அமுல்படுத்தி வருகின்றன. இந்நிலையில் யாழ்.நகரில் உருவாக்கப்படும் இப்புதிய மருத்துவமனையில் நோயாளர்க ளுக்கு விசேட பராமரிப்பு இருக்கும்.

அதேவேளை சர்வதேச தரப்பயிற்சிகளைப் பெற்ற தாதியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுவர். அத்துடன் தாதியர் உள்ளிட்ட பதவி வெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்புப் பணிகள் ஆரம்பிக்கப்ப்ட்டுள்ளன.

அதேவேளை தாதிகள் மருத்துவமனை ஆரம்பிக்கப் படுவதற்கு முன்னரேயே பயிற்சிகளைப் பெறவேண்டிய கட்டாயம் உள்ளதால் தாதியராக இணைந்துகொள்ள விரும்புவோர் முன்கூட்டியே தமது




விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

இப்புதிய மருத்துவமனையில் வெளிநோயாளர் பிரிவு, சனலிங் பிரிவு, ஆய்வுகூட சேவைகள், ஸ்கேனர் சேவைகள், இதயப் பரிசோதனைகள் ஆகியவை இடம்பெறும். அத்துடன் இதுவரை குடாநாட்டில் இல்லாத மருத்துவ சேவைகளை இம் மருத்துவமனை வழங்கவுள்ளது.

இந்த மருத்துவமனையானது CT ஸ்கான் பிரிவு, நரம்பியல் மற்றும் நரம்பியல் சத்திர சிகிச்சைப் பிரிவு (Special Neurology and Neurosurgical Unit), புனருத்தாரணப் பிரிவு (Rehabilitation Unit), கண்சிகிச்சைப் பிரிவு (Opthalmology Unit), காது, மூக்கு மற்றும் தொண்டைப் பிரிவு (ENT Unit), பல்வைத்தியப் பிரிவு (Dental Unit), பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைப் பிரிவு (Plastic Surgery), சிறுநீரக சிகிச்சைப் பிரிவு (Nephrology), மகப்பேற்று வைத்தியப் பிரிவு (Maternity Home) மற்றும் முதியோ ருக்கான தனி வைத்தியப் பிரிவு (Nursing Home for elders) ஆகியவற் றைக் கொண்டதாக அமையவுள்ளது.

அதேவேளை மருத்துவ சேவைக்கு அப்பால் பகல் நேரப் பராமரிப்பு நிலையமும் இங்கு நடாத்தப்பட வுள்ளது. இதற்காக பல அறைகள் ஒதுக்கப்பட் டுள்ளன.

அம்புலன்ஸ் சேவையும் வீட்டிலிருந்து நோயாளர்களை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப் பயன்படுத்தப் படும். அத்துடன் நோயாளர்கள் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டு அவர்கள் பராமரிக்கப்படுவர். இந்த வைத்தியசாலையின் ஆரம்ப கட்டடப்பணிகள் இம்மாதம் முதல் ஆரம்பிக்கப்படுகின்றன.

ஒருவருட காலத்தில் இம்மருத்துவமனை கட்டிமுடிக்கப்பட்டு சேவைகள் ஆரம்பிக்கப்படுமெனத் தெரிகின்றது.

மேலதிக தகவல்களுக்கு **nchjaffna @gmail.com** எனும் ஈமெயில் முகவரியைத் தொடர்புகொள்ளவும். ★ ★ ★ ★


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வன் சிவச்சந்திரன் பானுஜன்




சுதிரமலை வீதி, சுன்னாகம் தெற்கில் வசிக்கும் சிவச்சந்திரன் மதிவதனி தம்பதியினரின் செல்வப்புதல்வன் **பானுஜன்** தனது முதலாவது பிறந்தநாளை இன்று (24.08.2010) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் கொண்டாடுகின்றார்

அவரை அப்பா, அம்மா, தாருஜன் அண்ணா, மைதிலி அக்கா, ஜனனி, நிதர்சனா, நிவேதனா மச்சான்மாரும், கௌதமன் லக்ஸன், பிரவின் மச்சான்மாரும், அம்மப்பா, அம்மம்மா, சின்னத்தம்பி தாத்தா, அண்ணை அப்பா, அண்னை அம்மா, அமெரிக்காவிலுள்ள பகீரதன் சித்தப்பா, மாலினிச் சித்தி, புன்னாலைக்கட்டுவன் நாதன் பெரியப்பா, புஸ்பா பெரியம்மா, பெரிய தாத்தா, லண்டன் அப்பன் மாமா, யாழினி மாமி, சூட்டி மாமா, ஆசைமாமா சபேசன், சுவிஸ் ரஞ்சன் மாமா, சுகிர்தினி மாமி, ஆனைக்கோட்டை அப்பப்பா, அப்பம்மா, பிரான்ஸ் ரதன் மாமா, நந்தினி மாமி, கவிச்சித்தப்பா, சுதர்சனா சித்தி, செல்வம் சித்தப்பா, தாரணி சித்தி, வனிதா, அனுசியா, குமுதினி அக்காமார்களும் சுன்னாகம் தேனுகா ரீச்சர் ஆகியோர் சிவபூதவராயர் அருள்பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டுகாலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றனர்.

நா.சிவச்சந்திரன்
(தந்தை)

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.



## மஹஜன சம்பத — அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. **2282**
திகதி **22.08.2010**

வெற்றி எழுத்து: **H** வெற்றி எண்கள்: **5 4 5 6 1 4**

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | H | 5 | 4 | 5 | 6 | 1 | 4 | ரூபா. 19,079,034/= | பரிசு | - |
| 1ம் பரிசுகள் | | 5 | 4 | 5 | 6 | 1 | 4 | ரூபா. 20,00,000/= | பரிசுகள் | - |
| 2ம் பரிசுகள் | | | 4 | 5 | 6 | 1 | 4 | ரூபா. 100,000/= | பரிசுகள் | 07 |
| 3ம் பரிசுகள் | | | | 5 | 6 | 1 | 4 | ரூபா. 10,000/= | பரிசுகள் | 79 |
| 4ம் பரிசுகள் | | | | | 6 | 1 | 4 | ரூபா. 1,000/= | பரிசுகள் | 675 |
| 5ம் பரிசுகள் | | | | | | 1 | 4 | ரூபா. 100/= | பரிசுகள் | 6838 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 4 | ரூபா. 20/= | பரிசுகள் | 67,977 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 5 | 4 | 5 | 6 | 1 | | ரூபா. 10,000/= | பரிசுகள் | 07 |
| 8ம் பரிசுகள் | | 5 | 4 | 5 | 6 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் | 68 |
| 9ம் பரிசுகள் | | 5 | 4 | 5 | | | | ரூபா. 100/= | பரிசுகள் | 680 |
| 10ம் பரிசுகள் | | 5 | 4 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் | 6823 |
| 11ம் பரிசுகள் | H | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் | 27207 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. **20,166,890.00**

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. **5,299,630.00**
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
**தேசிய லொத்தர் சபை**
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline: 2433631

முடிவுகளை அறிய www.nlb.lk



## STUDY IN UK

இதுவே இறுதிச் சந்தர்ப்பம் இதனைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்

### யாழ்.நகரில் மிகக் குறைந்த செலவில்.............

NO IELTS

லண்டனில் தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் உங்கள் உயர்கல்வியைத் தொடர்வதற்கு

- ★Admission within 3 days (ஆவணங்கள் திருப்தியாக இருந்தால்)
- ★ஆகக் குறைந்த (O/L) கல்வித் தகைமைகளுடன்
- ★விசா கிடைப்பதற்கு முன்னரோ விசா கிடைத்த பிறகோ எதுவித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.
- ★மிகக் குறைந்த கட்டணத்தில் Sponsor வழிகள்
- ★விசா நிராகரிக்கப்படுமானால் பணத்தைத் திரும்பப் பெறும் வசதிகள்

ஜேர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளுக்கு Work Permit வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

எமது சேவைகள் முற்றிலும் இலவசமானது

தொடர்புகளுக்கு: 0770871616


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனிற்கு மாணவர் விசா பெற்றுச்செல்லும் இலங்கையர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்

## ஸ்ரீலால் டயஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 24

• பிரித்தானியாவிற்கு மாணவர் விசா பெற் றுச் செல்லும் இலங்கையர்கள் மிகவும் விழிப்புடன் செயற்பட வேண்டும் - என்று பிரிட்டன் ஜனஹன்ட அமைப்பின் தலைவர் ஸ்ரீலால் டயஸ் தெரிவித்துள்ளார்.

மாணவர் விசா பெற்று பிரிட்டனிற்குள் பிரவேசிப்போர் பல்வேறு இடர்களை எதிர் நோக்கி வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

போதியளவு பணமின்றி இவ்வாறு பிரிட்டன் செல்லும் மாணவர்கள் நெருக்கடியான நிலைமைகளை எதிர்நோக்கி வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல மாணவர்கள் போலியான முகவர் நிறுவனங்களின் பிடியில் சிக்கி அல்லலுறுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

மாணவர் விசா பெற்றுச் செல்வோர் பத்து மணித்தியாலங்கள் மட்டுமே சட்ட ரீதியாக தொழில்களில் ஈடுபட அனுமதிக்கப்படுகின்றனர் எனவும் இது உணவிற்கே போதுமானதல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2.5 மில்லியன் பிரிட்டன் மக்கள் வேலையில்லாப் பிரச்சினையை எதிர்நோக்கி வரும் நிலையில் மாணவர்களுக்கு அதிகளவு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது நடைமுறைச் சாத்திமற்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனிற்குள் பிரவேசிப்பதற்கு முன்னர் சகல விடயங்கள் தொடர்பிலும் தெளிவாக அறிந்து கொண்டு அதன் பின்னர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (சி)

## மஞ்சவனப்பதி முருகனின் தீர்த்தத் திருவிழா இன்று

யாழ்ப்பாணம், ஓக. 24

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தீர்த்தத்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 5.30 மணிக்கு அபிஷேகம், 7.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசை என்பன இடம்பெறும். மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் சண்டேசுவரர் உற்சவமும் இடம்பெறும்.

நாளை புதன்கிழமை பூங்காவனத்திருவிழா இடம்பெறும். நண்பகல் 12 மணிக்கு அபிஷேகம் நடைபெற்று மாலை 6 மணிக்கு திருக்கல்யாணமும் நடைபெறும்.

உற்சவத்தை முன்னிட்டு ஆலயத்தைச் சூழவுள்ள மடங்களில் அன்னதானம் வழங்கப்படும். (204)

# கிழக்கில் மீள்குடியேறியோர் நலனுக்காக ரூபா 4 கோடி 23 லட்சம் நிதி ஒதுக்கீடு

கொழும்பு, ஓக. 24

கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்தும் திட்டத்துக்கு சமாந்தரமாக அவர்களுக்கு அடித்தள வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக நான்கு கோடியே 23 லட்சம் ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது.

மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரனின் திட்டத்துக்கமைய இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியில் யுத்தத்தால் சேதமுற்ற 482 வீடுகளைத் திருத்தி அமைக்க இரண்டு கோடியே 73 லட்சம் ரூபாவும், குழாய்க் கிணறு மற்றும் 43 குடிதண்ணீர் கிணறுகளுக்காக ஒரு கோடியே 50 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வீடுகளைப் புனரமைப்பதற்கான நிதி கல்குடா, வாகரை வடக்கு, வாகரை மத்திய பிரதேசங்களுக்கும் குடிதண்ணீர் வசதிக்கான நிதி போரதீவுப்பற்று, மண்முனை, மண்முனை வடக்கு, ஏறாவூர்ப்பற்று, தென்கோறளைப்பற்று ஆகிய பிரதேசங்களுக்கும் பயன்படுத்தப்படும்.

மேற்கண்ட பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங்குதல் இதுவரை இப்பிரதேசங்களில் நிலவிய குடிதண்ணீர்ப் பற்றாக்குறைக்குத் தீர்வாக அமைந்தது எனப் பிரதி அமைச்சர் முரளிதரன் தெரிவிக்கின்றார். (சி)

## மெய்கண்டான் மலர்

சுழிபுரம், ஓக. 24

புண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினர் வித்தியாலய எண்பத்தைந்தாவது ஆண்டு நிறைவை யொட்டி "மெய்கண்டான் மலர்" வெளியிடவுள்ளனர். இம்மலரில் வித்தியாலயத்தில் கல்வி கற்று சிறந்து விளங்கும் பழைய மாணவர்களின் துறைசார்ந்த ஆக்கங்கள் இடம்பெறவுள்ளன. மாணவர்களுக்கு பயன்படும் வகையில் கட்டுரைகளும் அதில் இடம்பிடிக்கவுள்ளன.

(ஓ-28)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.24

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி இளங்கலைஞர் மன்றமும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானமும் இணைந்து துர்க்காமணி மண்டபத்தில் நடத்தும் இசையரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு எஸ்.குமாரசாமியின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும்.

ஏ.ஜெயராமன் வயலினும் எஸ். துரைராசா மிருதங்கமும் சதாவேல்மாறன் தபேலாவும் கே.நந்தகுமார் முகர்சிங்கும் வாசிப்பர். (201)

* * *

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந்திருவிழா காலத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் சமயச் சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்வுகள் வரிசையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு 'ஆறுமுகம் ஆனபொருள்' என்னும் தலைப்பில் மதுர கவி காரை. எம்.பி.அருளானந்தனின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

திருமதி புஸ்பமலர் யோகநாதனின் நெறிப்படுத்தலில் அமைந்த இசைக்கச்சேரியும் இடம் பெறவுள்ளது. வடலியடைப்பு இந்து இளைஞர் சங்க அறநெறிப் பாடசாலை, ஊர்காவற்றுறை தம்பாட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெறும். (201)






# நல்லூர் பெருந்திருவிழாக் கால சிறப்பம்சம்

## மாறும்படி அருள வா

அஞ்சி நடுங்கி அவமானப் பட்டென்றும்
கெஞ்சி இரப்பதையா கேட்டு வந்தோம் - மஞ்சமிசை

ஏறுநல் லைக்குமரா எங்கள் நிலைநன்றாய்
மாறும்படி அருள வா

சிற்பி.

## மங்கல இசையோடு மஞ்சத்தில்

மஞ்சத்தில் மலர்கள் மணம் பரப்ப
மங்கல இசையோடு சங்கொலி இணைய
தஞ்சமெனத் திரண்ட தொண்டர் தொட்டு
தம்கையால் இழுக்கின்றார் திருமுருகன் மஞ்சத்தை
அஞ்சேலென அடியார்க்கு அருளுரை வழங்கும்
ஆறுமுகன் அருளினை ஆவலுடன் வேண்டி
சஞ்சலம் நீங்கி சிறப்போடு வாழ
சண்முகனைப் பணிக்கின்றார் சிரமேல் கரங்குவித்து

க.அருமைநாயகம்,
குளப்பிட்டி.

## அழகுமிகு வேலவனே!

வண்ணமயில் வாகனனே வள்ளி மண வாளனே
சின்னஞ்சிறு பாலகனே சிங்கார வேலவனே
எண்ணமதில் குடிகொள்ளும் எங்கள்தெய்வம் ஆனவனே
கண்ணெதிரே காட்சிதந்து கண்ணுக்குள் உறையவேண்டும்

வெற்றிவேல் கையில் ஏந்தும் வெற்றிபெற்ற வீரனே
வேண்டுவார் குறைதீர்க்கும் வேண்டும் வரம் தருவோனே
ஆறுபடை வீடுகொண்ட ஆறுமுக சுவாமியே
அன்பர்கள் துதிபாடும் அழகுமிகு வேலவனே

கி.துர்க்காம்பிகை,
மானிப்பாய்.

## காட்டிடுவான் கந்தனவன் வழியதாமே

பாட்டியவள் பாட்டுக்காய்ப் பரிதவித்தான்
வீட்டிலொரு மாங்கனிக்காய் உலகளந்தான்
கூட்டினிலே பிரமனையே அடைத்து வைத்தான்
ஆட்டி வைக்கும் அப்பனுக்கே பாடஞ் சொன்னான்
கேட்டு வந்த தேவர்களைக் காத்து நின்றான்
போட்டியிட்ட அசுரர்களை அழித்தொழித்தான்
நாட்டிலுள்ள பக்தர்கள் நலமாய் வாழ
காட்டிடுவான் கந்தனவன் வழியதாமே

வ.யோகானந்தசிவம்

## தங்க வடிவேலே தரணி வலம் வாருமையா

செங்கதிரோன் உதிக்கின்ற செந்நிற வேளையிலே
செந்தமிழன் வணங்குகின்ற செவ்வேளின் ஆலயத்தில்

அங்கம் எல்லாம் புரண்டு உருளும் அடியாரின் வேண்டுதலோ
தங்க வடிவேலா எம்மை நல்வாழ்வு வாழவையும்

சொந்தம் இல்லை பந்தம் இல்லை சொந்த இடமும் இல்லை
தங்க வடிவேலோனே தமிழர் எம்மை காருமையா

தாங்காத் துயர் தீர்த்து சாந்தமாய் வாழ வைக்க
தங்க வடிவேலோனே தரணி வலம் வாருமையா

தருமனி, நல்லூர்.

## நல்லை நகர் பேரழகன் கந்தன்

நாளும் வந்து தொழுபவர்க்கு நலம் எல்லாம் சேரும்
நல்லூர் முருகனின் நாமங்கள் பலவும் சொல்வோம்
ஈழத்தின் சிகரம் என்று எங்கும் புகழ் ஓங்குமிந்த
எழிலார் நல்லூர் பதியில் வந்து ஏத்தி ஏத்தி வலம் வருவோம்
திரு நிறைந்த ஆவணித் திங்களிலே திருவிழாவாம்
தரிசனமும் அபிஷேகமும் தரணியோர் வந்து காணும்
பெருமைமிகும் நல்லை நகரின் பேரழகன் கந்தன்
பவனிவரும் விழாக்கோலம் பார்த்தால் பலவினை தீரும்

திருமதி உ.பூமணி,
வடலியூர்.

## தமிழர் இனம் ஏங்கி நிற்கும் வேதனை கண்டிலையோ?

கொடியேற்றம் கண்டுவெளி வீதிவலம் வந்தடியார்
குறைதீர்த்து அருள்செய்யும் குமரேசா!
வடிவேல்கைக் கொண்டவனே வண்ணமயில் வாகனனே
வளமார்நல் லூரமர்ந்த வடிவேலா!
விடிவேதும் இல்லையென தமிழர் இனம் ஏங்கி நிற்கும்
வேதனைதான் கண்டிலையோ தமிழ் முருகா!
அடியவர்கள் உனையொருகால் நினைத்தால் நீ இருமுறையும்
அருள் தருவாய் எனும் வழக்குப் பொய்யானதோ?

நா.நல்லதம்பி,
மட்டுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி நாணயத்தாள் புழக்கத்தில்; மக்களே அவதானம் அவசியம்

கடந்த மூன்று தசாப்தகால யுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்து எமது யாழ்.குடாநாட்டையும் நாட்டின் ஏனைய பகுதிகளையும் குறிப்பாகத் தென்பகுதியையும் இணைக்கும் நெடுஞ்சாலையான ஏ-9 பாதை திறக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தென் பகுதியிலிருந்து யாழ். குடாநாட்டுக்கான உல்லாசப் பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இப்பாதை திறந்தமையைப் பயன்படுத்தி எமது குடாநாட்டுக்குள் பல்வேறு விதமான கண்ணுக்குத் தெரியாத குற்றச் செயல்களும் ஊடுருவி விடுமா என்ற அச்சம் எம்மில் பலருக்கு உள்ளது.

அந்த வகையில், பல கலாசாரச் சீரழிவுகள் போன்றவை தொடர்பாகப் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டு வந்தாலும் தற்போது புதிதாக இனங்காணப்பட்டுள்ள பிரச்சினையே 'கள்ளநோட்டுப் புழக்கம்', அதாவது போலி நாணயத் தாள்களின் நடமாட்டம்.

வழமையாகவே சேமிப்புப் பழக்கம் கொண்ட யாழ்.குடாநாட்டு மக்கள் மத்தியில் இக்கள்ள நோட்டின் வருகை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள விடயமாக மாறியுள்ளது.

இது, இதுவரை காலமும் குடாநாட்டு மக்கள் எதிர்கொள்ளாத, அதாவது அதிக அளவில் எதிர்கொள்ளாத விடயமாதலால் அவர்கள் இந்த 'விஷப்பரீட்சைக்கு' எவ்வாறு முகம் கொடுக்கப் போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

பெரும்பாலும் பொதுமக்கள் மத்தியில் இதுபெருமளவுக்கு வெளிப்படாமல் இருப்பினும் சிலவேளை அசல் நாணயத்தாளை இனம்காணும் திறன் குறைவாகக் காணப்படுவதால் இது பரவலாக வெளிப்படவில்லையோ அல்லது தற்போதுதான் இது குடாநாட்டில் துளிர்விட ஆரம்பிக்கிறதோ என்பதைத் தீர்மானிக்க இயலாதுள்ளது.

ஆனாலும் வங்கிகளில் இந்நாள்களில் இப்போலி நாணயத்தாள்களின் புழக்கம் கணிசமான அளவு அதிகரித்துள்ளதால் பல வங்கியாளர்கள் தற்போது இவ்விஷப் பரீட்சைக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளதாக நண்பரொருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக 'உதயன்' முன்னரே உங்களுக்கு விழிப்பு மருந்து கொடுத்துள்ளான். எனினும் அசல் நாணயத்தாளை உரிய முறையில் எவ்வாறு இனம் காண்பது என்பது தொடர்பாகவே இப்பத்தியில் கவனிக்கவுள்ளோம்.

குறிப்பாகப் பெறுமதியான நாணயத்தாள்களைப் பயன்படுத்தும் போது நாம் மிகவும் அவதானமாக இருப்பது அவசியமாகும்.

அந்த வகையில் போலி நாணயத்தாள்களை உண்மையான நாணயத்தாள்களிலிருந்து வேறுபடுத்தி அடையாளம் காணும் பொருட்டு நாணயத்தாள் வடிவமைப்பில் பின்வரும் பாதுகாப்பு அடையாளங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அவையாவன:

* நீர்வரி அடையாளம்
* பாதுகாப்பு நூல்
* வெளிச்சத்தினூடாகப் பார்த்தல்
* செதுக்கு வேலைப்பாடு கொண்ட அச்சிடல்
* தாளின் நூலிழை அமைப்பு
* பல் அடுக்குகளைக் கொண்ட தோற்றம்
* நுண்ணிய எழுத்து
* மூலைக்கல்
* பிரகாசமான பட்டி

இதுபோன்ற பல உத்திகளை உத்தியோகபூர்வ நாணயத்தாள்களில் இலங்கை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.


**நீர்வரி அடையாளம்**


நாணயத்தாளை வெளிச்சத்தில் பிடிப்பதன் மூலம் அதில் தோன்றுகின்ற சிங்கத்தின் தோற்றமே இதுவாகும். தாளின் இருபுறங்களுடாகவும் இச்சிங்கத்தின் தோற்றத்தைத் தெளிவாகக் கண்டுகொள்ள முடியும்.

இதிலும் 1995.11.15 ஆம் திகதிக்குப் பிற்பட்ட நாணயத்தாள்களில் தேசியக் கொடியில் காணப்படுவது போன்று கட்டியச் சிங்கம் வாளுடன் நிற்பது துலாம்பரமாகப் பொறிக்கப்பட்டிருக்கும்.

1987.01.01 ஆம் திகதிக்குப் பின்னர் வெளியிடப்பட்ட தாள்களில் தேசியக் கொடியில் காணப்படுவதுபோன்று கட்டியச் சிங்கமொன்று பொறிக்கப் பட்டுள்ளது.

1987.01.01 ஆம் திகதி வரை வெளியிடப்பட்ட தாள்களில் இரத்தினபுரி,திஸ்ஸாவ கொடியில்





காட்டப்பட்டுள்ளது போன்று சிங்கம் சாட்டையொன்றை வைத்திருப்பது பொறிக்கப்பட்டுள்ளது.

இவையே நீர்வரி அடையாளத் திலுள்ள அம்சங்களாகும்.

**பாதுகாப்பு நூல்**

பாதுகாப்பு நூலானது 500 ரூபா, ஆயிரம் ரூபா, இரண்டாயிரம் ரூபா ரக நாணயத்தாள்களில் உலோக வர்ணத்தில் பதிக்கப்பட்டுள்ளது. வெளிச்சத்தில் பிடித்துப் பார்க்கும் போது

## நாணயத்தாள்களில் எழுதுகருவிகளால் அடையாளமிடுவது தண்டனைக்குரிய குற்றம்

இந்நூலானது நேரான, நிலைக்குத்தான, தொடர்ச்சியான கோடாகக் காணப்படுகின்றது.

இந்த நூலானது ''ஸ்டார் குறோம்'' என அழைக்கப்படுவதுடன் 2006 ஆம் ஆண்டின் பின்னரே அறிமுகப்படுத்தப்பட்டதாகும்.

500 ரூபாய்த் தாளில் இது 3 மில்லி மீற்றராகவும், ஆயிரம் ரூபாத் தாள் மற்றும் இரண்டாயிரம் ரூபாத் தாள்களில் 4 மில்லி மீற்றராகவும் வர்ணம் மாற்றமடையும் மையினாலும் அச்சிடப்பட்டுள்ளது.

எனவே இத்தாள்களை மேலும் கீழும் சரிக்கும்போது நூலின் நிறமானது சிவப்பிலிருந்து பச்சைக்கு மாற்றமடைகின்றமை இதன் சிறப்பம்சமாகும்.

2001 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டுவரை வெளியிடப்பட்ட 500 ரூபா மற்றும் ஆயிரம் ரூபாத் தாள்களில் நூலானது உலோகமகற்றப்பட்ட தெளிவான தன்மையுடனும் 500 ரூபாத் தாள்கள் இலங்கையின் காட்டு மலர்களுடனும் ஆயிரம் ரூபாத் தாள்கள் கூடை பின்னும் படவடிவமைப்புடனும் காணப்படுகின்றன.

1987 ஆம் ஆண்டிலிருந்து 2000 ஆம் ஆண்டுவரை வெளியிடப்பட்ட தாள்களில் காணப்பட்ட பாதுகாப்பு நூல்கள் 'ஸ்டார் டஸ்ட்' எனவும் அழைக்கப்பட்டது.

10 ரூபா, 20 ரூபா, 50 ரூபா மற்றும் 100 ரூபா இன நாணயத் தாள்களிலுள்ள பாதுகாப்பு நூல் மெல்லிய பொலியெஸ்ரர் நூலாகக் காணப்படுவதுடன் இதில் 'இலங்கை மத்திய வங்கி' என்ற சொல்லும் நாணயத்தின் இனமும் நுண்ணிய எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கும்.

அடுத்ததாகக் கூறப்பட்டுள்ள வெளிச்சத்தினூடாகப் பார்த்தல் என்பது தாளின் முன்பக்கம் பின்பக்கங்களுடாகப் பார்க்கும்போது அச்சிடப்பட்டுள்ள மாதிரிகள் ஒன்றுடன் ஒன்று பொருந்துவதனை அவதானிக்க முடியும்.

**செதுக்கு வேலைப்பாடு கொண்ட அச்சிடல்**

தாளின் குறுக்காக விரல்கள் மூலம் வருடும்போது 'இலங்கை மத்திய வங்கி' என்ற எழுத்து புடைக்கப்பட்டு அதாவது செதுக்கப்பட்டுக் காணப்படுவது போன்ற உணர்வு ஏற்படும்.அத்துடன் பருத்தியினால் இழைக்கப்பட்ட தாளின் உருவாக்கத்தையும் உணரமுடியும். இதையே தாளின் நூலிழை அமைப்பும் புலப்படுத்துகின்றது.

தாளினை கிடைப்பக்கமாகப் பிடித்துப் பார்க்கும் பொழுது தாளின் முன்பக்கத்தில் வடிவமைப்பு மற்றும் இலக்கம் அதாவது தாளின் பெறுமதி என்பன ஒளிந்துள்ள ஒரு தோற்றத்தினைக் காணமுடியும். இதுவே பல் அடுக்குகளைக் கொண்ட தோற்றம் எனக் கூறப்படுகின்றது.

**நுண்ணிய எழுத்து**

தாளின் இரு பக்கங்களிலும் வெற்றுக் கண்ணுக்குப் புலப்படாத வகையில் 'இலங்கை மத்திய வங்கி' என எழுதப்பட்டிருக்கும். இதை உருப்பெருக்கக் கண்ணாடி மூலம் இனம் காணமுடியும்.

**மூலைக்கல்**

2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வெளியிடப்பட்ட 500 ரூபா, ஆயிரம் ரூபா, இரண்டாயிரம் ரூபாத்தாள்களில் தாளினை வெளிச்சத்தில் பிடித்துப் பார்க்கும்போது நான்கு மூலைகளும் மூலைவிட்டச் சட்டங்களாகக் காணப்படும்.

இதையே மூலைக்கல்ரி எம் நீர்வரி அடையாளம் என அழைப்பர்.

**பிரகாசமான பட்டி**

இது இரண்டாயிரம் ரூபாய்த் தாள்களிலே தாளின் பின்புறத்தில் தங்க நிறப்பட்டி நிலைக்குத்தாக அச்சிடப்பட்டிருக்கும்.

விசேடமாகத் தற்போது புழக்கத்திலுள்ள இரண்டாயிரம் ரூபாத்தாள்களில் 'P' எனத் தொடங்கும் முன்எழுத்தும் தொடர் இலக்கமும் வலது பக்க மேல் மூலையில் நிலைக்குத்தாகக் கறுப்பு நிறத்திலும் இடதுபக்க கீழ் மூலையில் கிடையாகச் சிவப்பு நிறத்திலும் காணப்படும். அதேவேளை சமச்சீரற்ற அளவுகளில் இலக்கங்கள் பொறிக்கப்பட்டிருக்கும்.

இவையே போலியல்லாத அசல் நாணயத்தாள்களை உரிய முறையில் இனங்காணும் சில வழிகளாகும்.

போலி நாணயத்தாள்களைக் கையாள்வதோ, அல்லது வைத்திருப் பதோ தண்டனைக்குரிய குற்றமாகும்.

1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணய விதிச்சட்டத்தின் 49 ஆவது பிரிவின்படி இலங்கையில் நாணயத்தாள்களையும் நாணயக் குற்றிகளையும் வெளியிடும் ஏகபோக உரிமையும் அதிகாரமும் இலங்கை மத்திய வங்கிக்கு மட்டுமே உரியது.

எனவே, நாணயச் சபையின் அதிகாரமின்றி எந்தவொரு நாணயத்தாளையும் எந்தவொரு வடிவத்தில் மீளத் தயாரிப்பதோ அல்லது துல்லியமான பிரதியாகப் பதிப்பதோ தண்டனைக்குரிய குற்றமாகும்.

**போலி நாணயத்தாள்களைத் தயாரித்தல்**

போலி நாணயம் என இனங்காணுவதற்கான காரணங்கள் இருந்தும் அதைப் பயன்படுத்தல், தமது உடைமையில் வைத்திருத்தல் மற்றும் பயன்படுத்த எத்தனித்தல், இவற்றைத் தயாரிக்கும் மூலப் பொருள்களை வைத்திருத்தல் என்பன போன்ற குற்றங்களுக்கு அவற்றுக்கேற்ப அதிக பட்சத் தண்டனையாக 20 ஆண்டு வரையான சிறைத்தண்டனை மற்றும் தண்டப்பணம் அறவிடல் என்பன வழங்கப்படலாம்.

நாணயத்தாளை அசுத்தப்படுத்து தலும் அதில் கீறுதலும் தண்டனைக் குரிய குற்றமாகும்.

ஒரு நாட்டு மக்களிடையே தூய்மையான நாணயத்தாள்கள் பயன்படுத்தப்படும்போது அது அந்த நாட்டு மக்களது தூய்மையை அயல் நாடுகளுக்கு எடுத்துக் காட்டுகிறது.

அது மட்டுமல்லாது தாள்களை அசுத்தமாக்கும்போது குறித்த நாணயத்திலுள்ள பாதுகாப்பு அடையாளங்களையும் தெளிவாக இனங்காணுதல் சிரமமாய் அமைகிறது.

அத்துடன் தொற்று நோய்க் கிருமிகளை அசுத்தமாக்கப்பட்ட நாணயத்தாள்கள் பரவச் செய்யும் சந்தர்ப்பமும் அதிகம்.

எனவே நாணயத் தாள்கள் மீது எழுதுதல், சேதப்படுத்தல், விளம்பரத்துக்காகப் பயன்படுத்தல் என்பன குற்றமாகக் கொள்ளப்படுகின்றன.

**-சுகந்தன்-**

யாரவது ஒரு நபர் கள்ளநோட்டை வங்கியொன்றில் வைப்பிலிட முற்படுவாராயின் அதை வங்கியாளர் இனங்காணும் பட்சத்தில் குறித்த நாயணத் தாளை உடனடியாகவே மக்களிடம் மீண்டும் புழக்கத்துக்குச் செல்வதைத் தடுக்கும் வகையில் 'பஞ்சர்' இடவேண்டும். அதாவது துளையிடுவதன் மூலம் குறித்த நாணயத்தாள் மீண்டும் பொதுமக்கள் மத்தியில் செல்லாதவாறு தடுக்கப்படு வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'சரி தப்பித் தவறி போலி நாணயத்தாள் எமது கைக்கு எட்டினால் நாம் என்ன செய்வது' என்று நீங்கள் முணுமுணுப்பது எனக்குக் கேட்கிறது.

முதலில் சந்தேகத்துக்குரிய நாணயத்தாளினை உங்களுக்குத் தெரிந்த உண்மையான தாளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். அது உண்மையில் போலி நாணயத்தாளென நீங்கள் உறுதி செய்தால், அத்தாளை எவ்வாறு பெற்றீர்கள் மற்றும் நாணய இனம் அதாவதுபெறுமதி, தொடர் இலக்கம் என்பவற்றைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

உங்களிடம் போலி நாணயத்தாளைத் தந்தவரின் விவரம், அவரை இறுதியாகக் கண்ட இடம் என்பவற்றை அறிக்கைப் படுத்தி அந்த நாணயத்தாளை காகித உறையில் வைத்து (தொடுகையைத் தவிர்க்க) பொலிஸ் நிலையத்தில் கையளித்தல் வேண்டும்.

இது போன்ற நடவடிக்கைகளைக் கையாள்வதன்மூலம் எமது குடாநாட்டில் போலி நாணயத்தாள்களை புழக்கத்திலிருந்து அகற்றிவிட இயலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரணி எம்.பிக்கள் இல்லாத நிலையில் மன்னார் அபிவிருத்திக் குழுக் கூட்டம்

## அமைச்சர் பஸில் தலைமை தாங்கினார்

மன்னார்,ஓக.24

விடுமுறை தினமான நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மன்னார் மாவட்ட அபிவிருத்திச்சபைக் கூட்டத்தில் வன்னி மாவட்ட எம்.பியும் கைத்தொழில், வர்த்தக அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் ஒருவரைத் தவிர மற்றைய ஐந்து எம்.பிக்களும் கலந்து கொள்ளவில்லை. இவர்களில் மூவர் தமிழ் தேசியக் கூட்டமைப்பையும், ஒருவர் ஐக்கிய தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸையும் மற்றும் ஒருவர் சுதந்திரக் கூட்டமைப்பையும் சேர்ந்தவர்கள்.

வழமையாக இவ்வாறான கூட்டங்களுக்கு அமைச்சர் ரிஷாத் பதியுதீனே தலைமை தாங்குவது வழமையாகும். ஆயினும் இக் கூட்டத்திற்கு அமைச்சர் பஷில் ராஜபக்ஷ தலைமை தாங்கினார். அவருடன் வர்த்தக அமைச்சர் நிசாத் பதியுதீனும் மீள்குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர்ணாண்டோவும் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மன்னார் கட்டளைத் தளபதிகள், மன்னார் அரச அதிபர், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர், வன்னிப் பிரதேசக் கட்டளை அதிகாரி, பொலிஸ் அதிகாரிகள், அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், அரசசார்பற்ற அமைப்பின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

(த-80)

## சுகாதாரப் பொதிகள் விநியோகம்

கிளிநொச்சி, ஓக.24

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கல்மடுநகர் கிராம அலுவலர் பிரிவில் 'லிசா' நிறுவனத்தினரால் பெண்களுக்கான சுகாதாரப் பொதிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

கடந்த 21ஆம் திகதி இப்பிரதேசத்தில் வாழும் 18 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்ட பெண்களுக்கே இப்பொதிகள் விநியோகிக்கப்பட்டன. 400 வரையானோருக்கு இப்பொதி வழங்கப்பட்டுள்ளதாவும் ஏனையோருக்கு விரைவில் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(த-405)

# கவனிப்பாரற்ற கிளிநொச்சி பஸ் நிலையம்; கடும் மழையால் அவதிப்பட்ட பயணிகள்

கிளிநொச்சி, ஓக.24

கிளிநொச்சி நகரின் பஸ் தரிப்பு நிலையத்தில் பயணிகள் இளைப்பாற அல்லது காத்திருப்பதற்கு கூரைகளற்ற சேதமடைந்த கட்டடங்களே பயன்படுத்தப்படுகின்றன. கடந்த 21 ஆம் திகதி பெய்த மழையால் மக்கள் தரித்திருப்பதற்கு இடமின்றி அவதிப்பட்டனர்.

கிளிநொச்சியில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் காக்கா கடைச் சந்திப் பகுதியில் தபாலக வளாகத்தில் பஸ் தரிப்பிடம் இயங்கிவந்தது. பின்னர் திடீரென ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவின் வருகைக்காக டிப்போ வீதியில் உள்ள பழைய பஸ் நிலையத்திற்கு மாற்றப்பட்டது. மாற்றப்பட்டு ஒரு மாதம் கடந்துள்ள நிலையிலும் அங்கு மக்கள் தங்கக்கூடிய ஏற்பாடுகள் எதுவும் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் அங்கு இ.போ.ச.பஸ்கள் எதனையும் காண்பது அரிது எனவும் தனியார் பஸ் தரிப்பிடம் போன்றே அது காணப்படுகின்றது எனவும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

ஏ-9 வீதியால் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா மற்றும் தென்பகுதிகளுக்குச் செல்லும் அரச, தனியார் பஸ்களோ வவுனியா மற்றும் தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் அரச, தனியார் பஸ்களோ கிளிநொச்சி பஸ் நிலையத்தைக் கண்டு கொள்வதில்லை எனவும் இதனால் பயணிகள் பெரும் சிரமங்களை அனுபவிக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட தரப்பினர் ஏன் இவ் விடயங்களைக் கண்டும் காணாதவர்கள் போல உள்ளனர் எனப் பயணிகள் கேள்வி எழுப்புகின்றனர். இது விடயத்தில் அவர்கள் கவனம் எடுத்து பயணிகளுக்கு உதவ முன்வர வேண்டும் எனவும் பயணிகள் கோருகின்றனர்.

(த-405)

# கிளிநொச்சி பொது மைதானத்தில் மெய்வன்மைப் பயிற்சி முகாம்

கிளிநொச்சி,ஓக.24

கிளிநொச்சி மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த 21ஆம், 22ஆம் திகதிகளில் மெய்வன்மைப் பயிற்சி முகாம் நடைபெற்றது. நூறு வீரர்கள் வரையில் கலந்து கொண்ட இப்பயிற்சி நெறியின் ஆரம்பநிகழ்வு கடந்த 21ஆம் திகதி காலை 9.30 மணிக்கு வட மாகாண விளையாட்டுத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சு.கனகராஜா தலைமையில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். தொடர்ந்து மெய்வன்மைப் பயிற்சி வகுப்புக்களும், பயிற்சிகளும் இடம்பெற்றன.

இதில் 60 வரையான கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை மாணவர்களும், 40 வரையான கிளிநொச்சி மாவட்டக் கழக வீரர்களும் பங்குகொண்டனர். கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த கழக வீரர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வுகளில் இலங்கை மெய்வன்மைச் சங்க உபதலைவரும், பயிற்றுவிப்பாளர் சங்கத் தலைவருமான கேணல் மடுகல்ல, கிளிநொச்சி மாவட்ட அதிகாரி லலித் ஜெயசேகரா, கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.குமார், பளைப் பிரதேச செயலர் பிரிவின் விளையாட்டு உத்தியோகத்தர் சி.ஜெயக்குமார், கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.சிவநேசன் உள்ளிட்ட பல பயிற்றுவிப்பாளர்கள் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினர்.

22ஆம் திகதி பிற்பகல் நடைபெற்ற இறுதி நிகழ்வில் யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார். இந்த நிகழ்வில் பங்குபற்றியோருக்கான பயிற்சிச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. கிளிநொச்சிப் பிரதேச இராணுவ உயர் அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர்.

(த-405)




# அதிகாலை பெய்த கடும் மழையால் மீள்குடியேறிய மக்கள் அவலம்

கிளிநொச்சி,ஓக.24

கடந்த 21ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை முதல் வன்னிப் பகுதியில் பெய்த மழையினால் மீள்குடியேறிய மக்கள் பெரும் அவலங்களைச் சந்தித்துள்ளனர்.

மீள்குடியேறிய மக்களில் பலர் கூரைகள் அற்ற வீடுகளுக்குத் தறப்பாள் கூரைகளை அமைத்தும், தற்காலிக தறப்பாள் கொட்டகைகளிலும் அரை குறையாக கூரையிடப்பட்ட வீடுகளிலுமே குடியிருக்கின்றார்கள்.

இதனால் இரவு வேளையில் பெய்த இந்த மழையினால் வீடுகளுக்குள்ளும் தற்காலிக தறப்பாள் கொட்டகைக்குள்ளும் நீர் புகுந்ததால் மக்கள் பெரும் அவலங்களைச் சந்தித்துள்ளனர். அவர்களின் பொருள்கள் பலவும் மழை நீரினால் நனைந்துள்ளன.

ஒரு நாளில் பெய்த மழையினாலேயே பெரும் பாதிப்புக்களைச் சந்தித்துள்ள மக்கள் இனிவரும் மழைகாலங்களில் அதிகளவான அவலங்களைச் சந்திக்க வேண்டி வரும் என ஏங்குகின்றனர்.

வன்னிப் பகுதியில் கூரைகள் அற்ற கட்டடங்களிலும், மர நிழல்களிலும், தறப்பாள் கொட்டகைகளிலுமே அநேகமான பாடசாலைகள் இயங்கி வருகின்றன. தற்போது பாடசாலை விடுமுறைக்காலம் என்பதால் இந்த மழையினால் அவை பாதிப்படையாது விட்டாலும் எதிர்வரும் மழை காலங்களில் மழை பெய்தால் அவற்றை மூட வேண்டிய அபாயநிலை தோன்றும். எனவே மீள் குடியேறிய மக்களின் குடியிருப்புக்கள் தொடர்பிலும் இவ்வாறான பாடசாலைகள் தொடர்பிலும் உரியவர்கள் கூடிய கவனம் செலுத்தி விரைவாக இவற்றுக்கான தீர்வைக் காண வேண்டும் என பொதுமக்கள் கோருகின்றனர்.

(த-405)

# இன்று கொடியேற்றம் காணும் வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள்

கிளிநொச்சி - வட்டக்கச்சி மாயவனூர் ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோயிலின் 2010ஆம் ஆண்டுக்கான பிரமோற்சவம் இன்று (24.08.2010) செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. அதனையொட்டி இவ் ஆக்கம் இங்கு பிரசுரமாகிறது.

*''ஓடிய தேரினில் ஓதியே கீதையை*
*ஊட்டினாயே கண்ணா*
*சாடியே அன்றொரு காளிங்க*
*நர்த்தனம் ஆடினாயே கண்ணா*
*பாடியே பக்தர்கள் கூடியே*
*வாழ்ந்திடும் மாயவனூருறையும்*
*நாடியவர்க்கருள் நல்கிடுவாய்*
*ரங்கநாதனே நாரணனே''*

ஈழ மணித்திரு நாட்டின் வடபால் தொல் பெருமைக்குரிய பல்லோர் புகழும் வல்லிபுர ஆழ்வார் கோயில், பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில், வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் போன்று வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோயிலும் வளர்ந்து வருகிறது எனலாம். இவ்வாலயமானது மூர்த்தி, தலம், தீர்த்தம், தலவிருட்சம் ஆகிய சிறப்புக்கள் கொண்டு அடியவர்களுக்கு அருட்கடாட்சம் வழங்கி வருகிறதெனில் அது மிகையான கூற்றன்று.

இவ்வாலயம் வரலாற்றுச் சிறப்பும், வழிபாட்டுச் சிறப்பும் தன்னகத்தே கொண்டு மிளிர்கிறது. இங்கு மகாவிஸ்ணு அரங்கநாதர் என்ற நாமம் தாங்கியும், மகாலட்சுமி அரங்கநாயகி என்ற நாமம் பூண்டும், ஸ்ரீதேவி - பூமிதேவி சமேதராக நின்ற கோலத்திலும், அதேவேளை சயனக்கோலத்திலும் எம்பெருமான் அருள்பாலித்த வண்ணமுள்ளார். இவ்வாலயம் கருங்கல்லினால் சிற்பவேலைகள் அமைக்கப்பட்ட கருவறையோடு கூடிய மூன்றுதள விமானத்துனத்துடன் ஆலயம் அழகுற அமைக்கப்பட்டுள்ள வட்டக்கச்சிப் பிரதேசம் கிட்டத்தட்ட 1955ஆம் ஆண்டளவில் குடியேற்றம் செய்யப்பட்டது. இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள படித்த இளைஞர் யுவதிகள் இங்கு வந்து குடியேறினர். 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க இந்த இளைஞர்களும் தற்சமயம் ஆலயம் இருக்குமிடத்தில் சிறு குடிலமைத்து அரங்கநாதரின் கண்ணாடிப் படத்தை வைத்து வழிபாடியற்றினர். இதன் பின்னர் சிறு கற்கோயில் அமைத்து 1981ஆம் வருடம் முதலாவது கும்பாபிஷேகம் சிறப்புற இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து நித்திய நைமித்திய பூசைகள் வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்றன. ஒவ்வொரு ஞாயிறுதோறும் [illegible] சங்கீர்த்தனங்கள் இடம்பெற்று வந்ததோடு பக்திமயமான விழாக்களும் நிகழ்த்தப்பட்டன. இவ்விதமான செயல்பாடுகளினால் எம்பெருமான் தன்னை நாடிவரும் பக்தர்களின் குறை தீர்க்கும் வள்ளலாகவும் கருணாமூர்த்தியாகவும் திகழ்கின்றார். இதன் காரணமாக பக்தர்களின் மனங்களில் ஊற்றெடுத்த பேரன்பின் வெளிப்பாடாகவும் எம்பெருமான் பக்தர்களின் எண்ணங்களை நிறைவேற்ற வேணுமென்ற பெருங்கருணையினாலும் அரங்கனுக்கு சுந்தரக் கோயிலமைத்து 2002ஆம் ஆண்டு சிறப்பான கும்பாபிஷேகம் நடைபெற்றது. அன்றிலிருந்து இன்றுவரை பல திருப்பணிகள் நிறைவேறியுள்ளன. சென்ற காலத்தில் நடைபெற்று முடிவடைந்த யுத்தத்தினால் மக்கள் இடம்பெயர நேரிட்டது. இக்காலத்தில் மக்கள் அவரை வழிபட முடியாமலும் பூசைகளை நிறைவேற்ற முடியாமலும் தடைப்பட்டிருந்தது. இவ்வாலயத்தின் வரலாற்றுச் சிறப்பை நாம் உற்றுநோக்கினால் இக்குடியேற்ற காலத்தின் முன்பு தற்சமயம் தீர்த்தமாக இருக்கின்ற குளத்து நீர் பருக காட்டு மிருங்கள் வருவது வழக்கம். அம்மிருகங்களை வேட்டையாடுவதற்கு அயல் கிராமங்களில் இருந்து வேட்டைக்காரர் வருவதும் வழக்கம். அவர்கள் பெரும்பாலும் [illegible] வழியாக வரும்பொழுது பாதையை மாறி காட்டில் அலைந்து திரிவார்களாம். அப்படியான வேளையில் ஒரு தலை நரைத்த கிழவர் தாடியுடன் காடு மாறியவர் முன்னே நடந்து செல்வாராம். அவரைப் பின் தொடர்ந்தால் குளத்தை வந்தடையலாமாம். குளத்தை வந்து அடைந்தவர்கள் தங்கள் இருப்பிடம் செல்ல வசதியாக இருக்குமாம். அதன்பின் அக்கிழவர் மறைந்து விடுவாராம். இதேபோன்று இப்பகுதியில் ஒரு அழகிய வெள்ளைப் பசுமாடு புல்மேய்ந்து கொண்டிருக்குமாம். அதன் அருகே சென்றால் அது ஓடிச் சென்று பழைய ஆலயம் இருந்த பகுதிக்குச் சென்று மறைந்து விடுமாம். இப்படியான கதைகளைக் கேள்வியுற்ற மக்கள் இவ்வாலயத்தில் கிருஸ்ண பகவானைப் பிரதிஷ்டை செய்து வழிபடுவதுதான் சிறந்தது என்று முடி வெட்டுத்தது இறைவாக்கே அல்லாது பிறிதொன்றுமில்லை. இவ்வாறாக பழமையும் புதுமையும் ஒன்றுசேர எம்பெருமானுடைய பேரருங்கருணை மக்கள் மத்தியில் பரவிக்

**மு.தியாகராசா**
**செயலாளர்**
**ஆலய பரிபாலனசபை**

கிடக்கின்றது. இவ்வாலயத்தில் ஞாயிறு தோறும் சிறப்பு வழிபாடும், பூசைகளும், பஜனையும், அன்னதானமும் நடைபெறுகிறது. வரலட்சுமி நோன்பு பூசைகள் வருடா வருடம் சிறப்பாக நடைபெறுகிறது. ஆவணியில் கிருஸ்ண ஜெயந்தியைத் தோராகக் கொண்ட மகோற்சவத் திருப்பாவை விழாவும் சிறப்பாக நடைபெறுகிறது. இவ்வாண்டும் இவ்விழாக்கள் சிறப்புற நடைபெற திருவருட்கடாட்சம் கிடைத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

01.09.1993

* பாரிஸ் மற்றும் லண்டன் ஆகிய நகரங்களில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுடன் தாம் நடத்திய பேச்சுக்களின் பயனாக சமரசத்திட்டம் ஒன்றைதாம் கொண்டு வந்திருப்பதாக அமைச்சர் தொண்டமான் கொழும்பில் தெரிவிப்பு.
* சமஷ்டி அரசமைப்பு முறையை பெரிய சிங்களக் கட்சிகள் ஏற்றுக்கொள்ளாத வரை எந்தத் தீர்வும் சாத்தியமாகாது என விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு.

02.09.1993

* மண்கிண்டிமலை மற்றும் கிளாலி, பருத்தித்துறை கடற்தாக்குதல்கள் போன்று பெரியதாக்குதல்களை விடுதலைப் புலிகள் இன்னும் மூன்று மாதங்களுக்குள் மீண்டும் நடத்துவர் என எதிர்பார்க்கலாம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அச்சம் தெரிவிப்பு.
* காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக என்ற போர்வையில் அம்பாறை மாவட்டத்தில் சிங்களவர்களுக்கும் துப்பாக்கிகள் வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகக் குற்றச்சாட்டு.

03.09.1993

* திடீர்த்தாக்குதல்கள், அதற்கான முன்னேற்பாடுகள் குறித்து விழிப்பாக இருக்குமாறு கொழும்பு நகரில் பொதுமக்களுக்கு அரசு வேண்டுகோள் விடுப்பு.
* கூட்டுப்படைத் தலைமையகத்தின் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவை தொடர்ந்தும் அப்பதவியில் நீடிக்குமாறு ஜனாதிபதி விஜேதுங்க அறிவிப்பு.

04.09.1993

* வடக்குப் பிரதேசக் கடற்பரப்பில் வள்ளங்கள் மற்றும் படகுகள் பயணிப்பதற்கு இலங்கை அரசு தடைவிதித்துள்ளதாகத் தெரிவிப்பு.
* காங்கேசன்துறை சிமெந்து ஆலையை எதிர்வரும் டிசெம்பர் மாதத்துடன் மூடிவிடவும், அதனால் தொழிலை இழப்போருக்கு நட்டஈடு வழங்குவது எனவும் சிமெந்து கூட்டுத்தாபன தலைமை அலுவலகம் ஏற்பாடு செய்து வருவதாகத் தெரிவிப்பு.

05.09.1993

* வடக்குப் பிரதேசக் கடற்பரப்பில் வள்ளங்கள் மற்றும் படகுகள் பயணிப் பது தடைசெய்யப்பட்டபோதும் அதனை அமுல் செய்யத்தக்க பலம் அரச கடற்படைக்கு இல்லை என இராணுவப் பகுப்பாய்வாளர்களை மேற்கோள்காட்டி பி.பி.ஸி வானொலி விமர்சிப்பு.
* இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண் பது குறித்து ஜனாதிபதி விஜேதுங்காவுடனும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுடனும் அமைச்சர் தொண்டமான் கலந்தாலோசனை மேற்கொண்டதாகத் தெரிவிப்பு.

06.09.1993

* யாழ். குடாநாட்டில் அரசு நடத்தும் விமானக்குண்டுத் தாக்குதல்களை தடுக்கக் கூடிய அளவுக்கு விடுதலைப் புலிகள் பலமடையலாம் என இராணுவ வட்டாரங்களில் கருத்து நிலவுவதாக "த ஐலண்ட்" பத்திரிகை தெரிவிப்பு.
* இலங்கையில் சமாதானத்தைக் கொண்டு வர யாழ்ப்பாணத்திற்கான விஜயம் உதவுமானால் அமைச்சர் தொண்டமானுடன் நானும் யாழ்ப்பாணம் செல்லத் தயாராக இருக்கிறேன் என சபாநாயகர் எம்.எச். முஹம்மது தெரிவிப்பு.

07.09.1993

* இதுவரைகாலமும் வடக்கு, கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி வந்த கூட்டுப்படைகள் நடவடிக்கைகள் கட்டளையகம் நேற்று ஜனாதிபதியால் கலைக்கப்பட்டதாக அறிவிப்பு.
* இராணுவத்திற்கு அண்மையில் ஆள் திரட்டியபோது தென்பகுதி சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில்சேர போதுமான அளவு முன்வரவில்லை என "த ஐலண்ட்" பத்திரிகை தெரிவிப்பு.

08.09.1993

* போராட்டத்தில் தமிழ் மக்களின் உறுதிப்பாடு நீடிப்பதன் மூலமே அரசின் நிலைப்பாட்டை மாற்றலாம் என அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு.
* இலங்கையின் வடக்கு கடல் எல்லையில் படகுகள் செல்லக்கூடாது என இலங்கை அரசு பிறப்பித்துள்ள அவசரச் சட்டம் பற்றி இந்திய மத்திய அரசு பரிசீலித்து வருவதாகத் தெரிவிப்பு.

09.09.1993

* விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல்கள் தொடரக்கூடும் என்ற அச்சம் காரணமாக முப்படைகளும் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிப்பு.
* மட்டக்களப்பு மாவட்டத்தில் 1990 ஆண்டு யுத்தம் ஆரம்பமான காலம் முதல் கடந்த மூன்று வருடங்களில் சுமார் 3 ஆயிரம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவிப்பு.

10.09.1993

* ஈழத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு சர்வதேச ரீதியான அங்கீகாரம் கிடைப்பதற்கு உதவுமாறு தமிழர்களின் சர்வதேச கூட்டிணைப்பு அமைப்பு பிரித்தானிய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிப்பு.
* மலையகத்தினுள் பதுளை ஊடாக ஆயுதம் தரித்த ஆள்கள் ஊடுருவல் செய்துள்ளதாக "சண்டே ரைம்ஸ்" பத்திரிகை தெரிவிப்பு.

11.09.1993

* இலங்கையில் அமைதித் தீர்வுக்கு ஒரே வழி பேச்சுவார்த்தையே எனவும், அதற்கு உதவ பிரிட்டன் தயாராகவுள் ளதாகவும் பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் தெரிவிப்பு.
* இந்த ஆண்டின் இறுதியில் கிழக்கிலிருந்து விடுதலைப் புலிகள் வெளியேற்றப்பட்டுவிடுவர் எனவும், அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் வடபகுதியும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுவிடும் எனவும் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்தின தெரிவிப்பு.

12.09.1993

* ஆளும் ஐக்கியதேசியக் கட்சிக்குள் என்றும் இல்லாதவாறு உட்கட்சிப் பூசல் வலுத்துவருவதாக அரசியல் அவதானிகள் தெரிவிப்பு.
* வடக்கு - கிழக்கில் நிலவுவது இனப் பிரச்சினை அல்ல; அங்கு நடப்பது பயங்கரவாதப் பிரச்சினையே என்று அண்மையில் ஜனாதிபதி விஜேதுங்க தெரிவித்த கருத்துக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி கடுமையான கண்டனம் தெரிவிப்பு.

13.09.1993

* கொழும்பு நகரில் கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் இரவு வேளையில் தேடுதல் நடத்திய படையினர் பல தமிழ் இளைஞர்களையும் யுவதிகளையும் விசாரணைக்காகக் கூட்டிச் சென்றுள்ளதாகத் தெரிவிப்பு.
* தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களையும் வெடிமருந்துப் பொருள்களையும் குவிக்க முயற்சிகள் மேற்கொண்டு வருவதாக தமிழக சட்டப்பேரவையின் காங்கிரஸ் கட்சித் தலைவர் தெரிவிப்பு.

14.09.1993

* இலங்கை அரசு வடபகுதிக் கடற்பிராந்தியத்தில் படகுகள், கப்பல்கள் செல்வதற்கு தடைவிதித்துள்ளதை இந்திய அரசு ஆட்சேபித்துள்ளதாகத் தெரிவிப்பு.
* இஸ்ரேலினால் கைப்பற்றப் பட்ட காஸா நகருக்கு மட்டுப்படுத்தப்பட்ட தன்னாட்சி வழங்கும் இஸ்ரேலிய - பலஸ்தீன ஒப்பந்தம் நேற்றுக் கையெழுத்தானதாகத் தெரிவிப்பு.

15.09.1993

* வடபகுதி மீது பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வது தொடர்பாக இராணுவத் தளபதிக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குமிடையில் கருத்து மோதல் நிலவுவதாகத் தெரிவிப்பு.
* கிழக்கு மாகாணத்தை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர இராணுவம் எடுக்கும் முயற்சி வெற்றிபெறப் போவதில்லை என சர்வதேச தொண்டர் அமைப்பொன்றின் பிரதிநிதி யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவிப்பு.

# தர்மலிங்கத்தின் நினைவுதினம்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கத்தின் 25ஆவது நினைவுதினம் அடுத்த மாதம் 2 ஆம் திகதி அவரது தொகுதியான மானிப்பாய் தொகுதியில் அனுஷ்டிக்கப்படவிருக்கிறது.

தாவடி மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள அவரது நினைவு தூபிக்கு முன்பாக அனுஷ்டிக்கப்படவுள்ள நினைவு தினத்தில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவரும், அன்னாரின் புதல்வருமான அ.சித்தார்த்தன் உட்பட கட்சிப் பிரமுகர்கள் கலந்துகொள்வார்கள். ஏற்பாட்டுக் குழுவினர் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர். (த-115)

# வங்கிகள், நிதி நிறுவனங்கள்....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது வளர்ச்சியடைந்து வருகின்றது. யாழ்ப்பாணத்தில் இதற்கான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளோ இல்லை.

எனவே சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க மத்திய வங்கி எவ்வாறான செயற்திட்டங்களை முன்னெடுக்க உள்ளது?

ப: நிச்சயமாக தற்போது யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல முழு இலங்கையிலுமே சுற்றுலாத்துறை வளர்ச்சி கண்டு வருகின்றது. இது மிகப் பெரிய இலாபம் தரக்கூடிய தொழிலாகும். இதற்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை யாழ்ப்பாணத்தில் உருவாக்கி பின்னர் அதில் ஈடுபடும் துறையினருக்கு, ஊக்குவிக்க கடன்திட்டங்களை வழங்க மத்திய வங்கி நடவடிக்கை எடுக்கும்.

இலங்கையின் அபிவிருத்தியும், பொருளாதாரத்திலும் பெரும் பங்கு வகிக்கும் சுற்றுலாத்துறையை மேம்படுத்த மத்திய வங்கி பல்வேறு செயற்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. நிச்சயமாக யாழ்ப்பாணத்திலும் அத்தகைய முன்னேற்ற நடவடிக்கையினை மேற்கொள்ளும்.

கே:யாழ்ப்பாணத்தின் பொருளாதார வளர்ச்சி வீதம் எவ்வாறான் நிலையில் உள்ளது? எவ்வாறான பொருளாதார மாற்றத்தினை எதிர்பார்க்கிறீர்கள்?

ப: தற்போது தான் இங்கு அபிவிருத்திப் பணிகள் மெல்ல மெல்ல மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இங்கு தற்போது GDP- 3.6% வீதமாக உள்ளது. இது வளர்ச்சியடைந்து வருகின்றது. இன்னும் இரண்டு வருடங்களில் இத்தகையபோக்கு இரண்டு மடங்காகும். ஏனெனில் தற்போது யாழ்ப்பாணத்தைப் பார்க்கும்போது அவ்வாறுதான் தோன்றுகின்றது. அபிவிருத்திப் பணிகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. எனவே நிச்சயமாக யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் இரண்டு வருடங்களில் தற்போதையதை விட இரண்டு மடங்காகும். *

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.
## கீரிமலை பெண்கள் கேணியின் காவலாளி பதவி வெற்றிடம் நிரப்புதல்

வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் கீரிமலை பெண்கள் கேணியின் காவலாளி பதவிக்கான வெற்றிடம் நிரப்புவதற்குப் பொருத்தமான தகைமையுடைய பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ விண்ணப்பதாரரின் வயதெல்லை:
18-45 இற்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
(ஏற்கனவே அரச சேவையில்/மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு மேல் வயதெல்லை ஏற்புடையதல்ல)

★ ஆகக்குறைந்த கல்வித் தகைமை:
எட்டாம் வகுப்பு சித்தியடைந்திருத்தல்

★ விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாகவும் வலிகாமம் வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

★ தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சையை நடத்துவதன் மூலம் வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

★ முழுமையாகப் பூரணப்படுத்தப்படாது சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

★ தகுதியற்ற விண்ணப்பங்களை நிராகரிக்கும் அதிகாரம் நேர்முகப் பரீட்சைச் சபைக்கு உண்டு.

★ விண்ணப்பப் படிவங்களை வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்று, 07.09.2010 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்குக் கிடைக்கக் கூடியதாக "செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

★ உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர்,
வலிகாமம் வடக்கு
பிரதேச சபை,
காங்கேசன்துறை.
23.08.2010

(சி/570124)

திருமதி யோகேஸ்வரி காசிலிங்கம்,
செயலாளர்,
வலிகாமம் வடக்கு
பிரதேச சபை,
காங்கேசன்துறை.

## தேவை

நல்லொழுக்கமும், நல்ல அனுபவமும் உள்ள Hiace வான் சாரதி உடன் தேவை. (40 வயதுக்கு மேற்பட்டவர்) தொடர்பு: 0775450190

## வாடகைக்கு

கொக்குவில் பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (3 அறை, 2குசினி)
தொடர்புகளுக்கு: 0777699787,
0770770529

## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வின் எந்த சந்தர்ப்பத்திலும் உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மில் இருந்து விலகாமல் என்றும் நிலைத்திருப்பேன் என உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகிறேன்.

*ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி!

* உலக இரட்சகரான இயேசுவே நீசப்பாவிகளின் மேல் அளவில்லாத இரக்கம் உள்ளவரே, முடியாத காரியங்களை கைகூடப் பண்ணியவரே எங்கள் இயேசுவே, எங்கள் மன்றாட்டை கேட்டருளும்.

(மூன்று முறை சொல்லவும் மூன்று நாள்கள்)
(இச்செபத்தைப் பிரசுரிப்பதாக வாக்கு பண்ணவும்)

அடியான்.

## வீடு விற்பனைக்கு

இளவாலை, சித்திரமேழி வைரவர் கோயில் ஒழுங்கையில் பயன்தரும் மரங்களுடன் சகல வசதிகளையும் கொண்ட 5½ பரப்பு காணியும் வீடும் உண்டு.
தொடர்பு: 077 0366385
077 5796460
0213002371

## தவறிவிட்டது

கைதடி, நாவற்குழி தெற்கைச் சேர்ந்த (கோயிலாக் கண்டித்துறை) தவராசா அருந்ததி என்பவரது தே.அ.அ (80854 2951 V) சாவகச்சேரி சிவன்கோயிலடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற் குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். அல்லது 0779581368 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

## காணி விற்பனைக்கு

கச்சாய் வீதியில் (சாவகச்சேரி நகரத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில்) பயன்தரு மரங்களுடன் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொ.பே: 077 9357779
065 7912950
071 2108575

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுவேலி விக்னேஸ்வரா, ஆவரங்கால் மத்தி கரப்பந்தாட்ட இறுதியாட்டத்திற்குத் தகுதி

யாழ்ப்பாணம்,ஓக.24

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் மோதுவதற்கு அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகமும் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகமும் தகுதி பெற்றுள்ளன.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 'ஏ' பிரிவு ஆண்களுக்கான அரையிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

றக்கா வீதியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்க மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டங்களில், முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் மோதியது.

மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் 2:1 என்ற செற்கணக்கில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டு இறுதியாட்டத்திற்குள் நுழைந்தது.

அடுத்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமும் அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகமும் மோதின.

இதில் அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் தன்னை எதிர்த்தாடிய ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை 2:1 என்ற செற்கணக்கில் வெற்றிகொண்டு இறுதியாட்டத்திற்குத் தகுதிபெற்றது. (6-23)



தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகம் தீவக ரீதியில் நடத்திய 'செற்றப்' முறையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் சம்பியன் வென்ற ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணியைப் படத்தில் காணலாம். (படம்: 325)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.24

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் 2010 ஆண்டுக்கான தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க் கிழமை உடுவில் ஆலடி இந்து விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குகொள்ளவுள்ள அணிகளின் விபரங்கள் வருமாறு:

பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுவில் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இணுவில் இந்து விளையாட்டுக்கழக அணி களமிறங்குகின்றது.

பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலிட்டி ஒற்றுமை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (6-23)

## தாச்சிச் சுற்றுப் போட்டி விநாயகர் வி.க. வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 24

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்திய 2010 ஆண்டிற்கான தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த சனிக்கிழமை உடுவில் ஆலடி இந்து விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் கட்டுடை விநாயகர் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது.

கட்டுடை விநாயகர் விளையாட்டுக்கழக அணி எதிர்த்து விளையாடிய பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழக அணியை 5:3 பழங்கள் என்ற அடிப்படையில் வெற்றிகொண்டது. (6-23)




## விளையாட்டு அமைச்சின் எல்லேப் போட்டி; ஊவா அணியை வென்றது வடமாகாணம்

வலி.வடக்கு,ஓக.24

களத்தடுப்பிலும் ஓட்டம் பெறுவதிலும் அதிரடி காட்டிய வடமாகாண எல்லே அணி ஊவாமாகாண அணியை இலகுவாக வீழ்த்தியது.

விளையாட்டுத்துறை அமைச்சால் மாகாண அணிகளுக்கு இடையே நடத்திவரும் ஆண்களுக்கான எல்லேப் போட்டியில் வடமாகாண அணியும் ஊவா மாகாண அணியும் மோதின.

'கொழும்பு றீட் அவெனியூ' மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய வடமாகாண அணி 23 ஓட்டங்களைப்பெற்ற நிலையில் அனைவரும் ஆட்டமிழந்தனர்.

பதிலுக்கு 24 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஊவாமாகாண அணி முதல் இன்னிங்ஸில் 8 ஓட்டங்களைப்பெற்ற நிலையில் அனைவரும் ஆட்டமிழந்தனர்.

இரண்டாவது இன்னிங்ஸிலும் ஆடிய ஊவாமாகாண அணி 7 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அனைவரும் ஆட்டமிழந்தனர். ஆட்ட முடிவில் வடமாகாண அணி 23:15 எனும் ஓட்ட அடிப்படையில் 8 ஓட்டங்களால் வடமாகாண அணி ஊவா மாகாண அணியை வெற்றிகொண்டது. (6-86)

## பாடசாலைகளின் கிரிக்கெட் போட்டி; யாழ்.இந்துக் கல்லூரிக்கு இலகு வெற்றி

வலி.வடக்கு,ஓக.24

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கல்கோபன், திவாகுகன் ஆகியோர்பெற்ற அரைச் சதங்களின் உதவியால் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியை 123 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம், யாழ். மாவட்டப் பாடசாலைகள் 15 வயதுப் பிரிவினருக்கு இடையே நடத்திவரும் போட்டி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களையும் இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றது.

கல்கோபன் 6 பௌண்டறிகளுடன் 6, திவாகுகன் 8 பௌண்டறிகளுடன் 50, சஜிகன் 38, சாரங்கன் ஆட்டமிழக்காது 2 பௌண்டறிகள், சிக்ஸர்களுடன் 34, மதுசன் 20 ஓட்டங்களைப்பெற்றதுடன் உதிரிகளாக 35 ஓட்டங்கள் கிடைத்தன.

சென். பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த கஜேந்திரன் 10 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 34 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும்-

பானுஜன் 8 ஓவர்கள் பந்து வீசி 49 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் திசாந் 21 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட் டையும் கைப்பற்றினர்.

251 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 35.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் எட்வின் 44, திகானந் 22,கபிலன் 15 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 34 ஓட்டங்களும் கிடைத்தன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ருக்ஸ்மன் 8 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 16 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும்-

சாரங்கன் 7.4 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும்-

கௌசிகன், சிந்துஜன் தலா 14,15 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (6-86)

## கரப்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், ஓக.24

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இருபாலாருக்குமான இந்தச் சுற்றுப் போட்டி றக்கா வீதியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்க மைதானத்தில் இடம்பெறும் எனக் கழகத்தின் செயலர் எஸ்.மனோகரன் தெரிவித்துள்ளார். (6-23)

## 1500 மீற்றர் ஓட்டத்தில் சாதனை

வலி.வடக்கு,ஓக.24

வடமாகாண விளையாட்டுத்திணைக் களத்தால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடைபெற்ற தடகளப் போட்டிகளில் 1500 மீற்றர் ஆண்களுக்கான ஓட்டப் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த என்.சிவனேசன் 4:12:7 செக்கன்களில் ஓடிய சாதனை பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளின் சிறந்த பெறுபேறுகளின் அடிப்படையில் சாதனைப் பதிவுப் பட்டியல் தயாரிக்கப்படுகின்றது.

### சாதனைகளின் பதிவுகள்

2007 ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த என். சிவனேசன் 4:12:7 செக்கன்களில் ஓடியும்-

2009 ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த என்.சிவனேசன் 4:20:1 செக்கன்களில் ஓடியும்-

2010 ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த டி.ஜி.எல்.ஏ.பன்னவல 4:13:5 செக்கன்களில் ஓடியும் பெறுபேறுகளைப் பதிவு செய்துஇருந்தார்கள்.

இதன் அடிப்படையில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த என். சிவனேசனின் 4:12:7 செக்கன்களில் ஓடியது மாகாணத்தின் புதிய சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது. (6-86)



யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரை இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி, அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணி ஆகியன மோதியபோது:.......

(படங்கள்: தமிழிளியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் திரைப்படத் துறையினருக்கு 15 ஆயிரம் வீடுகள் கட்டப்படும்;

## முதல்வர் கருணாநிதி அறிவிப்பு



சென்னை,ஓக.24

காஞ்சிபுரம் மாவட்டம் பையனூரில் திரைப்படத் துறையினருக்கு அரசு வழங்கியுள்ள நிலத்தில் 15 ஆயிரம் வீடுகள் கட்டப்படும் - என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்தார்.

திரைப்படத் துறையினருக்கு குடியிருப்புகள் கட்டுவதற்காக பையனூரில் 96 ஏக்கர் நிலத்தை தமிழக அரசு வழங்கியுள்ளது. இந்த இடத்தில் 'கலைஞர் நகர்' என்ற பெயரில் குடியிருப்புகள் கட்டப்பட உள்ளன. அதற்கான அடிக்கல் நடும் விழா, சென்னையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

விழாவில் முதல்வர் கருணாநிதி பேசியவை வருமாறு-

திரைப்படத் தொழிலாளர்களின் குடும்பத்தினருக்காக 15 ஆயிரம் வீடுகள் கட்ட திரைப்படத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த வி.சி.குகநாதன், ராம.நாராயணன் போன்றவர்கள் முயற்சிகள் மேற்கொண்டனர். அவர் கள் எடுத்த முயற்சிக்கு வெற்றி கிடைத்துள்ளது.

நான் கலைத்துறையில் இருந்து அரசி யலுக்கு வந்தவனா, அரசியலில் இருந்து கலைத்துறைக்கு வந்தவனா என்ற கேள்விக்கு இன்னும் பல பேருக்கு விடை தெரியவில்லை. கலை, அரசியல் இரண்டையும் வெவ்வேறாகப் பார்க்காமல், கலையை எந்த அளவுக்கு அரசியலுக்குப் பயன்படுத்த வேண்டுமோ அந்த அளவுக்குப் பயன்படுத்தி, நானும் எனது இயக்கமும் (தி.மு.க.) அரசியலில் வெற்றி களைப் பெற்றுள்ளோம்.

ஸ்ரூடியோக்களில் பெரிய ஆடம்பரமான வீடுகளையும், மாளிகைகளையும் அமைக்கிறார்கள். ஆனால், அதுபோன்ற இடங்களில் வாழக்கூடிய வாய்ப்போ, தகுதியோ அவர்களுக்குக் கிடைக்க வில்லை. அப்படிக் கிடைக்காத காரணத்தால், நம்முடைய திரைப்படத் தொழிலாளர்கள் தங்களது சங்கத்தின் சார்பில் அதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். திரைப்படத் துறையினர் வைத்த கோரிக்கைகள் அனைத்தையும் முடிந்த வரையில் தி.மு.க. அரசு நிறைவேற்றி தந்துள்ளது. இவற்றைச் சொல்வதால், கருணாநிதி சினிமாவில் 60 ஆண்டுகளாக இருக்கின்ற காரணத்தால், இவற்றைச் செய்கிறார் என்று யாரும் கருதக் கூடாது.

கலைத்துறையினருக்கும், எனக்கும் இனிய தொடர்பு இழையோடிக் கொண்டிருக்கிறது.

- இப்படி அவர் கூறினார்.

# இந்தியச் செய்திகள்

# சென்னை அரச வைத்தியசாலைக்கு முத்துக்குமாரின் பெயரைச் சூட்டுக!

## நாம் தமிழர் இயக்கம் கோரிக்கை



சென்னை,ஓக. 24

இலங்கைத் தமிழர்களுக்காக தன் உயிரை விட்ட முத்துக்குமார் நினைவாக பழைமை வாய்ந்த சென்னை அரச வைத்தியசாலைக்கு அவரது பெயரைச் சூட்ட வேண்டும் என நாம் தமிழர் இயக்கத்தின் செய்தித் தொடர்பாளர் கூத்தன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

தமிழர் தம் இனமானம் காக்கவும், தன்மானம் மீட்கவும் தன் இன்னுயிரை ஈந்தவன் முத்துக்குமார். 'எந்த அரசியல் கட்சியிலும் தன்னை இணைத்துக்கொள்ளாமல் தமிழர் நலனுக்காக தன்னை அர்ப்பணித்தவன் முத்துக்குமார்.

தமிழ்நாட்டிற்கு தொடர்பற்றவர்கள் பெயரெல்லாம் தமிழ் நாட்டின் வீதியெங்கும், சூட்டப்பட்டுள்ள நிலையில் முத்துக்குமார் பெயர் சூட்டப்படுவதே மிகப் பொருத்தமானது.

ஆகவே, முத்துக்குமார் பெயரைச் சென்னை அரச வைத்தியசாலைக்குச் சூட்ட வேண்டும் என நாம் தமிழர் கோரிக்கை வைக்கின்றது. இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி நாம் தமிழர் வீதிக்கு வந்து போராடவும் தயாராக இருக்கிறது.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 10 ஆண்டு தண்டனையை முடித்த கைதிகளை விடுவிக்க வேண்டும்

## தமிழக அரசிடம் வைகோ கோரிக்கை



சென்னை,ஓக.24

அண்ணா பிறந்த நாளையொட்டி 10 ஆண்டுகள் தண்டனையை முடித்த கைதிகளை தமிழக அரசு விடுதலை செய்ய வேண்டும் - என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

சிறைவாசிகள், அதிலும் ஆயுள் தண்டனை அடைந்தோர் பத்தாண்டுகள் தண்டிக்கப்பட்டோர் சில குற்றப் பிரிவுகளில் தண்டனை பெற்றதைக் காரணம் காட்டி விடுவிக்கப்படாமலே சிறையில் வாடுகின்றனர். பல சிறைவாசிகள் 15 ஆண்டுகள் கடந்தும் ஏன் 20 ஆண்டுகள் கடந்தும் சிறையில் இருக்கின்றனர்.

இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் 14 ஆண்டுகளுக்கு மேல் கைதிகளின் சிறைவாசத்தை நீடிக்க வேண்டும் என்ற சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்தில் வந்தபோது அதனைக் கடுமையாக எதிர்த்து நாடாளுமன்றத்தில் உரையாற்றினேன். நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட இச்சட்டத் திருத்தத்தில் அதனை எதிர்த்து கருத்துச் சொன்னது நான் மட்டுமே. பொது மன்னிப்பில் குற்றப்பிரிவுகளைக் காட்டி விடுவிக்கப்படாத சிறைவாசிகளை விடுவிக்க அரசு முன்வர வேண்டும்.

பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் விழா வருகிறது. பத்து ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருப்போர் விடுவிக்கப் படவேண்டும். பரோல் விடுப்பில் சென்று குறிப்பிட்ட நாளில் திரும்பாதவர்களுக்கு ஒருநாள் இருநாள் தாமதமாகிவிட்டது என்று காரணம் காட்டி அவர்கள் விடுதலை பெற முடியாத இன்னலுக்கு ஆளாக்கும் நடைமுறையை மாற்றி, அவர்களையும் மனிதாபிமானத்தோடு விடுதலை செய்ய தமிழக அரசு முன் வரவேண்டும்.

- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அணு விபத்து இழப்பீட்டுப் பிரேரணை நிறைவேறுவதில் மீண்டும் சிக்கல்நிலை

## கடைசி நேரத்தில் செய்த திருத்தத்துக்கு பா.ஜ.க. எதிர்ப்பு

புதுடில்லி, ஓக.24

அணு உலை விபத்து இழப்பீட்டுச் சட்டமூலத்தில் மத்திய அரசு கடைசி நேரத்தில் செய்துள்ள 18 திருத்தங்கள் குறித்து ஆய்வு செய்யப்போகிறது என பா.ஜ.க. தெரிவித்துள்ளது.

அமெரிக்காவுடன் இந்தியா செய்துள்ள அணுசக்தி ஒப்பந்தம் முழுமையாக செயற்பட வேண்டும் என்றால் இந்தியாவில் பன்னாட்டு நிறுவனங்கள் மூலமாக அணு உலைகள் அமைக்கப்பட வேண்டும். அதன் ஒரு கட்டமாக, அணுஉலைகளில் விபத்து ஏற்பட்டால் இழப்பீடு வழங்குவது தொடர்பான சட்டத்தை மத்திய அரசு தயாரித்துள்ளது.

அதன்படி, அணுஉலைகளை நடத்தும் நிறுவனங்கள் ரூபா 500 கோடி வரை இழப்பீடு அளித்தால் போதும் என்றும் மீதி பணத்தை மத்திய அரசு அளிக்கும் என்றும் கூறப்பட்டது. அதற்கு பா.ஜ.க. மற்றும் இடதுசாரி கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால், இழப்பீடு அளவை ரூபா 1,500 கோடியாக மத்திய அரசு அதிகரித்தது. அதன் தொடர்ச்சியாக பிரேரணையை ஆதரிக்க பா.ஜ.க. முன்வந்தது.

இதற்கிடையே, அணு உலைகள் விபத்து இழப்பீடு சட்டப்பிரேரணையில் கடைசி நேரத்தில் மத்திய அரசு சில திருத்தங்களை செய்துள்ளது. மொத்தம் 18 திருத்தங்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை அன்று மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. அதில் ஒரு திருத்தத்தில் உள்ள வார்த்தைகளின் படி பார்க்கும்போது, விபத்து சேதத்துக்கான பொறுப்புணர்ச்சி மற்றும் கடமையில் இருந்து அணு உலைகளை தொடங்கும் நிறுவனத்துக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இந்த திருத்தம் தவிர, மேலும் 17 திருத்தங்களுடன் வரும் 25 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அந்தச் சட்டத்தை தாக்கல் செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இதையடுத்து, அந்தப் பிரேரணையில் உள்ள ஒவ்வொரு வார்த்தைகளையும் முற்றிலுமாக ஆய்வு செய்தபிறகே முடிவு எடுக்கப்போவதாக பா.ஜ.க. அறிவித்துள்ளது.

இதுகுறித்து பா.ஜனதா மூத்த தலைவரும் புதுடில்லி மேல்சபை எதிர்க்கட்சி தலைவருமான அருண் ஜெட்லி கூறியவை வருமாறு -

இந்தச் சட்டப் பிரேரணை தொடர்பான அனைத்துப் பக்கங்களையும் நாங்கள் ஆய்வு செய்து வருகிறோம். மேலெழுந்தவாரியாக பார்த்தபோது, ஏற்கனவே நாங்கள் ஒப்புக் கொண்டதில் இருந்து வேறுபாடுகள் இருப்பது தெரிகிறது. பிரேரணையில் தற்போது வடிவமைக்கப்பட்டுள்ள வார்த்தைகளின் வாயிலாக பார்த்தால், அணு உலைகளில் ஏற்படும் விபத்துக்கு அணு உலையை நடத்தும் நிறுவனங்கள் பொறுப்பாக வேண்டியதில்லை என்பது போன்ற அர்த்தத்தை கொண்டுள்ளது.

திருத்தப்பட்டுள்ள பிரேரணையின் அனைத்து அம்சங்களையும் தீவிரமாக ஆய்வு செய்த பிறகு, பா.ஜ.க. தனது கருத்தை தெரிவிக்கும். - இப்படி அவர் தெரிவித்தார்.

அதேநேரத்தில், இப்பிரேரணையை எதிர்க்கப் போகிறோம் என இடதுசாரிக் கட்சிகள் அறிவித்துள்ளன.

# காதலி சுனந்தாவை மணந்தார் முன்னாள் அமைச்சர் சசிதரூர்!

## கேரள பாரம்பரிய முறைப்படி நடந்தது

பாலக்காடு,ஓக.24

முன்னாள் மத்திய அமைச்சர் சசிதரூர், தனது காதலி சுனந்தா புஷ்கரை நேற்று முன்தினம் திருமணம் செய்தார். கேரளாவில் உள்ள அவருடைய பூர்வீக வீட்டில் இந்து நாயர் பாரம்பரிய வழக்கப்படி திருமணம் நடைபெற்றது.

ஐ.பி.எல். கொச்சி கிரிக்கெட் அணி ஏல விவகாரத்தில் காதலி சுனந்தா புஷ்கருக்கு உதவி செய்ததால் மத்திய அமைச்சர் பதவியை இழந்தவர் சசிதரூர். கேரள மாநிலம் திருவனந்தபுரம் தொகுதியில் இருந்து காங்கிரஸ் சார்பில் வெற்றி பெற்ற அவர், கடந்த ஏப்ரல் மாதம் தனது பதவியை இராஜினாமா செய்தார். அதன் பின்னர் தனது காதலி சுனந்தாவுடன் வெளிப்படையாகவே சுற்றி வந்த அவர், முறைப்படி திருமணம் செய்யத் தீர்மானித்தார்.

அதன்படி, கேரள மாநிலம் பாலக்காடு அருகே உள்ள அவருடைய சொந்தக் கிராமமான எலவஞ்சேரியில் உள்ள வீட்டில் நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியளவில் திருமணம் நடைபெற்றது.

கேரளாவில் உள்ள இந்து நாயர் வழக்கப்படி இந்தத் திருமணம் நடந்தது. சசி



தரூரின் தாய்வழிப் பாட்டியான 94 வயது ஜெயசங்கரி அம்மா முன்னிலையில் சுனந்தா கழுத்தில் சசிதரூர் தாலி கட்டினார்.

பின்னர், மணமக்கள் இருவரும் மாலை மாற்றிக்கொண்டனர். மணமகள் சுனந்தாவுக்கு புடைவையைத் திருமணப் பரிசாக சசிதரூர் வழங்கினார். இந்தத் திருமணத்துக்கு சசிதரூர் தாயார் லில்லி தரூர், சசிதரூரின் முதல் மனைவிக்கு பிறந்த மகன்கள் ஈஷான் மற்றும் கனிஷ்க், சசிதரூரின் சகோதரிகள் ஷோபா, ஸ்மிதா ஆகியோர் பங்கேற்றனர்.

அதுபோல, சுனந்தாவின் தந்தையான இராணுவ அதிகாரி கேணல் புஷ்கரநத் தாஸ் வந்திருந்தார். அரசியல் தலைவர்களில் முன்னாள் மத்திய அமைச்சர் மணி சங்கர் அய்யர் மட்டுமே வந்திருந்தார். எனினும், செய்தி சேகரிப்பதற்காக ஏராளமான பத்திரிகையாளர்கள் அங்கு குவிந்திருந்தனர்.

54 வயதான சசிதரூருக்கு இது மூன்றாவது திருமணம். முதலில் திலோத்தமா முகர்ஜி என்ற கொல்கத்தா கல்வியாளரை திருமணம் முடித்திருந்தார். இரண்டாவதாக கனடாவைச் சேர்ந்த கிறிஸ்டா என்பவரை திருமணம் செய்து சமீபத்தில்தான் விவாகரத்துப் பெற்றார்.

இதுபோல, 48 வயதான சுனந்தாவுக்கும் இது மூன்றாவது திருமணம் ஆகும். முதலில் காஷ்மீரைச் சேர்ந்த சஞ்சய் ரெய்னா என்பவரைத் திருமணம் செய்திருந்தார். அதன் பின்னர் கேரளாவைச் சேர்ந்த சுஜித் மேனன் என்பவரை மணமுடித்தார். ஆனால், 1997ஆம் ஆண்டு வீதி விபத்தில் சுஜித் இறந்து விட்டார். சுஜித் மூலமாக சுனந்தாவுக்கு 17 வயதில் ஒரு மகன் இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நினைத்தது மாதிரி எதுவும் நடக்கவில்லை இந்திய அணித் தலைவர் டோனி வேதனை

தம்புள்ளை, ஒக .24

இந்திய அணித் தலைவர் தமது அணி அடைந்த தோல்விகள் குறித்து மிகுந்த வேதனையோடு இருக்கிறார். நாளை புதன்கிழமை நடக்கவிருக்கும் போட்டியிலாவது நாங்கள் வெற்றிபெறவேண்டும். இல்லையேல் நாடு திரும்பவேண்டிவரும் என்று வேதனையோடு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''இலங்கையுடனான கடைசிப் போட்டியில் நாங்கள் நினைத்த மாதிரி எதுவும் சாதகமாக நடக்கவில்லை. நாங்கள் நினைத்த



மாதிரியான தொடக்கம் கிடைக்கவில்லை. பந்துவீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்படுகின்ற அளவுக்கு துடுப்பாட்டக்காரர்கள் போதுமான ஓட்டங்களை குவிக்கவில்லை.

நியூஸிலாந்துக்கு எதிரான அடுத்த போட்டி புதன்கிழமை நடக்கவிருக்கிறது. எங்களுக்கு இது அரைஇறுதிப் போட்டி மாதிரியானது. இதில் நாங்கள் நன்றாக விளையாடியாக வேண்டும். இதில் நாங்கள் வெற்றி பெறாவிட்டால், நாட்டுக்குத் திரும்ப வேண்டிவரும்.

கடந்த போட்டியில் நடந்த ஒரே நல்ல விடயம், யுவராஜ்சிங் டெங்கு காய்ச்சலில் இருந்து மீண்டு, களம் திரும்பியது. யுவராஜ்சிங் நன்றாக ஆடினார். அவரது துடுப்பாட்டம் அருமையாக இருந்தது. ஆனால் அவருக்கு மறுமுனையில் எந்த துடுப்பாட்டக்காரர்களும் ஒத்துழைப்புக் கொடுக்கவில்லை. அவர் ஆடிய விதம், நிச்சயம் அவரது நம்பிக்கையை அதிகரிக்கும்'' - என்றார்.

### சின்சினாட்டி ஓபன்:

# இறுதிச் சுற்றில் பூபதி ஜோடி

சின்சினாட்டி, ஒக.24

அமெரிக்காவில் நடைபெற்று வரும் 'சின்சினாட்டி மாஸ்டர்ஸ்' ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மகேஷ் பூபதி பெலாரஸின் மேக்ஸ் மிர்னி ஜோடி இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது. அரை இறுதியில் போலந்தின் லுகாஸ் குபோத் - ஆஸ்திரியாவின் ஆலிவர் மராக் ஜோடியை 6-3, 6-4 என்ற செற் கணக்கில் வீழ்த்தி, பூபதி ஜோடி இறுதிச் சுற்றுக்கு முன்னேறியது.

இறுதிச் சுற்றில் தரவரிசையில் இரண்டாவது இடத்தில் இருக்கும் அமெரிக்காவின் பாப் பிரையான் - மைக் பிரையான் சகோதரர்களை, இந்த ஜோடி எதிர்கொள்கிறது.

சின்சினாட்டி இறுதிச் சுற்றுக்கு பூபதி - மிர்னி ஜோடி தகுதி பெறுவது இது இரண்டாவது முறையாகும். முன்னதாக, கடந்த 2002ஆம் ஆண்டு சின்சினாட்டி ஓபன் இறுதிச் சுற்றுக்கு முன்னேறிய பூபதி ஜோடி, அச்சுற்றில் தோல்வி அடைந்தது.

# டெஸ்ட் தரவரிசையில்; சங்கக்கார 1 இந்திய வீரர் விரேந்திர ஷேவாக் 2

டுபாய், ஒக. 24

ஐ.சி.சி. வெளியிட்டுள்ள டெஸ்ட் துடுப்பாட்டக்காரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் இலங்கைக் கிரிக்கெட் அணித் தலைவர் குமார் சங்கக்கார முதலிடத்தில் உள்ளார். ஷேவாக் தொடர்ந்து 2ஆவது இடத்திலுள்ளார். 3ஆவது இடத்தில் அவுஸ்திரேலிய வீரர் மைக்கல் கிளார்க்கும் உள்ளனர்.

பந்து வீச்சாளர்கள் தரவரிசையில், பாகிஸ்தானைச் சேர்ந்த வேகப்பந்து வீச்சாளரான மொஹமட் அமீர் தனது கிரிக்கெட் வாழ்வில் முதன் முறையாக 17ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் 6 விக்கெட்டுகளை வீழ்த்தி அமீர் சிறப்பாட்டக்காரராக தெரிவானமை குறிப்பிடத்தக்கது. இதையடுத்து பந்து வீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் 14 இடங்கள் முன்னேறி 17 இடத்தைப் பிடித்துள்ளார்.

இங்கிலாந்து பந்து வீச்சாளர் ஸ்வான் இரண்டாம் இடத்துக்கு முன்னேறியுள்ளார். பாகிஸ்தானின் முகமது யூசுப், உமர் அக்மல், அஸார் அலி, இங்கிலாந்து வீரர் அலாஸ்டர் குக் ஆகியோரும் தரவரிசையில் முன்னிலை பெற்றுள்ளனர்.




# இங்கிலாந்து வீரர்களுக்கு திடீர் தடை

'டிவிட்டர்', 'பேஸ்புக்' போன்ற சமூக இணையதளங்களில் தங்களது கருத்துகளை வெளியிட இங்கிலாந்துக் கிரிக்கெட் வீரர்களுக்கு தடைவிதிக்க இங்கிலாந்து கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளது. ஸ்வான், அண்டர்ஸன், பீற்றர்ஸன், ஸ்டீவன் பின் ஆகிய இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்கள் 'டிவிட்டர்' இணையதளத்தைப் பயன்படுத்தி வருகிறார்கள்.

தங்களைப் பின்தொடரும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேருடன் அவர்கள் தங்களது கருத்துகளை பரிமாறிக்கொள்கிறார்கள். இதனால் இங்கிலாந்துக் கிரிக்கெட் சபைக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்றாலும், வீரர்களின் அறையில் நடக்கும் ரகசியங்களை வெளியிடக்கூடும் என்ற அச்சம் எழுந்திருப்பதால், இங்கிலாந்து அணிக்காக ஆடும் காலக்கட்டங்களில் மேற்கண்ட இணையத்தளத்தை பயன்படுத்த வீரர்களுக்கு தடைவிதிக்கப் படவுள்ளது.

# தென் ஆப்பரிக்க 20 ஓவர் அணியின் அணித்தலைவராக போத்தா நியமனம்

ஜோகனஸ்பேர்க், ஒக.24

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியில் 20 ஓவர் போட்டிக்கான அணித்தலைவர் பொறுப்பில் இருந்து சுமித் சில தினங்களுக்கு முன்பு விலகினார். இதையடுத்து தென்னாபிரிக்க 20 ஓவர் அணியின் புதிய அணித் தலைவராக சுழற்பந்து வீச்சாளர் ஜோகன் போத்தா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சுமித் காயமடைந்த காலக்கட்டங்களில் அணித்தலைவராகச் செயற்பட்ட அனுபவம் போத்தாவுக்குள்ளது. அதே சமயம் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் சுமித் அணித்தலைவராகத் தொடருவார்.

### இங்கிலாந்துக்கு எதிரான வெற்றி:

# பாகிஸ்தானில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு சமர்ப்பிக்கின்றார் அணித் தலைவர் சல்மான் பட்

கராச்சி, ஒக. 24

இங்கிலாந்துக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் பெற்ற வெற்றியை, துயரத்தில் வாடும் பாகிஸ்தான் மக்களுக்கு சமர்ப்பிப்பதாக அந்நாட்டு அணியின் தலைவர் சல்மான் பட் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் அந்நாட்டு அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரின் 3ஆவது போட்டியில், 4 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது.

பாகிஸ்தானில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி லட்சக்கணக்கான மக்கள் தங்கள் உறவினர்கள், உடைமைகளை இழந்து துன்புற்றுள்ளனர். இந்த வேளையில், இங்கிலாந்து அணிக்கு எதிராகப்பெற்ற வெற்றியை நாட்டு மக்களுக்காக சமர்ப்பிக்கிறோம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இப்போதைக்கு எங்களால் தர முடிந்த சிறிய மகிழ்ச்சி இதுவாகத்தான் இருக்க முடியும் - என்று சல்மான் பட் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி ஜர்தாரி, பிரதமர் யூசுப் ரஸா கிலானி ஆகியோரும் அணி வெற்றி பெற்றதற்கு தங்கள் வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

### சம்பியன்ஸ் லீக் 20 ஓவர் கிரிக்கெட்:

# தென்னாபிரிக்க ஆடுகளம் வேகப்பந்துக்கு சாதகம்

## டேவிட் ஹஸ்ஸி பேட்டி

சென்னை, ஒக.24

'சம்பியன்ஸ் லீக்' 20 ஓவர் கிரிக்கெட் போட்டி நடைபெறும் தென்னாப்பிரிக்க ஆடுகளம் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக இருக்கும் - என்று டேவிட் ஹஸ்ஸி தெரிவித்துள்ளார்.

'ஏயர்ரெல்' இரண்டாவது 'சம்பியன்ஸ் லீக்' 20 ஓவர் கிரிக்கெட் போட்டி தென்னாபிரிக்காவில் செப்ரெம்பர் 10ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை நடக்கிறது.

இதில் ஐ.பி.எல். போட்டியில் முதல் 3 இடங்களைப் பிடித்த சென்னை 'சூப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் மற்றும் வேறு நாடுகளின் உள்ளூர் அணிகளான வயம்பா (இலங்கை), விக்டோரியா (அவுஸ்திரேலியா) தெற்கு ஆஸ்திரேலியா, சென்ட்ரல் டிஸ்ட்ரிக் (நியூஸிலாந்து), கயானா (மேற்கிந்தியத் தீவுகள்), வாரியர்ஸ், லயன்ஸ் (இரண்டும் தென்னாபிரிக்கா) ஆகியவை பங்கேற்கின்றன.

இந்தப் போட்டிக்கான விக்டோரியா (அவுஸ்திரேலியா) அணியின் தலைவர் டேவிட் ஹஸ்ஸி (அவுஸ்திரேலியா) அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:-

''தென்னாபிரிக்காவில் இது கிரிக்கெட் சீசனின் ஆரம்பப் பகுதியாகும். இதனால் ஆடுகளம் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சற்றுச் சாதகமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். துடுப்பாட்டக்காரர்கள் சூழ்நிலையைச் சமாளித்து நிலைத்து நின்று விட்டால் துடுப்பெடுத்தாடுவது கடினமாக இருக்காது. இந்தப் போட்டியில் மிகச் சிறந்த 20 ஓவர் போட்டி அணிகள் கலந்துகொள்வதால் ரசிகர்களுக்கு நல்ல விருந்து காத்திருக்கிறது.

தென்னாபிரிக்காவில் போட்டி நடப்பது எங்களது விக்டோரியா அணிக்கு சாதகமாக இருக்கும் என்று நம்புகிறேன். விளையாட்டை அதிகம் விரும்பும் தென்னாபிரிக்க ரசிகர்கள் உலக கோப்பை கால் பந்து போட்டியை போல் இந்தப் போட்டிக்கும் அமோக ஆதரவு அளிப்பார்கள் என்று நம்புகிறேன்.

போட்டி அட்டவணை முறையில் இந்த முறை பெரிய மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பங்கேற்கும் அணிகள் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளன. எனவே எல்லா அணிகளும் சிறப்பாக விளையாட வேண்டிய கட்டாயம் உள்ளது. மிகவும் வலுவான அணிகள் உள்ள பிரிவில் நாங்கள் இடம்பெற்றுள்ளோம். எனவே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் நாங்கள் உள்ளோம். மற்ற அணிகளைக் கண்டு நாங்கள் பயப்படுவது போல் மற்ற அணிகளும் எங்களை கண்டு பயப்படுவார்கள் என்று எதிர் பார்க்கிறோம்'' - என்று அவர் கூறியுள்ளார்.

# இறுதிப்போட்டிக்கு முன்னேறியது இலங்கை

தம்புள்ளை, ஒக.24

முத்தரப்பு கிரிக்கெட்டில் நேற்றுமுன்தினம் நடந்த இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய அணி 103 ஓட்டங்களில் சுருண்டு படுதோல்வி அடைந்தது. இலங்கை அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

இந்தியா, இலங்கை, நியூஸிலாந்து ஆகிய அணிகள் பங்கேற்றுள்ள 'மைக்ரோமாக்ஸ்' கோப்பைக்கான முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடர் இலங்கையின் தம்புள்ளையில் உள்ள ரங்கிரி சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நடந்து வருகிறது.

நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில் இலங்கை அணி மொத்தம் 209 பந்துகளை மீதம் வைத்து வெற்றியை ருசித்து இருக்கிறது. அதிக ஓவர்கள் மீதம் உள்ள நிலையில் இந்தியாவின் மோசமான தோல்வி இதுவாகும். இதற்கு முன்பு அதிக ஓவர்கள் எஞ்சிய நிலையில் 1981 ஆம் ஆண்டு சிட்னியில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் அடைந்த தோல்வி இந்தியாவுக்கு இதைவிட மோசமான தோல்வியாக அமைந்தது. அந்த ஆட்டத்தில் இந்திய அணி 63 ஓட்டங்களில் சுருண்டதுடன், அந்த இலக்கை அவுஸ்திரேலிய 174 பந்துகள் மீதம் உள்ள நிலையில் எட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

முத்தரப்பு கிரிக்கெட்டில் இந்தியாவுக்கு எதிரான முதலாவது லீக்கில் அடைந்த தோல்விக்கும் இலங்கை அணி பதிலடி கொடுத்துவிட்டது. 5 விக்கெட்டுகள் கைப்பற்றிய திசரா பெரேரா ஆட்ட நாயகன்விருது பெற்றார். இந்த வெற்றியின் மூலம் இலங்கை அணி 'போனஸ்' புள்ளியையும் தட்டிச் சென்றது. அத்துடன் இறுதிப்போட்டிக்கும் முன்னேறியது.

இலங்கை தனது 4 லீக் ஆட்டங்களையும் ஆடி முடித்து விட்டது. இதில் இந்தியா, நியூஸிலாந்துக்கு எதிராக தலா ஒரு வெற்றியும், இந்தியாவுடன் ஒரு தோல்வியும் கண்டது. நியூஸிலாந்துக்கு எதிரான ஒரு ஆட்டம் மழையால் கைவிடப்பட்ட நிலையில் இரு அணிகளும் தலா 2 புள்ளிகளை பகிர்ந்து கொண்டன.



5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி ஆட்டநாயகன் விருது பெற்ற திசரா பெரேரா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியமைக்க சுயேச்சைகளின் ஆதரவை கோரும் ஆஸி.யின் இரு பெரும்கட்சிகள்

மெல்போர்ன், ஓக. 24

ஆஸ்திரேலியாவில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததால், கூட்டணி ஆட்சி அமைய உள்ளது. ஆஸ்திரேலியாவில் சனிக்கிழமை நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது.

150 இடங்களுக்கான தேர்தலில் ஆளும் தொழிலாளர் கட்சி, 72 இடங்களை பிடித்துள்ளது. எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கூட்டணி, 73 இடங்களை பிடித்துள்ளது. சுயேச்சைகள் நான்கு இடங்களில் வெற்றி பெற்றுள்ளனர்.

ஆட்சியைப் பிடிக்க 76 இடங்கள் தேவை. எந்தக் கட்சிக்கும் இந்த அளவுக்கு இடங்கள் கிடைக்காததால் ஆளுங்கட்சி, சுயேச்சைகளின் ஆதரவுடன் மீண்டும் ஆட்சி அமைக்க முயற்சிக்கிறது. இதேபோல எதிர்க்கட்சி கூட்டணியும், சுயேச்சைகளின் ஆதரவை நாடியுள்ளது.

ஆஸ்திரேலியாவின் முதல் பெண் பிரதமர் ஜூலியா கிலார்ட், தங்கள் கட்சி பிரமுகர்களுடன் ஞாயிற்றுக்கிழமை ஆலோசனை நடத்தினார். கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் டோனி அபோட்டும் கூட்டணித் தலைவர்களுடன் விவாதித்து வருகிறார்.

இன்னும் ஒரு சில தொகுதிகளில் வாக்கு எண்ணிக்கை முழுமையாக முடியவில்லை. வாக்குகள் முழுவதும் எண்ணி முடிக்கப்பட்டவுடன் தேர்தல் முடிவுகள் அதிகார பூர்வமாக அறிவிக்கப்படும்.

## அமெரிக்கா தாக்குதல்: 6 தீவிரவாதிகள் பலி

பெஷாவர், ஓக. 24

தீவிரவாதிகள் பதுங்கியிருக்கும் பாகிஸ்தானின் வடமேற்கு பழங்குடிகள் பகுதியில் சனிக்கிழமை அமெரிக்க ஆளில்லா விமானங்கள் நடத்திய தாக்குதலில் 6 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். தீவிரவாதிகள் வைத்திருந்த கண்ணிவெடியில் சிக்கி 5 பேர் பலியாயினர்.

தீவிரவாதிகள் பதுங்கியுள்ள குதுப் கேல் பகுதியில் ஆளில்லா விமானங்களிலிருந்து குண்டுகள் வீசப்பட்டன. ஒரு கட்டடம் மீதும் வாகனம் மீதும் குண்டுகள் விழுந்து வெடித்தன. இவற்றில் 6 தீவிரவாதிகள் அங்கேயே இறந்தனர். ரமழான் முடிந்து இப்தார் விருந்து நடக்கவிருந்த சமயத்தில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது.

இதனிடையே, முகமந்த் ஏஜென்சி பகுதியில் சாலையில் புதைத்து வைத்திருந்த கண்ணிவெடிகள் வெடித்ததில் சிக்கிய வாகனம் சிதறி அதில் பயணம் செய்த பாதுகாப்புப் படை வீரர் ஒருவரும் தலிபான் எதிர்ப்பு அமைதிக் குழுவைச் சேர்ந்த 4 பேரும் பலியாயினர். வழக்கமான ரோந்துப் பணியின் போது இவர்கள் கண்ணிவெடியில் சிக்கி உயிரிழந்தனர்.

## இந்திய நிதியை ஏற்றதில் தவறில்லை பாகிஸ்தான் பிரதமர் யூசுப் தெரிவிப்பு

லாகூர், ஓக. 24

இந்தியா அளித்த வெள்ள நிவாரண நிதியான 23.40 கோடியை ஏற்றதில் தவறில்லை என்று பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானி தெரிவித்துள்ளார்.


இந்தியா அளித்த நிதியைப் பெறாமல் இருந்திருந்தால் அது குறுகிய மனப்பான்மை கொண்ட முடிவாக இருந்திருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவிடமிருந்து நிதியைப் பெற்றுக் கொண்டதன் மூலம் சர்வதேச அரங்கில் பாகிஸ்தானுக்கு மரியாதை அதிகரித்துள்ளது. இந்தியா அளித்த நிதியைப் பெற்றிருக்கக் கூடாது என்று சொல்பவர்களும், விமர்சிப்பவர்களும் எதற்காக இந்தியாவிட மிருந்து நிதியைப் பெற்றிருக்கக்கூடாது என்பதற்கான காரணத்தைக் கூறவேண்டும் என்று யூசுப் ரஸா கிலானி வலியுறுத்தியுள்ளார்.

பாகிஸ்தானில் பெய்த பலத்த மழையால் வெள்ளம் பெருக்கெடுத்தது. இதில் இலட்சக்கணக்கான மக்கள் உடைமைகளை இழந்து பரிதவிக்கின்றனர். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காகப் பாகிஸ்தானுக்கு 23.40 கோடியை அளிக்க இந்தியா முன்வந்தது. ஆனால், இதை ஏற்பது அல்லது நிராகரிப்பது குறித்து பாகிஸ்தான் ஒருவாரமாக பதில் ஏதும் தெரிவிக்காமல் இருந்தது.

பின்னர் இந்தியாவின் நிதியை ஏற்றுக் கொள்ளவதாக அறிவித்தது. சமீபத்தில் அமெரிக்கா சென்றிருந்த பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஷா மொஹமத் குரேஷி இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

பாகிஸ்தானின் இந்த முடிவுக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இந்நிலையில், லாகூரில் தனது சொந்த இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த பிரதமர் யூசுப் ரஸா கிலானி, இந்தியாவிடமிருந்து நிதியைப் பெற்றதில் தவறில்லை என்று உறுதிபடத் தெரிவித்தார். இந்தியாவிடம் இருந்து நிதியை பெற்றது தவறு என்று கூறுபவர்கள் அதற்கான காரணத்தை தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (எ)



"எதிரிகளை அழிக்கும் ஈரானின் தூதர்" போர் விமானம்

எதிரிகளை அழிக்கும் எமன்: முதன் முறையாக ஈரான் நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட, நெடுந் தொலைவு சென்று தாக்கும், ஆளில்லா போர் விமானத்தின் சோதனை ஓட்டம் ஓர் இரகசிய இடத்தில் நடந் தது. "இது எதிரிகளை அழிக்கும் தூதர்" என ஜனாதிபதி முகமது அகமதிநிஜாத் இது குறித்து தெரிவித்துள்ளார்.

## வடகொரியா, சீனாவில் வெள்ளத்தால் ஒரு இலட்சம் பொதுமக்கள் பேரவலம்

சியோல், ஓக. 24

சீனாவையொட்டிய வடகொரிய பகுதியில் பெய்த பலத்த மழையால், கடுமையான வெள்ளம் ஏற்பட்டுள்ளது. சீனாவின் டேன்டாங் பகுதியில் பெய்த பலத்த மழையால், ஒரு இலட்சம் மக்கள் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

சீனாவையொட்டி வடகொரியாவின் ஷினுய்ஜி பகுதியில் ஆற்றில் பெருக்கெடுத்த வெள்ளம், ஊருக்குள் புகுந்துள்ளது. இதையொட்டி, 5 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

விளைநிலங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன; தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு நடவடிக்கையில் ஈடுபடும்படி வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் இல், இராணுவத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் வடகொரியாவுக்கு, பல்வேறு உலக நாடுகள் பொருளாதாரத் தடை விதித்துள்ளன. இதனால், தற்போது வடகொரியாவிடம் போதுமான உணவு கிடையாது. எனவே, உணவுத் தட்டுப்பாட்டால் மக்கள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.




## சுற்றுலாப் பயணிகளுடன் பஸ் பிலிப்பைன்ஸில் சிறைபிடிப்பு

மணிலா, ஓக. 24

பிலிப்பைன்ஸில் வெளிநாட்டுப் பயணிகளுடன் சுற்றுலா பஸ் கடத்தப்பட்ட சம்பவம் பிலிப்பைன்ஸில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இங்கு மத்திய மணிலா பகுதியில் சென்றுகொண்டிருந்த பஸ்ஸை ஒருவர் துப்பாக்கி முனையில் மடக்கினார்.

பின்னர் அவர் சொல்லும் திசைக்கு பஸ் கொண்டு செல்லப்பட்டது. பஸ்ஸில் இருந்த 26 பேரில் 21 பேர் சீன நகரமான ஹாங்காங் பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர். இந்தப் பயணிகளை விடுவிக்க பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர்.

இந்த பஸ்ஸை கடத்தியவர் மெண்டோஷா எனத் தெரிய வந்துள்ளது. இவர் பொலிஸ் இன்ஸ்பெக்டராக இருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டவர். தன் மீது தேவையற்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. தேவையற்ற வழக்குகளை வாபஸ் வாங்கிட வேண்டும் என்பது இவரது கோரிக்கை.

பஸ்ஸில் இருந்த 3 குழந்தைகள் உட்பட 10 பேர் விடுவிக்கப்பட்டனர் எனக் கூறப்படுகிறது. ஏனையோர் பஸ்ஸுக்குள் என்ன நடக்குமோ என்பது அறியாமல் பீதியில் உறைந்து போய் இருக்கின்றனர்.

இந்த விடயம் சீனாவுக்கு அறியப்பட்டதும். அங்கிருந்து தூதரக அதிகாரிகள் விவரம் கேட்டு வருகின்றனர். பயணிகளைப் பத்திரமாக மீட்க உரிய நடவடிக்கை எடுக்கவும் சீன அதிகாரிகள் கடும் முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

கடத்தல்காரர் பஸ்ஸின் வெளிப்புறத்தில் இவர்கள் சாவு இன்று 3 மணிக்கு நடக்கும் என அறிவித்தல் எழுதி ஒட்டியுள்ளார். பொலிஸ் படையினர் பஸ்ஸைச் சுற்றிலும் பலத்த ஆயுதங்களுடன் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். பயணிகளைப் பத்திரமாக மீட்பது குறித்து பொலிஸ் உயர் அதிகாரிகள் பகீரத முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

## ஆபத்துக் காலங்களில் தலைமறைவாகும் தலைவர்கள் பட்டியலில் சர்தாரிக்கு முதலிடம்

வாஷிங்டன், ஓக. 23

ஆபத்தான காலங்களில் நாட்டு மக்களுக்கு உதவாமல் தலைமறைவாகும் தலைவர்கள் பட்டியலில் பாகிஸ்தான் ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரி முதலிடம் பிடித்துள்ளார். 'வெளியுறவுக் கொள்கை' என்ற வார இதழ் வெளியிட்டுள்ள இந்தப் பட்டியலில் மாஸ்கோ மேயர் உட்பட மற்றும் பலரும் இடம்பெற்றுள்ளனர்.

இந்தப் பட்டியலில், மாஸ்கோ நகரின் மேயரான யூரி லுஸ்கோவும் இடம்பெற்றுள்ளார். மாஸ்கோ நகரில் காட்டுத் தீ பரவியிருந்த நேரத்தில், மேயர் ஆல்ப்ஸ் மலைக்கு உடற்பயிற்சி சிகிச்சைக்குச் சென்றிருந்தார்.

அது போல, எண்ணெய்க் கசிவு ஏற்பட்ட சமயத்தில் பிரிட்டிஷ் பெற்றோலியம் நிறுவனத்தின் தலைவர் டோனி ஹேவார்ட் படகுப்போட்டியில் பங்கேற்கச் சென்றிருந்தார். பிரிட்டிஷ் ஏர்வேஸ் ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தபோது, பிரிட்டனின் முக்கிய தொழிற் சங்கத் தலைவர் டோனி வூட்லி விலா தீவுக்குச் சென்றிருந்தார் எனவும் அந்த இதழில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

கடந்த 80 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குப் பாகிஸ்தானில் பலத்த மழை பெய்து, இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், பாகிஸ்தானில் அரசியல் கலவரங்களில் நூற்றுக்கணக்கானோர் பலியாகி வருகின்றனர். இந்நிலையில், பாகிஸ்தான் ஜனாதிபதி ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து வருகிறார்.

அமெரிக்க அதிகாரிகள் இந்த சுற்றுப் பயணத்தை இரத்துச் செய்யும்படி கேட்டுக்கொண்ட போதிலும், அவர் இதை மேற்கொண்டு வருகிறார். இந்தப் பயணத்தின் போது, அவர் தங்கும் விடுதியின் தினசரி வாடகை மட்டும் சுமார் 5 இலட்சத்திற்கு மேலாகும்.

இதனிடையே, இந்தப் பயணம் வெறும் விளையாட்டல்ல என்று பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பிரிட்டனில் சமீபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் சர்தாரி பேசியபோது, அவரின் சுற்றுப் பயணத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து பாகிஸ்தானைச் சேர்ந்த ஒருவர் சர்தாரி மீது சப்பாத்துகளை வீசியமை குறிப்பிடத்தக்கது.

ஓகஸ்ட் 18ஆம் திகதி பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்பதற்காக சர்தாரி ரஷ்யாவுக்குச் சென்றார். அங்கு, ரஷ்யா, ஆப்கானிஸ்தான், தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளின் ஜனாதிபதிகளுடன் அவர் பேச்சுகள் நடத் தினார்.



சவூதி அரேபியாவிலுள்ள மக்காவில் ஜோர்தான் அரசர் [illegible] 11ஆவது நாள் ரமழான் வழிபாட்டில் பங்கேற்கிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களின் இடமாற்றங்களை ரத்துச் செய்க; இல்லையேல் உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

## இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் ஸ்ராலின் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஓக. 24

தேசிய ஆசிரியர் இடமாற்றுக் கொள்கைக்கு அமைய வடக்கு மாகாணத்தின் ஆசிரியர்களின் இடமாற்றங்கள் இடம்பெறவில்லை. எனவே இதனால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் இடமாற்றங்களை இரத்துச் செய்யாதுவிடின் உயர்நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்வோம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்ராலின்.

யாழ். மாவட்டத்தில் இருந்து வன்னிப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக அண்மையில் ஆரியகுளம் புதிய உயர் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது :-

வன்னிப்பெரு நிலப்பரப்பில் தொடர்ந்து கடமையாற்றிய ஆசிரியர்களை வெளி மாவட்டங்களுக்கு விடுவிப்பதும் யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களில் இருந்து வன்னிப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதும் ஏற்றுக் கொள்ளக்கூடியதே.

வன்னியில் கல்விகற்கும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்படக்கூடாது. இந்த விடயத்தில் இலங்கை ஆசிரியர் சங்கம் தனது பூரண ஒத்துழைப்பை வழங்கும். தற்போது வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள இடமாற்றங்கள் தேசிய ஆசிரியர் இடமாற்றுக் கொள்கைக்கு அமைய முன்னெடுக்கப்படவில்லை.

ஆசிரியர்களின் இடமாற்றங்கள் இடமாற்றச் சபைக்கு ஊடாகவே இடம்பெற வேண்டும். ஆனால் தற்போது அவ்வாறு இடம்பெறவில்லை. இந்த நிலைப்பாட்டை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இந்த இடமாற்ற அறிவிப்பின் மூலம் வவுனியாவில் இருந்து 162 ஆசிரியர்களும், யாழ்ப்பாணத்தில் இருந்து 358 ஆசிரியர்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இடமாற்றங்கள் தேசிய ஆசிரியர் இடமாற்றுக் கொள்கைக்கு அமைய இடம்பெறவில்லை என்பதை கல்வி அமைச்சின் 2009 /20 சுற்றறிக்கை தெளிவாகக் கூறுகின்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கல்வி நிர்வாகத்தில் உள்ள உயர் அதிகாரிகள் 60 வயதுக்கு மேற்பட்ட நிலையில் ஓய்வுபெறாத நிலையில் சேவையாற்றுகின்றனர். இவர்கள் தமது பதவியைப் பாதுகாக்கும் வகையில்தான் கருமம் ஆற்றுகின்றனர். சுற்றறிக்கைக்கு அமைய செயற்படவில்லை சுயநலத்துடன் செயற்படுகின்றனர். ஆசிரியர்களை மதித்து அவர்களின் வசதிகளைக் கருத்தில் கொண்டு கருமம் ஆற்றுவது இல்லை. இதனைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது.

கல்வி நிர்வாக சேவையில் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு உரிய பதவி நிலைகள், பொறுப்புக்கள் வழங்கப்படவில்லை. அதிபர் சேவையில் பதவி உயர்வு பெற்றவர்களுக்குப் பொருத்தமான நிலையில் பாடசாலைகள் வழங்கப்படவில்லை. இதுகுறித்து வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர், மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் கூறும் காரணங்களுக்கு இடையே நிறையவேறுபாடுகள் காணப்படுகின்றன.

ஆசிரியர் இடமாற்றத்தினால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு உரிய நியமனம் கிடைக்காவிடில் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்குதல் செய்து நீதி கோருவோம் - என்றார். (ஒ-6-11)

# பொருள்களின் விலை நிர்ணய நடைமுறைகளை வர்த்தகர்கள் சரியாகக் கடைப்பிடிக்க வேண்டும்

## நேற்றைய சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஓக.24

பொருள்களின் விலை நிர்ணயம் தொடர்பான நடைமுறைகளைச் சரியாகக் கடைப்பிடிக்குமாறு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வர்த்தகர்களை அறிவுறுத்தினார்.

கொழும்பில் இருந்து யாழ்.மாவட்டத்துக்கு வருகை தந்த நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளினால் அதிக விலையில் பொருள்களை விற்ற, விற்பனை பட்டியல் வைக்காத வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து -

அது தொடர்பான கலந்துரையாடல்கள் ஒன்று யாழ். மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் அரசாங்க அதிபர், அமைச்சர், மாநகரமுதல்வர், முன்னாள் அரசாங்க அதிபர் கே.கணேஷ், மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட செயலக உத்தியோத்தர்கள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கொழும்பில் இருந்து வந்த அதிகாரிகள் தம்முடன் பண்பாடற்ற முறையில் நடந்து கொண்டதாக வர்த்தகர்கள் கலந்துரையாடலின் போது தெரிவித்தனர். மேலும் இது தொடர்பான நடைமுறைகள் முன்னர் யாழ்ப்பாணத்தில் இல்லாத காரணத்தினால் தமக்கு இந்த நடைமுறைகள் தொடர்பாக தெரியாதென்றும் தெரிவித்தனர். இதனால் தமக்கு இது தொடர்பாக விழிப்பூட்டும் கருத்தரங்குகளை நடத்துமாறும் கேட்டுக்கொண்டனர்.

இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக அரசாங்க அதிபர் மற்றும் அமைச்சர் ஆகியோர் உறுதியளித்தனர். மேலும் வர்த்தகர்கள் மக்களின் நன்மை கருதி பொருள்களை நியாய விலையில் விற்குமாறும் விலைப் பட்டியல்களை காட்சிப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டனர். (ஒ-319)

# நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் மீது ஒழுக்காற்று நடவடிக்கைக்கு தீர்மானம்

கொழும்பு, ஓக. 24

களனிப் பகுதியில் சமுர்த்தி அதிகாரி ஒருவரை மரத்தில் கட்டிய சம்பவம் தொடர்பில் முன்னாள் பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவிடம் விசாரணைகளை மேற்கொள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுக்காற்றுக் குழு தீர்மானித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் நியமிக்கப்பட்ட ஒழுக்காற்றுக் குழு நேற்றுமுன்தினம் 2ஆவது நாளாகக் கூடியது.

இதன்போது சம்பவத்துடன் தொடர்புடைய முன்னாள் பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவிடம் விசாரணைகளை மேற்கொள் ளும் பொருட்டு, எதிர்வரும் வாரம் அவரை அழைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அந்தக் குழுவின் செயலாளர் மஹிந்த சமரசேகர தெரிவித்துள்ளார். (ஒ-சி)

# ஜோர்தானுக்கு பணிப்பெண்களை அனுப்புவது தற்காலிகமாக நிறுத்தம்

கொழும்பு, ஓக. 24

ஜோர்தானுக்கு வீட்டுப் பணிப்பெண்களை அனுப்பும் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

ஜோர்தானில் இலங்கைப் பணிப்பெண்களுக்குக் குறைந்தளவு சம்பளம் வழங்கப்படுவதனாலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார்.

எதிர்காலத்தில் குறைந்த பட்ச சம்பளமாக 200 அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டால் மாத்திரமே ஜோர்தானுக்குப் பணிப்பெண்களை அனுப்புவதாகத் தீர்மானிக் கப்பட்டுள்ளது என அவர் மேலும் கூறினார்.

வீட்டுப் பணிப்பெண்களின் சம்பளத்தை 200 அமெரிக்க டொலர்களாக நிர்ணயிப் பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஜோர்தான் முகவர் நிலையங்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டபோதிலும் இதுவரை அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லையெனப் பணியகத் தலைவர் தெரிவித்தார்.

இதனையடுத்து ஜோர்தானுக்கு வீட்டுப் பணிப்பெண்களை அனுப்புவதைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தீர்மானித்துள்ளது. (ஒ-சி)

# புத்தளத்தில் திடீர் மழை; உப்பு உற்பத்தி பாதிப்பு!

புத்தளம், ஓக.24

புத்தளம் நகரில் பெய்த திடீர் மழை காரணமாக இங்குள்ள தனியார் உப்பளங்களில் அறுவடைக்குத் தயாரான நிலையில் காணப்பட்ட பல இலட்ச ரூபா பெறுமதியான உப்பு, நீரில் கரைந்துள்ளதாக உற்பத்தியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

புத்தளம் நகரில் சுமார் 350 இற்கு மேற்பட்ட தனியார் உப்பு உற்பத்தித் தளங்கள் உள்ளன. இதில் பெரும் போக உற்பத்தி இடம் பெற்றுக் கொண்டிருந்தது.

முதலாவது அறுவடை முடிவடைந்து இரண்டாவது அறுவடைக்காக தளங்களில் த்ண்ணீர் நிரப்பப்பட்டு உப்பும் விளைந்துக் கொண்டிருந்தது. இதற்கிடையில் கடந்த சனியன்று பெய்த திடீர் மழை காரணமாக உற்பத்தி பாதிக்கப்பட்டதுடன் தளங்களில் காணப்பட்ட உப்பும் சேதமடைந்துள்ளது.

பல இலட்சம் ரூபா பெறுமதியான உப்பு இவ்வாறு சேதமடைந்துள்ளதாக உற்பத்தியா ளர்கள் கவலை தெரிவித்தனர்.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச் சந்தை - ஆவணி 23, 2010

**பங்குச் சந்தை சுட்டிகள்**

அனைத்துப் பங்கு (ASPI) 5,563.99↑

மிலங்கா (MPI) 5,860.66↓

**உரிமைமுதல் தகவல்கள்**

வியாபாரப்புரள்வு(Rs.) 1,457.9 Mn

பங்குகளின் அளவு (No.) 38.2 Mn

வியாபாரம் (No.) 13,794

சந்தைமுதல் (Mkt.Cap) 1,828.2Bn

**விலை அசைவுகளின் அடிப்படையில்**

| அதிகரிப்பு (Top 5 gainers ) | விலை Rs |
|---|---|
| புளூ டைமன் | 3.30 |
| எஸ் எம் பி லீசிங் | 2.20 |
| கொழும்பு பாமசி | 523.40 |
| பைறா f்பாம் | 110.00 |
| சிங்கலங்கா | 198.00 |

| குறைவு (Top5 losers ) | விலை Rs |
|---|---|
| ஜே எல் மொறிஷன் | 1426.50 |
| சென்றல் இன்டஸ்ரிஸ் | 307.20 |
| சிலோன் ரி சேவிசஸ் | 698.20 |
| என்வயமென்ரல் றிசொசஸ் W | 51.10 |
| என்வயமென்ரல் றிசொசஸ் W | 53.60 |

*மேலதிக தகவல்கள்* w.w.w.cse.lk

## அரசமைப்புத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சந்திப்பில் அரசமைப்புத் திருத்தம் தொடர்பான சில புதிய யோசனைகளை ஜனாதிபதி முன்வைத்தார். அவர் ஏற்கனவே எமக்கு வழங்கியிருந்த யோசனைகள் அல்ல அவை.

ஜனாதிபதி ஏற்கனவே எமக்கு வழங்கிய யோசனைகளை நாம் கட்சியின் செயற்குழுவிடம் சமர்ப்பித்து அந்த யோசனைகள் செயற்குழுவால் அங்கீகரிக்கப்பட்டன.

ஆனால், இப்போது முன்பு எமக்கு வழங்கிய யோசனைகளுக்கு முரணான சில யோசனைகளை ஜனாதிபதி முன்வைத்தார். அவற்றை எழுத்துமூலம் தருமாறு நாம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தோம். அவர் ஏற்றுக்கொண்டு விரைவில் எழுத்துமூலம் அவற்றைத் தருவதாக உறுதியளித்தார்.

அவ்வாறு யோசனைகள் எம்மிடம் எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட்டதும் நாம் அவற்றை செயற்குழுவுக்கு சமர்ப்பிப்போம்; ஆராய்ந்து முடிவு செய்வோம் - என்றார். (அ-சி)

## பஸில் தலைமையிலான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துங்க ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர்.

இதேவேளை, இந்திய அரசின் விசேட பிரதிநிதியின் இலங்கை விஜயம் தொடர்பாக அரசுக்கு உத்தியோகபூர்வமாக இதுவரை அறிவிக்கப்படவில்லை என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும்போது தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசேட செய்தி ஒன்றை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தெரிவிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு- கிழக்குப் பிரச்சினை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டை அறிந்துகொள்ளுதல் மற்றும் இலங்கையின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசமைப்புத் திருத்தம், கச்சதீவு விவகாரம், மீனவர் பிரச்சினை போன்ற முக்கிய விடயங்கள் குறித்தும் இந்த விஜயத்தின் போது கலந்துரையாடப் படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைக்கு நிதியுதவியாக இந்தியா 150 கோடி டொலர்களை வழங்கியுள்ளது. இந்தியா செல்லும் தூதுக்குழு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உட்பட அந் நாட்டுத் தலைவர்களையும் சிரேஷ்ட அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தும்.

அத்துடன் யுத்தத்துக்குப் பின்னர் மீள்குடியமர்த்தல் தொடர்பாக ஏற்பட்டுள்ள முன்னேற்றம், மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் குறித்தும் இந்திய அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும்.

இந்திய விசேட பிரதிநிதி இலங்கை வருவதை அரசு வரவேற்கின்றது. ஆனால் அது குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்னும் எமக்குக் கிடைக்கவில்லை.

- இவ்வாறு அமைச்சர் சொன்னார். (அ-சி)

## முஸ்லிம்களின் பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தவை வருமாறு:-

முஸ்லிம்களின் பிரச்சினைகள் பற்றி எவரும் பேசுவதில்லை. அவர்களின் பிரச்சினைகளில் எவரும் கவனம் செலுத்துவதில்லை. முஸ்லிம்கள் சுமார் 20 வருடங்களாக அதிக பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

அவர்களின் வாக்குரிமை பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளது. வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் இழுபறியில் உள்ளது. அவர்களின் காணி விடயம் பெரும் சிக்கலாகவுள்ளது.

இந்தப் பிரச்சினைகள் [illegible] கப்படாததால் இவை இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளன. எந்த அரசியல்வாதியும் இவற்றில் தீவிர கவனம் செலுத்துவதில்லை.

தற்போது ஜனாதிபதியால் அமைக்கப்பட்டுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவால் முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. முஸ்லிம்களின் பிரச்சினைகளை ஆராயவெனத் தனியான ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டால் மாத்திரமே இப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெறமுடியும்.

ஆகவேதான், உடனடியாக இந்த ஆணைக்குழுவை நியமிக்குமாறு நாம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

முஸ்லிம் அரசியல்வாதிகள், உள் [illegible] ஒன்றிணைந்து இவ் விடயத்தில் ஜனாதிபதிக்கு அழுத்தங் கொடுகக வேண்டும் - என்றார். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா, பூசகர் காமினி ஆனந்த மற்றும் படை அதிகாரிகள் சகிதம் இராமாவில் முகாமுக்கு வருகைதருவதையும், அரிசிப் பொதிகளுடன் நிற்பதையும், கூடியிருந்த முகாம் மக்களையும் படங்களில் காணலாம். (படங்கள் : சாவகச்சேரி செய்தியாளர்)

# குடும்பத்தினருடன் மேர்வின் சில்வா நேற்றிரவு யாழ்ப்பாணம் வருகை

## வரும் வழியில் இராமாவில் மக்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கினார்

கொடிகாமம், ஒக.24

நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா தமது குடும்பத்தினர் மற்றும் கண்டி கால் தன்னவில ஸ்ரீ மகாபத்திர காளி ஆலய பூசகர் நயம்பதி ஆராச்சிலாகே காமினி ஆனந்த அடிகளார் உள்ளிட்ட குழுவினர் நேற்று மாலை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தனர்.

வரும் வழியில் கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலைய மக்களைச் சந்தித்து அவர்களுக்கு அரிசி, பால்மா மற்றும் உப உணவுப் பொருள்களையும் வழங்கினார். இந்தப் பொருள்கள் ரூபா 10 லட்சம் பெறுமதியானவை எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமாலை நடைபெற்ற இந்த நிகழ்வில் 52 ஆவது படைப்பிரிவு கட்டளை அதிகாரி விஜித சுபசிங்க, உசன் கந்த சுவாமி கோயில் பிரதமகுரு, சாவகச்சேரி பிரதேச சபைச் செயலர் மற்றும் படை அதிகாரிகளும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா உரையாற்றினார். அவரது பேச்சு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

தொடர்ந்து மேர்வின் குழுவினர் நேற்று மாலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டனர். அவர்கள் நேற்றிரவு யாழ். நகரில் தங்கியிருந்தனர். (ஒ-131-10)

# வடக்கில் பாடசாலைகள் படிப்படியாகத் திறப்பு

யுத்த சூழலின்போது மூடப்பட்ட வட பகுதிப் பாடசாலைகள் படிப்படியாகத் திறந்து வைக்கப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா வடக்குப் பகுதியில் மக்கள் மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளிலுள்ள ஆறு பாடசாலைகள் அடுத்த தவணையின்போது மீளத் திறக்கப்படவுள்ளன.

வவுனியா வடக்கு வலயத்தில் மக்கள் இடம்பெயர்ந்ததன் காரணமாக 73 பாடசாலைகள் மூடப்பட்டன என வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். இதில் இதுவரை 40 பாடசாலைகள் மீளத் திறக்கப்பட்டுள்ளன.

தற்போது மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுவரும் சேமமடு-படிவம் இரண்டு, கொந்தகாரன்குளம், பன்றிக்கெய்த குளம், மரையடித்த குளம், கோழியா குளம், மாதர் பணிக்கர் மகிழங்குளம் ஆகிய கிராமங்களிலுள்ள பாடசாலைகள் மூன்றாம் தவணைக் கல்வி நடவடிக்கையின்போது திறக்கப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-சி)

# திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக.24

நல்லூர், பருத்தித்துறை வீதியில் இன்று செவ்வாய்க்கிழமை 'கலாஞ்சலி சாறி' விற்பனை நிலையத்தை யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார் வைபவரீதியாகத் திறந்து வைப்பார். (ஒ)

# செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக.24

யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தால் நடத்தப்பட்ட 'English as a Life Skill' பத்துநாள் செயலமர்வில் பங்குபற்றிய ஆசிரியர்களுக்கான இருநாள் செயலமர்வு நாளைமறுதினம் 26ஆம் திகதியும் மறுநாள் 27 ஆம் திகதியும் யாழ்.வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ-10)

# முகாம்களில் உள்ள 50 ஆயிரம் மக்களையும் விரைவில் மீளக்குடியேற்ற குருமார் மஹிந்தவிடம் நேரில் வலியுறுத்து

கொழும்பு, ஒக. 24

முகாம்களில் தங்கியிருக்கும் சுமார் ஐம்பதாயிரம் மக்களையும் அவர்களின் சொந்த இடங்களில் விரைவில் குடியேற்றுவது குறித்தும், ஏற்கெனவே மீள்குடியேற்றப்பட்டவர்களுக்கு தேவையான வாழ்வாதாரங்களை வழங்குவது குறித்தும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கத்தோலிக்க ஆயர்களின் குழு வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நடக்கும் கத்தோலிக்க ஆயர்களின் ஆண்டுக் கூட்டத்திற்காக நாடு முழுவதிலிருந்தும் வந்திருக்கும் கத்தோலிக்க ஆயர்கள், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை குழுவாகச் சென்று சந்தித்தனர்.

அந்தச் சந்திப்பன்போது, போரினால் இடம்பெயர்ந்த சுமார் இரண்டு லட்சத்துக்கும் அதிகமானவர்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்றிய அரசின் நடவடிக்கைக்கு கத்தோலிக்க ஆயர்கள் சார்பில் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன என இந்தக் குழுவில் சென்றிருந்த திருகோணமலை, மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தெரிவித்தார்.

அதேசமயம் மீள்குடியேற்றப்பட்டவர்களின் விவசாயம், மீன்படி போன்ற வாழ்வாதார தேவைகள், குடியிருப்பதற்கான வீடுகள் போன்றவற்றை உருவாக்க வேண்டிய அவசியம் குறித்து தாங்கள் ஜனாதிபதியிடமும் அவருடன் இருந்த பல்வேறு அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் குழுவிடம் வலியுறுத்தியதாகவும் அவர் கூறினார்.

மேலும் மீள்குடியேற்றம் நடந்த பகுதிகளில் வசிக்கும் பள்ளி மாணவ மாணவிகளின் கல்வித்தேவைகள், ஆசிரியர்களின் பணியிடத்தேவைகள் தொடர்பில் அரசின் உதவி உடனடியாக தேவைப்படுவதை தாங்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியதாகவும் அவர் கூறினார்.

மேலும் ஆண்டுக்கணக்கில் சிறையில் இருக்கும் அரசியல் கைதிகளில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படாமல் இருப்பவர்களை விரைவில் விடுவிக்க வேண்டும் என்று தாங்கள் கேட்டுக்கொண்டதாகவும் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தெரிவித்தார். (அ-சி)

# பஸில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் இக்கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு வருகைதரும் பஸில் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் மாவட்டத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளைப் பார்வையிடுவதுடன் இங்கு இன்னும் மேற்கொள்ளப்பட விருக்கும் அபிவிருத்தி சம்பந்தமாகவும் கலந்துரையாடவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-319)

# அகதிகளின் அடுத்த இலக்கு நியூஸிலாந்தாக இருக்கலாம்

## எதிர்வுகூறுகிறார் அந்நாட்டுப் பிரதமர்

கொழும்பு, ஒக. 24

இலங்கை அகதிகளுடனான அடுத்த கப்பல் தமது நாட்டை நோக்கி வரலாம் என நியூஸிலாந்து தெரிவித்துள்ளது.

அகதிகள் தற்போது தமது நாட்டை இலக்கு வைத்துள்ளமை தொடர்பான தகவல்கள் தமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன என அந்நாட்டு பிரதமர் ஜோன் கீ தெரிவித்துள்ளார்.

நியூஸிலாந்து ஊடகமொன்றிற்கு அளித்த செவ்வியின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சுமார் 490 இலங்கை அகதிகளுடன் சன் சீ என்ற கப்பல் கனடாவை அடைந்துள்ள நிலையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அத்துடன், அகதிகளுடனான பொருள்களை ஏற்றிவரும் அடுத்த கப்பல் சர்வதேச கடற்பரப்பினூடாக தமது நாட்டை அடையலாம் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பட்டுள்ளார்.

மேலும், இதுவரை காலமும் ஆஸ்திரேலியா மற்றும் கனடாவை நோக்கியே அதிகளவான அகதிகள் சென்றுள்ளனர் எனத் தெரிவித்த நியூஸிலாந்துப் பிரதமர், அடுத்த அகதிகள் கப்பல் தமது நாட்டை இலக்கு வைப்பதாகவும் கூறியுள்ளார். (ஒ-சி)

# மட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் பிரதமர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து, இந்து ஆலயங்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றை பேணுவதற்கும் வேண்டிய உதவிகளைச் செய்வதாக கூறியிருந்தார். ஆனால் தற்போது அவரின் கருத்துக்கு எதிர்மறையாக மட்டக்களப்பில் வருடாவருடம் திருவிழா நடைபெறும் ஆலயத்தில் அத்திருதிழா நடைபெறாமல் தடைசெய்வதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறான செயற்பாடானது இந்துக்களின் மனதைப் புண்படுத்தும் நடவடிக்கையாகும். இவற்றை புரிந்துகொண்டு குறித்த ஆலயத்தில் வழமைபோல் திருவிழா நடைபெற சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-சி)

# சிகிரியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறம் மாறுபடுகின்றமை தொடர்பில் தனக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு கலாசார அமைச்சின் அதிகாரிகளிடம் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார். (ஒ-சி)

# வடமராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திறப்பு விழாவின்போது இன்னும் ஒருமாத காலத்தினுள் வடமராட்சி கிழக்கில் மீள்குடியேற்றம் செய்யப்படும் என்று கூறியிருந்தது தெரிந்ததே. (ஒ-319)

# ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதம் நாடாளுமன்ற உறுப்பினரான பாலித்த தெவரப்பெரும கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் 25 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த தெவரப்பெரும விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த நாடாளுமன்ற அமர்வுகள் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் அவர் தன்னை விடுவிக்குமாறு கோரி சிறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-சி)


Kids Programming

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில்-பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான கணினிப் பயிற்சி நெறிகள்

Level 1-3

Course Fees

Level 1 → 1750/=

Level 2 → 2250/=

Level 3 → 3250/=

புதியபிரிவுகள் ஆரம்பம் 25, 28.08.2010

Softview Computer College

43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna. T.P: 021 2225170



தேவை

யாழ். நகரில் இயங்கும் கடை ஒன்றுக்கு Accounts தெரிந்த பெண்பிள்ளை தேவை.

தொடர்பு :- 0773604101



வாடகைக்கு

வி.எஸ். மஹால்

320, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் மாடி வீடுடன் கூடிய இரண்டு கடைகளும் வாடகைக்கு உண்டு.

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம் :-

021 222 5952

077 5320589

071 1773617


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org